ப்பு : செப்டம்பர், 2011
: ஆசிரியருக்கு

: RAJAMADHANGI
: Indira Soundarrajan
n : September, 2011
: Book Print 11.6
f Pages : 192 Pages

: 85/-

நிலையம்
ார்ட்மெண்ட்ஸ்,
ப்பிரகாசம் சாலை,
ர், சென்னை - 600 017.
24342899, 24327696
@thirumagalnilayam.com

: RVK DESIGNERS,
Chennai - 2.
Mobile: 9710329866

மஞ்சு ஆப்செட்

ராஜமாதங்கி

1

உலகில் உள்ள நகரங்களில் எந்த ஒரு நகரத்துக்கும் இல்லாத சிறப்பு மதுரை என்று இன்று நம்மால் அழைக்கப் படும் ஆலவாய் நகருக்கு உண்டு. ஆம்.. மற்ற நகரங்கள் எல்லாம் காலத்தால் உருவானவை. முதலில் சிற்றூராக இருந்து, பின் பேரூர் ஆகி அதன் பின் நகரமானவை.

ஆனால், மதுரை நகரம் எடுத்த எடுப்பிலேயே நான்கு மாட வீதிகள், ஆடி வீதிகள், சித்திரை வீதிகள் என்று தாமரை மலரின் இதழ் அடுக்கு போல திட்ட மிட்டு உருவாக்கப்பட்ட ஒரு நகரமாகும்.

அது மட்டுமல்ல.. இந்த நகரை முதலில் உருவாக் கியவன் இந்திரன். அவனே மதுரை மீனாட்சி சுந்தரேஸ் வரர் ஆலயத்தை வடிவமைத்தவனும்கூட.. அவன் உருவாக்கினான். இறைவனாகிய ஈசனும் மகிழ்ந்து தன் சிரசில் சடைக்குள் இருந்து மதுரமாகிய அமுதத் துளிகளை எடுத்து நகரைப் புனிதப்படுத்தினான். மதுரத் துளிகள் பட்டு புனிதமடைந்த மண் என்பதால் மதுரை என்று ஆயிற்று!

மதுரை வானம் எங்கும் மேகக் கொட்டாரம்! பருவச் சூழ்நிலை மிக இதமாக இருந்தது. அது சகுந்தலா வரையில் ஒரு ஆச்சரியமான ஒன்றாகவும் இருந்தது.

சகுந்தலாவுக்கு ஒரு அத்தை இருக்கிறாள். பெயர் பாக்கியம். பெயரில் மட்டும்தான் அவள் பாக்கியசாலி. மற்றபடி திருமணமாகி மூன்றாம் மாதமே கணவனை ஒரு விபத்தில் பறிகொடுத்தவள். பிள்ளை குட்டிகளும் கிடையாது! காலம் அவளை கிட்டத்தட்ட அநாதை ஆக்கி விட்டது. நல்லவேளையாக பாக்கியத்துக்கு கைமணம் என்று ஒன்று இருந்தது. அதனால் அவள் தயாரித்த சாம்பார் பொடி, ரசப்பொடிக்கு ஒரு சின்ன மார்க்கெட் மதுரை அளவில் இருப்பதால், அது அவள் வரையில் சோறு போட்டுக் கொண்டிருக்கிறது.

எதற்காக பிறந்திருக்கிறோம் என்பதே தெரிந்திராத தெருநாய்களில் இருந்து சாக்கடை ஓரமாக எப்படியோ தப்பிப் பிழைத்து, நிமிண்டலாய் வளர்ந்து நிற்கும் பலவித மான மரம் செடி கொடிகளுக்கெல்லாம் படியளக்கும் அந்த பரமன்... பாக்கியத்தை மட்டும் விட்டு விடுவானா என்ன?

இந்த பாக்கியத்திடம்தான் மதுரையைப் பற்றி கேட்க வேண்டும். ஏன் என்றால், பிறந்தது முதல் எழுபது வயதாகி விட்ட இந்த நாள் வரையில் ஒருநாள்கூட மதுரையை விட்டு இவள் வெளியே சென்றதேயில்லை. அதேசமயம் மதுரைக்குள் இவள் சுற்றிவராத இடங்களும் இல்லை. அப்படிப்பட்ட பாக்கியம் மோடம் போட்டிருக்கும் மதுரை வானத்தை பார்த்துவிட்டு கொஞ்சம் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

''இது மாசி மாதம்.. இந்த மாசத்துல மதுரைவானம் கழுவிவிட்ட நீலக்கல் தரை மாதிரி பளிச்சின்னுதான் இருக்கும்.

ஆனா, இப்ப என்னடான்னா மேகம் மூடிக்கிடக்கு. எனக்கு ஒண்ணுமே புரியல. இந்த மாசம் மழை பேஞ்சா

மானாவாரி பயிருக்கெல்லாம் நல்லதுதான். ஆனா மாம்பழ மும், அப்புறமா வரப்போற நவாப் பழமும் அடிபட்டுல்ல போகும்?

சித்திரை வைகாசியில் மாம்பழம் சாப்பிடாத குஞ்சு குளுவானுங்களுக்கு, பொறவு எங்க இருந்து இரும்புச்சத்து கிடைக்கும்?

ஹூம்.. இந்த கோளாறு பிடிச்ச காலம் இன்னும் எப்படி எல்லாம் மாறப் போவுதோ தெரியலியே'' என்று சடைத்துக் கொண்டாள்.

அதை காதில் வாங்கிக் கொண்டே தெருவில் இறங் கினாள் சகுந்தலா!

இனி சகுந்தலாவை பற்றி கொஞ்சம் விரிவாக பார்த்து விடுவோம்?

சகுந்தலாவுக்கு முப்பது வயதாகிறது. ப்ளஸ் டூ வரை தான் படித்திருக்கிறாள். கல்லூரிக்கு சென்று படிக்க அவள் ஆசைப்பட்டது நிஜம். ஆனால் காலம் செல்லவிடவில்லை. அவளது தாய் அப்போதுதான் அவளையும் அவளது மற்ற இரு தங்கைகளையும் விட்டுப் பிரிந்து மறு உலகம் சென்றாள்.

இதனால் ஒரு தமிழாசிரியரான சகுந்தலாவின் அப்பா சாரங்கநாதன் நொறுங்கிப் போய் ஒரு மூலையாகப் பார்த்து அமர்ந்து விட்டார்.

அதன் பின் அந்த வீட்டு அடுப்படி ராணியாக சகுந்த லாவே பதவி ஏற்க வேண்டி வந்தது.

அன்றிலிருந்து இன்று வரை சகுந்தலாதான் சாரங்க நாதனுக்கும் சரி, மற்ற அவரின் இரு பெண்களுக்கும் சரி... தாய்க்குத் தாய், மகளுக்கு மகள், அக்காவுக்கு அக்கா என்று எல்லாம்...

சாரங்கநாதனுக்கும் வயதாகி ரிடையர்மெண்ட் வந்து விட்டது. வாத்தியாராக இருந்து சம்பாதித்த மிச்சமும் சேமிப்பும் ஒரு வங்கியில் சொற்ப வட்டியை அவருக்கு தந்து கொண்டிருக்கிறது.

அதில்தான் சாப்பாடு, எலெக்ட்ரிக் பில், அவ்வப்போது வரும் மருத்துவச் செலவு என்று எல்லாமே கடைத்தேறிக் கொண்டிருக்கின்றன.

மூன்று பெண்களைக் கட்டிக் கொடுத்து கரை ஏற்ற வேண்டிய கடமை பாக்கியிருக்கிறது. அந்த கடமையை நினைக்கும்போதே சாரங்கநாதனுக்கு மனது நடுங்குகிறது. மாப்பிள்ளை பார்ப்பதோ திருமணம் நிச்சயிப்பதோ பெரிய விஷயம் இல்லை. ஏன் என்றால், சகுந்தலாவும் சரி... அவளது தங்கைகள் நிர்மலாவும் சரி, விமலாவும் சரி, இந்திர சபையில் ஆடிக் கொண்டிருக்கும்போது அங்கிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்ட ரம்பை, ஊர்வசி, திலோத்தமைகளை போன்றவர்கள்.

ஒரு அவயவம்கூட அவர்கள் வரையில் ஊனமானதாக இல்லை. கச்சிதமான புஷ்டி, கவர்ந்திழுக்கும் வடிவம் என்று கண்களை பனிக்கட்டிகளாக்குபவர்கள். இருந்தும் இருப்பு கரைந்து அதன் பின் அன்றாடத்திற்கு என்ன செய்வது என்கிற கேள்விக்கு விடை தெரியாததால், பெண்களின் திருமணம் பற்றியே அவர் எண்ணிப் பார்த்ததில்லை.

ஆனால், அவருக்கும் சேர்த்து அக்கம் பக்கம் எண்ணிப் பார்ப்பதுதான் ஆச்சரியம்!

இந்திய நாட்டு நடுத்தட்டு அக்கம் பக்கங்களுக்கு தான் எப்பொழுதும் அடுத்த வீட்டுப் பார்வை அதிகம் உண்டே.

சகுந்தலா தெருவில் இறங்கி நடக்கும்போது அது பார்க்காத நாளில்லை. விடாத பெருமூச்சு இல்லை. இதில்

சில மூச்சு வெறும் மூச்சு.. சில மூச்சில் நிஜமாகுமே கரிசனம் உண்டு. அப்படி ஒரு கரிசனமான மூச்சுக்குரியவள் மாலதி மாமி. மாலதி மாமி ஒரு வயர்க் கூடையுடன் தெருவில் தான் நடந்து கொண்டிருந்தாள். சகுந்தலாவைப் பார்க்கவும், இணைப்பு கொடுத்துக் கொண்டாள்.

''அடடே! சகுந்தலாவா.. எங்கடி கிளம்பிட்டே?''

''காய்கறி வாங்கத்தான் மாமி.. நீங்க?''

''நானும்தான்.. செத்த நடையை வேகமா போடு.. சீக்கிரம் போனாத்தான் நல்ல காயா ஆப்படறது. வெயிலா இருக்கேன்னு கொஞ்சம் தாழப் போனாலும் எல்லா நல்லதும் போய் சொத்தையும் சொள்ளையும்தான் கிடைக்கிறது.''

''காய் வாங்கக்கூட டயத்துக்குப் போக வேண்டி இருக்கு பாருங்க''

''ஆமா.. இல்லையா பின்னே? பிஞ்சா இருந்தா சீக்கிரமே வித்துடும். முத்திட்டா கடைசில ஆடுகூட அதைத் திங்காதே..''

மாமி எதார்த்தமாகத்தான் சொன்னாள். ஆனால், சகுந்தலாவுக்கு முத்தல் என்று அவள் தன்னை சொல்வதாகத்தான் பட்டது. முகமும் அடுத்த நொடி காரைபூசி இறுக வைத்தது போல இறுக்கமாகி விட்டது.

நெடுநேரம் வரை எதுவும் பேசாமலே நடந்தாள். மாமிக்கும் கொஞ்சம் குற்றஉணர்வாகி விட்டது.

''என்னடி சகுந்தலா.. திடீர்னு உம்முன்னு மாறிட்டே''

''ஒண்ணும் இல்ல மாமி..''

''உண்மைல ஒண்ணும் இல்லங்கற வார்த்தைக்கு மனசோட அகராதில நிறைய இருக்குன்னுதான் அர்த்தம்.

நான் பிஞ்சு முத்தல்னு யதார்த்தமா பேசினது உன் மனசை பாதிச்சிடுத்துன்னு நினைக்கிறேன்..''

''ஆமாம் மாமி.. நானும் ஒரு முத்தல், பாதிக்கத்தான் செய்யும்.''

''ஆனா, சத்தியமா உன்னை மனசுல வெச்சுண்டெல்லாம் பேசலடி.. யதார்த்தமாதான் பேசினேன்.''

''மனசுல வெச்சுக்கிட்டே பேசினாலும் அதுல ஒண்ணும் தப்பு இல்லை மாமி. முப்பது வயதாச்சு.. எனக்கு பின்னால இன்னும் இரண்டு தங்கைகள். ஒருத்திக்கு இருபத்து எட்டு வயசு. இன்னொருத்திக்கு இருபத்து ஆறு. நான் முதல் முத்தல்னா அவங்க இரண்டாவது, மூன்றாவது முத்தல்கள்..''

சகுந்தலாவின் மனது உடைந்து அவளுக்குள் அடங்கிக் கிடந்த சோகம் ஒரு வெள்ளமாக ஓட ஆரம்பித்து விட்டதை மாமியால் உணர முடிந்தது.

''பைத்தியம்.. மனச விட்டுடாதடி.. இந்த காலத்துக்கு முப்பது வயசெல்லாம் ஒரு வயசே இல்லடி. இப்பதான் என் அக்கா பெண் ரேவதிக்கு கல்யாணம் ஆச்சு. அவ ஒரு கால்சென்டர்ல வேலை பார்க்கறா. வயசு எவ்வளவு தெரியுமா முப்பத்திரண்டு..''

மாலதி மாமியும் சகுந்தாவுக்கு ஆறுதல் கொடுத்துப் பார்த்தாள். ஊஹூம்! உடைந்தது உடைந்ததுதான் என்கிற மாதிரியே உம்மென்று நடந்தாள் சகுந்தலா!

அதற்கு மேல் மாமியும் பெரிதாக அவளிடம் பேச்சு கொடுக்கவில்லை.

காய்கறிச் சந்தையில் மாமி சலித்துக்கொண்ட மாதிரி பிஞ்செல்லாம் கடைத்தேறி முத்தலும் தொத்தலுமாகத்தான் கிடைத்தது.

''கொஞ்சம் முந்தி வரை மூன்றுவா போட்ட வெண்டக்காய் இப்ப ரெண்டுவா.. அள்ளு.. அள்ளு.. தக்காளி கிலோ ஆறே ரூவாதான்.. கம்மாக்கரைக்கா போனா வராது. சிலுக்கு மாதிரி தளதளன்னு இருக்குது பார் தக்காளி... க்காளி.. காளீய்ய்...''

என்று ஒரு காய்க்காரி அவளுக்கான தேசிய கீதம் போல, இருப்பதை விற்க போராடிக் கொண்டிருந்தாள். அதிலும் ஒரு தேடல் நிகழ்த்தி நகர்ந்து பார்த்து, அமுக்கிப் பார்த்து, ஒருத்தி நல்லதை தேடிப் பிடிக்க முனைந்ததில் மானுடம் தெரிந்தது.

ஒவ்வொருவரும் எப்பொழுதும் எதையாவது தேடிக் கொண்டேதான் இருக்கிறோம்.

''ஏய்.. போதுமாத்தா நீ வெண்டக்கா பொறுக்குன லட்சணம்.. இப்படி நீ காம்ப ஒடிச்சிட்டு கமுக்கமா தள்ளி உட்டா அதை நான் எப்படி விக்கறதாம். பவுனு மாதிரி காயையே இந்த பாடு படுத்தறியே..''

''ஆமாம், பெரிய பவுனு.. நாங்க பவுனையே பார்த்தது இல்ல பாரு..''

''ஏ ரோல்டு கோல்டு.. போதும் நவுரு; உன் பவுனு லட்சணம் எனக்கு தெரியாது..''

''வாடிக்கைகிட்ட இப்படி எல்லாம் வெடுக்கு வெடுக்குன்னு பேசாத புள்ள.. நாள பின்ன நாங்க வரணும் போகணும்கறத மனசுல வெச்சுக்க..''

''சரி, ஆத்தா.. நல்ல நேரத்துல நீ கிளம்பு. வாங்கறது காக்கிலோ.. இதுல கொசுறே ஒரு நூறு கிராம் தேத்திடுவே.. போதாக்குறைக்கு நல்ல அழுக்கு நோட்டா பார்த்து ஒரு அம்பது ரூவா நோட்டை வேற நீட்டுவே. அதுக்கு நான் சில்லறை வேற தரணும். நான் ஒரு அழுக்கு நோட்டு

தந்தாலும் வேகமா திருப்பி சலவை நோட்டா என்கிட்ட மட்டும் கேப்பே. நீ எல்லாம் வாடிக்கையாக்கும்?

உன்னை மாதிரி நாலு வாடிக்கை எனக்கு அமைஞ்சா, நான் காய் மட்டுமில்ல, என்னிவே வித்தாலும் கட்டுப்படி யாகாதுல்ல..''

ஒரு கூரைச் சரிவுக்கு கீழ் காய்கறிக்காரி ஒருத்திக்கும் இன்னொருத்திக்கும் நடந்த வாக்குவாதத்தில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி முதல், மிடில்கிளாஸ் குடும் பங்களின் இன்றைய ஆட்டிடியூட் வரை எல்லாமே துல்லிய மாக தெரிந்தது.

சகுந்தலாவும் அதை எல்லாம் ரசிக்காமல் ரசித்தபடி கிடைத்த காய்கறியை வாங்கிப் போட்டுக் கொண்டாள்.

சகுந்தலாவிடம் ஒரு நல்ல விஷயம். எந்த ஒரு காய்கறி விற்பவளிடமும் பேரமே பேசமாட்டாள்.

ஒரு காய்கறிச் செடி நட்டு, அதற்கு உரம் போட்டு தினம் நீர்விட்டு, பராமரித்து அதை பூச்சி தாக்காமல் காப்பாற்றி, பின் அது பூ விடும்போது பார்த்து அதுவே பிஞ்சாகும்போது ரசித்து, பின் காயான பிறகு பறிப்பது என்பது அவள் வரையில் பிள்ளை பெறுகிற மாதிரி ஒரு ரசமான அனுபவம். ஒவ்வொரு காய்கறியுமே இயற்கை யின் அபூர்வமான சிருஷ்டி. ருசியிலும் மனித நாக்குகளை மகிழ்விப்பவை.

எப்படிப் பார்த்தாலும் எல்லா வகையிலும் மனிதக் கூட்டத்தைவிட மேலானவை. மனிதர்கள் வாழ தங்களையே தியாகம் செய்யும் அவைகளுக்காக அதை விற்பவர் களிடம் நாலணா எட்டணா பேரம் பேசி வாங்குவதை சகுந்தலா ஒரு இழி செயலாகவே கருதுகிறாள்.

எனவே, சகுந்தலாவை கண்டாலே சில காய்கறிக் கடை பெண்களும் குஷியாகி விடுவார்கள்.

''வா, தாயி.. கொஞ்சம் சீக்கிரமா வரலாமுல்ல.. நேத்து உனக்காண்டி பிஞ்சா கொஞ்சம் காயை எடுத்துகூட வச்சிருந்தேன். ஆனா, நீ வராம போய்ட்டே..'' என்று அவர்களில் சிலர் பேசுவதை கேட்டுக் கொண்டே அன்றைய காய்கறிப் பாட்டை முடித்துக் கொண்டாள். திரும்பி நடக்கும்போது மாமியிடம் அவள் சகஜமாக பேச வில்லை. ஆனால், மாலதி மாமி அப்படி எல்லாம் அவளை விட்டு விடவில்லை.

''சகுந்தலா.. இன்னிக்கு மீனாட்சி அம்மன் கோயில்ல ஆயிரத்தெட்டு திருவிளக்கு பூஜை இருக்கு.. வரியோ நீ..'' என்று ஆரம்பித்தாள்.

''இல்ல மாமி.. நான் வரலை.''

''அப்படி எல்லாம் சொல்லாதடி.. உன் மாதிரி கல்யா ணத்துக்கு காத்துண்டு இருக்கற கன்னிப் பெண்கள்தாண்டி அதுல அவசியம் கலந்துக்கணும்''

''கல்யாணமா.. எனக்கா?''

''போறும் சகுந்தலா.. விரக்தியில எதையாவது நினைச் சுண்டு எதையாவது சொல்லாதே.. மீனாட்சி நமக்கெல்லாம் அம்மாடி.. அவகிட்ட போய் உன் கஷ்டத்தை சொல்லுடி. அவ பார்வை உன்மேல் பட்டா, அடுத்த நொடியே நீ சாபல்யப்பட்டுடுவேடி''

மாமியின் ரசமான விளக்கம் கேட்டு ஒரு அசட்டு சிரிப்பு சிரித்தாள் சகுந்தலா.

''எதுக்குடி இப்ப சிரிச்சே.. அதுவும் அசட்டுத்தனமா?''

''சிரிக்காம.. ஏன் மாமி.. இத்தனை நாள்ல நான்

அந்த மீனாட்சியை நினைக்கவேயில்லைங்கறது உங்க எண்ணமா?''

''நீ நினைச்சிருக்கலாம்.. ஆனா, அது போறாது. அவ காலைப் பிடிச்சுண்டு கதறுடி. விடாதே.. நிச்சயமா அவ உனக்கு நல்ல வழி காட்டுவா..''

''அது என்ன மாமி கணக்கு.. கதறினாதான் அவ நல்ல வழி காட்டுவான்னா அவளுக்கு அவ்வளவு கல் நெஞ்சமா?''

''இப்படி எல்லாம் குயுக்தியா பேசாதே சகுந்தலா. நல்லதை சொல்லும்போது அதை கப்புன்னு பிடிச்சிக் கணும். இல்லேன்னா கைக்கு கிடைச்சும் வாய்ல விழாத படி ஆயிடும்''

''இல்ல மாமி.. எந்த தெய்வத்துக்கும் என்மேல கருணை கிடையாது. அப்படி இருந்துருந்தா என் அம்மா நான் ப்ளஸ் டூ படிக்கும்போதே செத்திருப்பாளா? எனக்கு ஒரு அண்ணனோ தம்பியோ இருந்து, அவங்க வேலைக் குப் போயோ, இல்ல அப்பாவுக்கே சொத்து பத்து இருந் துருந்தா... நாங்கல்லாம் எப்பவோ கடைத்தேறி இருப் போமே. நானும் சரி.. என் தங்கைகளும் சரி... சபிக்கப் பட்டவங்க.'' சகுந்தலா தன் தங்கைகள் நிர்மலா, விமலா இருவரை எண்ணிக் கொண்டும், அப்பா சாரங்கநாதனை உத்தேசித்தும் நடந்தபடியே அழவே தொடங்கிவிட்டாள்.

மாலதி மாமிக்கே அவள் அழுகை என்னவோ செய்தது. அதே சமயம் கூடவே ஒரு வைராக்கியமும்..

''தோ பாருடி... நீ விரக்தியில் பேசறே! நம்ம கஷ்ட நஷ்டங்களுக்கு நம்ம கர்மாதான் காரணம். நாம செய்ததை நாமதான் அனுபவிச்சு தீர்க்கணும். இது தெரிஞ்சா நீ மீனாட்சி மேல நொந்துக்க மாட்டே. அவளோ கருணைக்

கடல். இப்ப சொல்றேன் இன்னிக்கு நீ என் கூட வரே! என் பக்கத்துல உக்காந்து ஒரு விளக்குக்கு நீ பூஜை பண்றே!

நாளைல இருந்து நாப்பத்தெட்டு நாள் கணக்கு. அதுக்குள்ள உனக்குன்னு ஒரு மாப்பிள்ளை வந்து கல்யாணம்னு ஒண்ணு உனக்குன்னு ஆகலைன்னா, நான் அந்த மீனாட்சியையே என் மனசுக்குள்ள இருந்து பிடுங்கி எறிஞ்சுட்றேன். இது சத்தியம். போறுமா?''

மாலதி மாமியின் ஆவேசம் சகுந்தலாவை அப்படியே கட்டிப் போட்டு விட்டது.

2

'சிவன் சடையின் மதுரம் பட்டதால் மதுரை என்றான மதுரை நகருக்கு ஒன்றுக்கு பத்து பெயர்கள் உண்டு. எல்லாமே காரணப் பெயர்கள்தான்! ஆலவாய் நகர். கூடல் நகர். நான் மாடக்கூடல். அழகன் அருகிருக்கும் பட்டினம். சுந்தரபுரி.. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். உலகில் எந்த ஒரு நகருக்கும் இப்படி ஒன்றுக்கு பத்து பெயர் வழக்கில் இருந்ததில்லை. அதே போல மதுரை நகருக்குள் இறைவனின் திருவிளையாட் டால் ஏழுகடலும் நகருக்குள் வந்து சென்றது. மதுரை நகரம் ஒன்றில்தான் நதி, கடல், குளம், கிணறு, ஊற்று என்கிற ஐவகை புண்ணிய தீர்த்தப் பெருக்குக்கும் இடம் அமைந்தது. நதிக்கு வைகை... கடலுக்கு ஏழுகடல். குளத்துக்கு பொற்றாமரை. கிணற்றுக்கு கோயிலில் பைரவர் சந்நிதி முன் அமைந்த கிணறு, ஊற்றுக்கு அழகர் மலை நூபுரகங்கை என்று ஐவகை தீர்த்தச் சிறப்பும் மதுரையில் மட்டுமே உண்டு!'

இப்பொழுதெல்லாம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் வெகுவாகவே மாறிவிட்டது. அது திருப்பதியோடு போட்டி போடத் தொடங்கிவிட்டது போல அப்படி ஒரு கூட்டம். போதாக்குறைக்கு ஐயப்பா கல்ச்சர்!

கலி யுகத்தில் எதற்கு எப்பொழுது பெரிதாக மதிப்பு உயரும் என்றே கூற முடியாது. சமீப காலத்தில் ஐயப்பனுக்கு அப்படி ஒரு மதிப்பு... ஐப்பசி மாதம் வந்த உடனேயே பலருக்கு ஐயப்பக் காய்ச்சல் ஏற்பட்டு மாலை போட்டு விடுகின்றனர். இந்த பக்தர் கூட்டம் போகும் வழியில் உள்ள பிரசித்திபெற்ற ஒரு கோயிலைக்கூட விட்டு வைப்பதில்லை... இவர்களிடம் சிக்கிக் கொண்டு விட்ட கோயில்களில் மீனாட்சியம்மன் கோயிலும் ஒன்று! இடுப்பில் ஒரு கறுப்பு வேட்டி, மார்பில் ஒரு சிறு துண்டு... இவ்வளவுதான் உடை! அழுக்கைப் பற்றியோ சலவை மடிப்பை பற்றியோ கவலையோபடத் தேவை இல்லை.

ஆண்களில் அன்றாட உபத்திரவங்களில் ஒன்றாக முக ஷவரத்தில் இருந்தும் விடுதலை... பார்க்க பக்கிரித்தனமாக தேற்றமளித்தாலும் 'சாமி' என்கிற கௌரவம் தாமதமின்றி பிறரிடம் கிடைப்பதால் ஐயப்பனுக்கு மாலை போடுவது ஒரு ஃபேஷனாகி விட்டது.

இவர்களால் கோயில் குருக்களில் இருந்து பிளாட்பாரக் கடைவாசிகள் வரை நல்ல வரும்படி. எனவே, இவர்களுக்கும் இவர்கள் வசம் உள்ள சில்லறையை எதிர்பார்த்து மட்டுமே ஒரு கூட்டம் பெருகிவிட்டது.

இப்படிப் பலவிதமான கூட்டங்களால் மீனாட்சியின் அன்றாட பக்தர்களுக்குதான் பாவம் அவஸ்தை.

எப்பொழுதோ ஒரு முறை வருகின்றவர்கள், ஐம்பது நூறு என்று தாராளமாக செலவழித்துக் கொண்டு மீனாட்சியை நெருங்கப் பார்த்ததில், தினசரி வந்த செல்லும்

லோக்கல் பக்த சிகாமணிகளை கோயிலில் இருப்பவர்களே கூட சீந்தத் தயாரில்லை.

மாலதி மாமியும் ஒரு டெய்லி தரிசன கேஸ். முட்டி மோதிக் கொண்டு வரிசையில் நின்று மீனாட்சியை பார்த்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது அவளுக்கு. கூட வந்த சகுந்தலா நொந்து நூலாகிப் போனாள்.

இருவரும் வியர்த்து வடிந்து களைத்துச் சலித்து சந்நிதியை விட்டு வெளியே வரவும், அப்பாடா என்று இருந்தது!

''என்ன மாமி இது... இப்படி ஒரு கூட்டம்?''

''கூட்டமா... என்னத்த சொல்ல? மதுரைல ஒருத்தர் கூட இப்ப வீட்ல இல்ல சகுந்தலா... எல்லோரும் மீனாட்சியை பார்க்க வந்துட்டா மாதிரி இல்ல!''

''மாமி! இன்னிக்கு ஏதாவது விசேஷமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல சகுந்தலா... மீனாட்சி இப்ப எல்லோருக்கும் ரொம்ப தேவையா போய்ட்டா. அதான் இந்த கூட்டம்.''

''ஆச்சரியமா இருக்கு மாமி... ஒரு பக்கம் பெரியாரை வெச்சு சினிமா எடுக்கற அளவுக்கு ஒரு கூட்டம். மறுபக்கம் வீங்கி வெடிக்கற அளவுக்கு ஒரு பக்தி. இந்த ஜனக்கூட்டத்தை என்னால புரிஞ்சுக்கவே முடியலை...''

மாமியும் சகுந்தலாவும் பேசியபடியே நடந்தனர். அப்பொழுதுதான் சகுந்தலா யதார்த்தமாக தன் கழுத்துப் பக்கம் கை போனதில் கழுத்து சங்கிலி இல்லாததை உணர்ந்தாள்.

''மாமீ...''

"என்ன சகுந்தலா?"

"கழுத்துல சங்கிலிய காணோம்."

"ஐயோடா.. நன்னா பாரு..."

மாமியும் பதைக்க, சகுந்தலா தன் ரவிக்கைக்குள் பார்த்ததோடு புடவையையும் உதறிக் கொண்டாள். ஊஹூம்!

"ஐயோ மாமி... காணோம்! மூணு பவுன் கோதுமை வடம் மாமி..."

"பதட்டப்படாதே.. வந்த வழியே அப்படியே நடக்கத் தொடங்கினாள். சகுந்தலாவும் கீழே கீழே பார்த்தபடியே வர, இருவரும் திரும்ப மீனாட்சி சந்நிதியின் வடக்கு வாசல் வரை வந்தனர். ஊஹூம்! எதுவும் கண்ணில் படவில்லை.

சகுந்தலாவுக்கு கண்ணீர் துளிர்த்துவிட்டது.

மாமிக்கும் தர்மசங்கடமாகிவிட்டது.

அவளுக்கு நிறையவே நம்பிக்கையளித்து அவளை கோயிலுக்கு கூட்டி வந்ததற்கு இது என்னதான் மாயை? மாமியின் கைகளில் ஒரு மெல்லிய நடுக்கம்... கழுத்து முகம் என்று பொட்டுப் பொட்டாக வியர்க்கத் தொடங்கி விட்டது.

"மாமி..." சகுந்தலா வாய்விட்டு அழத் தொடங்கி விட்டாள்.

"அழாத சகுந்தலா... மீனாட்சி கைவிட மாட்டா.. வா... அடுத்து என்ன பண்றதுன்னு யோசிப்போம்.."

"என்னத்த மாமி யோசிக்கிறது? இந்த கூட்டத்துல நாமெல்லாம் சாமி கும்பிட வந்தது பெரிய தப்பு மாமி. ஐயோ... என் அப்பா தனக்கு வந்த பென்ஷன் அரியர்ஸ்ல

எனக்கு செஞ்சு போட்டது... கல்யாணம்னு ஒண்ணு நடக்கும்போது ஒட்டுக்கா வாங்க முடியுமோ முடியாதோன்னு கொஞ்சம் கொஞ்சமாக சேமிச்சுதான் நாங்களே நகை வாங்கறோம். அதுல ஒரு மூணு பவுன் களவு போனா எப்படி மாமி?"

"புரியறது சகுந்தலா... சும்மா இருந்த உன் மனசுல மீனாட்சி பார்த்துப்பான்னு ஆசை காட்டி இழுத்துண்டு வந்தது நான்தான். சத்தியமா இப்படி எல்லாம் ஆகும்னு எனக்கு தெரியாது சகுந்தலா..."

இருவரும் மாறி மாறி பிரஸ்தாபித்துக் கொள்ள அவர்களைச் சுற்றி கூட்டமும் சேர்ந்துவிட்டது. ஒருவர் போலீஸுக்கு போகச் சொன்னார்.

"ஐயோ! போலீஸுக்கா?"

"ஆமாம்மா.. கோயிலுக்குன்னு போலீஸ் இருக்கு.. அவங்களுக்கு இங்க சுத்தி வர்ற திருடங்கள நல்லாவே தெரியும். தைரியமா போய் கம்ப்ளைண்ட் கொடுங்க."

சகுந்தலா அதைக் கேட்டு தேங்கித்தான் நின்றாள். ஆனால், மாமிக்கு ஒரு நம்பிக்கை!

"சகுந்தலா.. வா, முதல்ல குத்துவிளக்கு பூஜைல கலந்துண்டு அதை முடிப்போம். அப்புறமா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் கம்ப்ளைண்ட் கொடுத்துட்டு, அப்புறமா நாம வீட்டுக்குப் போகலாம்" என்றாள்.

"இல்ல மாமி... முதல்ல கம்ப்ளைண்ட்! எனக்கு இந்த குத்துவிளக்கு பூஜை எல்லாம் இப்ப வேண்டாம். அதுல ஈடுபடற ஒரு மனநிலையும் இப்ப என்கிட்ட இல்ல..."

"அப்படிச் சொல்லாதே... குத்துவிளக்கு பூஜைக்கு ஒரு தனி சக்தி உண்டு. அதுலயும் மீனாட்சி அம்மன் கோயில் ஒரு சக்தி பீடம். இப்படி ஒரு சக்தி பீடத்துல

உள்ள ஊஞ்சல் மண்டபத்துல.. ஒருத்தருக்கு ஆயிரத் தெட்டு கன்னி மற்றும் சுமங்கலிப் பெண்கள் ஒரு புள்ளி யில் உக்காந்து நெய் போட்டு தீபமேற்றி பண்ற குத்து விளக்கு பூஜைக்கு நிச்சயமா நிறையவே சக்தி உண்டு. முதல்ல வேண்டுதல்... அப்புறமா கடமை!''

மாமி அவளை இழுத்துக் கொண்டு நடந்தாள். தாய்ப் பசுவின் பின்னே செல்லும் கன்றினைப் போல் சகுந்தலா வும் பின்தொடர்ந்தாள்.

அந்த மண்டபம் முழுக்க சுமங்கலிப் பெண்களின் கூட்டமும், கன்னிப் பெண்களின் கூட்டமும் அலைமோதிக் கொண்டிருந்தன. மண்டப நுழைவு வாசலில் ஒருவர் டோக்கன்களை வாங்கி கொண்டு உரியவர்களை அனுப்பிக் கொண்டிருந்தார். ஒரு விளக்குக்கு நூறு ரூபாய்!

ஆயிரம் விளக்குகளும் வரிசையாக அடுக்கப்பட்டு ஒரு சிறு கோலம் போடப்பட்டு, அதன்மேல் விளக்குகள் நின்றிருந்தன. ஒவ்வொரு விளக்குக்கு முன்னாலும் ஒவ் வொருவர் உட்கார தேவையான அளவு இடம். விளக்கு வரிசையின் முடிவில் ஒரு மேடை! அந்த மேடை மேல் சந்நியாசி போல ஒருவர். விளக்கு பூஜைக்கான நேரம் நெருங்கிவிட்டதை மைக்கில் சொல்லி, எல்லோரையும் விளக்கு முன்னால் அமைதியாக உட்காரச் சொல்லி, முதலில் விளக்கேற்றச் சொன்னார்கள்.

அடுத்த முப்பதாவது நொடியே அங்கே தீபச்சுடர்கள் தகதகவென்று மினுக்கின. அந்த கல் மண்டப பகுதியே சுடரொளிபட்டு மின்னியது. சகுந்தலா இயந்திரம் போலத் தான் செயல்பட்டாள். அவள் மனது நடுங்கியபடியே இருந்தது.

அப்பா கேட்டால் என்ன பதில் சொல்வது என்பதில்

ஆரம்பித்து மூன்று பவுன் தங்கம் வாங்க இன்று எவ்வள வெல்லாம் கஷ்டப்பட வேண்டும் என்று ஒரு கணக்கினை அவள் மனது போட்டபடியே இருந்தது.

மாலதி மாமிக்குள் பலமான பிரார்த்தனை!

'அம்மா தாயே.. என்னை நம்பி உன்னை தரிசனம் பண்ண வந்தவளை ஏமாத்திடாதே! நீ மனசு வெச்சா எந்த வகையிலேயும் உதவி செய்ய முடியும்.' மாமி மனது உள்ளுக்குள் கரைந்து உருகி அழுதபடியே இருக்க, அந்த சாமியாரைப் போன்றவர் மைக்கில் விளக்கு பூஜையின் பெருமை பற்றியும் சக்தி பற்றியும் எடுத்து சொல்லத் தொடங்கினார்.

''பக்த கோடிகளே!

தெய்வத்தை நெருங்கவும், தெய்வ அருள் பெறவும் எவ்வளவோ வழிமுறைகளை நம் முன்னோர்கள் சொல்லி விட்டுப் போயிருக்காங்க. அதுல ஒரு உன்னதமான வழி முறைதான் குத்துவிளக்கு பூஜை!

குத்துவிளக்கு உங்களது மங்கலச் சின்னம். அழகான தோற்றத்தோடு, சுடர்விட்டு அது பிரகாசிக்கும்போது, இருள் விலகி ஒளி அங்கு ஏற்படுது. எங்கே இருள் நீங்கு கிறதோ அங்கே அருள் தானாகவே வந்துவிடுகிறது. அருள் வந்தாலே இறைவனும் அங்கே வந்துவிடுகிறான்.

இறைவனை பார்க்க முடியுமா என்று கேட்பவர்கள் ஒரு குத்துவிளக்கு ஏற்றி அதன் சுடர் வழியாக இறைவனை காணலாம்.

ஒரு தீச்சுடர் எப்படி இறைவனாக முடியும் என்று கேட்கக்கூடாது. இங்கே ஒவ்வொரு விளக்கிலும் அன்னை மீனாட்சி இருக்கிறாள். நீங்கள் இப்பொழுது வணங்கித் துதித்து விளக்கின் அடிபாகத்தில் போடும் மலர்கள் அவள் திருவடிக்கே போடும் மலர்களாகும்.

மீனாட்சியை எளிதாக நெருங்கி, அவளை தரிசித்து அவள் அருள் பெற்றிட, குத்துவிளக்கு பூஜை ஒரு எளிய வழிமுறையாகும்.

இங்கே ஆயிரத்தெட்டு பேர் இந்த பூஜையை செய்ய உள்ளனர். மீனாட்சியின் நூற்றியெட்டு நாமங்களை சொல்லி அர்ச்சனை செய்து, அவள் மேல் பாட்டு பாடி பக்திப் பரவசத்துடன் ஆயிரத்தெட்டு பேரும் பூஜிக்கும் போது, லட்சம் முறைக்கும் மேல் அவள் நாமத்தை இங்கே நாம் சொல்லி முடிக்கிறோம்.

அதனால் இந்த வெளி எங்கும் அவளது நாமஸ்மரணை ஏற்படுகிறது. ஆயிரத்தெட்டு பேர்... ஆயிரத்தெட்டு விதமான நேரத்தில் பிறந்திருப்பவர்கள். இருந்தாலும் அவர்கள் இங்கே ஒரு புள்ளியில் மற்றவர்களோடு ஒன்று பட்டு பூஜிக்க ஜாதகத்தில் இடமிருக்க வேண்டும். ஒரு தனி மனிதனாய் எவ்வளவு முயன்றாலும் இங்கே இப்பொழுது உருவாக்கப்படுவது போன்ற ஒரு அருள் அலையை, அருள்வெளியை, ஒளிச்சுழலை உருவாக்க முடியாது.

ஒருவர் வந்து மனமுருகி அழைத்தாலே... ஓடிவந்து விடும் அந்த மீனாட்சி, ஆயிரத்தெட்டு பேர் அழைக்கும் போது வாராதிருப்பாளா?

கட்டாயமாக வருவாள். அவளை வரவழைக்கவே இந்த ஏற்பாடு. சிலரது காலநேரங்கள் துன்பம் கொண்ட தாகவும், வருத்தம் சூழ்ந்ததாகவும் இருக்கலாம். அப்படிப் பட்ட கால நேரங்களை மாற்றி அவர்களுக்கும் இன்ப மளிக்க, அவர்களது எல்லாவித தோஷங்களும் விலகிடவே... இங்கே இப்படி ஒரு கூட்டமாக முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. எனவே, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்

என்கிற பரந்த எண்ணத்தோடு இந்த பூஜையில் கலந்து கொள்வோம்.

இந்த விளக்கின் ஒளி காலத்துக்கும் உங்களுக்கு வழிகாட்டட்டும்.. காட்டும் என்பதே என் உறுதியான கருத்தாகும்.''

அந்த சந்நியாசி பேசி முடித்ததில் அங்கும் இங்குமாக நிறையவே உட்பொருள்! அந்தப் பேச்சு சகுந்தலாவையும் கவர்ந்திருந்தது! அவள் கண்களும்கூட சுடர் ஒளிமேல் லயித்திருக்க, மனது அங்கேயே அப்போதே மீனாட்சியை பார்த்துவிட்டதை போல உருகத் தொடங்கியிருந்தது.

3

மதுரை நகரின் தனிப்பெரும் சிறப்புகளில் பிரதான சிறப்பு அது. அது இந்திரனால் அமைக்கப்பட்ட நகரமாய் இருந்தபோதிலும், சொக்கநாத பட்டினமாய் கருதப்பட்டாலும் ஆணும் பெண்ணும் வாழ்வில் சரிசமம் என்பதை ஒரு ஊருக்கும் பொதுவாக்கிய நகரமாகும். இங்கே வருடத்தின் பாதி நாட்கள் அன்னை மீனாட்சி யால் ஆளப்படுகிறது. சொக்கநாதப் பெருமானாகிய இறைவன் எப்படி தன் உடலில் சரிபாதியை சக்திக்கு தந்தானோ அதேபோல மதுரையையே ஆளும் உரிமை யையும் தந்திருக்கிறான்.

இந்த நகரத்தை அன்னை மீனாட்சி ஆளுகின்ற விதமும் அனாதியானது. அம்பிகையின் சொரூபங்களில் மீனாட்சி சொரூபம் மிக வித்தியாசமானது. மற்ற எல்லா

ஊர்களிலும் அம்பிகையின் கரம் அருளுவது போதைான் காட்சி தரும். இங்கேயோ வலக்கையில் மலர்ச்செண்டும் அதன்மேல் கிளியும் அமர்ந்திருக்க, அம்பிகை புன்னகை பூத்தபடி நிற்கிறாள்.

ஏன் அருளுகின்ற கரத்தவளாக அவள் இல்லை என்பதன் பின்புலத்தில் நுட்பமான காரணங்கள் மட்டு மல்ல.. பரவசமேற்படுத்தும் விஷயங்களும் ஒளிந்துள்ளன!

மீனாட்சியின் திருச்சந்நிதி முன் தன்னை மறந்து நின்று வணங்கிக் கொண்டிருந்தான் சுந்தரேசன். சுந்தரேசன் ஒரு நல்ல பாடகனும்கூட. அவன் எப்பொழுது வந்தாலும் நின்று ஒரு பாட்டு பாடாமல் போகமாட்டான்.

ஆலயத்துக்குள் அவ்வப்போது கச்சேரியும் செய்திருப் பவன் என்பதால் பட்டர்களுக்கும் அவனை நன்றாகத் தெரிந்திருந்தது. எனவே, அவன் வந்து நின்று பாடிச் செல் லும் வரை அவர்களும் எதுவும் கூற மாட்டார்கள்.

அப்போதும் சுந்தரேசன் மனமுருக ஒரு பாடலை மீனாட்சியின் மேல் பாடி முடித்தான். அவ்வளவு கூட் டமும் ஆனந்தமாக கேட்டு ரசித்தது. இறுதியாக பட்டர் குங்குமமும் பூவும் கொடுத்தார். அவர் கொடுத்த ஒரு தாமரை மொட்டு... அது கை தவற கீழே விழவும், அதை எடுக்க குனிந்தான் சுந்தரேசன்.

குனிந்த ஜோரில் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு ஐந்து ரூபாய் நாணயம் கீழே விழுந்து காலடியில் ஓடியது.

'அடடா!' என்றபடி அதை எடுக்க கையை விட்டவன், வேறு ஏதோ ஒன்று கையில் அகப்பட வெளியே எடுத்தான். அவன் விரல்களின் இடையில் ஒரு தங்கச் சங்கிலி!

ஒரு வினாடி பகீர் என்றது!

ஒரு பட்டரும் பார்த்துவிட்டு கேட்டார்.

''என்ன சுந்தரேசா.. கழுத்து சங்கிலி அவுந்து விழுந் துட்டுதா?''

அவர் கேட்டதற்கு இல்லை என்றும் ஆமாம் என்றும் இருமாதிரியும் பதில் கூறியவன், நொடியில் அது வேறு யாரோ தவற விட்ட சங்கிலி என்பதை புரிந்துகொண்டு விட்டான்.

சங்கிலியோடு குங்குமம் மற்றும் தாமரைப் பூவுடன் கூட்டத்தில் இருந்து விலகி வந்தவன்... நேரே பொற்றாமரை குளத்தின் கரையில் மேற்கு பாகத்தில் அமைந்திருக்கும் ஊஞ்சல் மண்டபத்தில் வந்து அமர்ந்தான்.

அந்த மண்டபத்திலும் ஒரு மீனாட்சி இருக்கிறாள். கிட்டத்தட்ட உள்ளே சந்நிதியில் இருக்கும் மீனாட்சிக்கும் இந்த மீனாட்சிக்கும் பெரிய வித்தியாசமே இல்லை என்கிற அளவில்... இந்த மீனாட்சியை சதா சர்வ காலமும் தளவாய் ராமப்பையர் என்கிற ஒரு சிலை தரிசனம் செய்தபடி இருக்கும்.

தளவாய் ராமப்பையர், ராணி மங்கம்மாளிடம் தளபதி யாக இருந்தவர். மங்கம்மாளிடம் தளபதியாக இருந்தவர், மங்கம்மாளுக்கும் சரி, ராமப்பையருக்கும் சரி... மீனாட்சி தான் கண்கண்ட தெய்வம். மங்கம்மாள் அந்த மண்டபத் தில்தான் வந்து அமர்ந்து கொள்வாள். எதிரில் மீனாட்சி யின் ஊஞ்சல் மண்டபம். அந்த ஊஞ்சலை ஒரு கயிற்றில் கட்டி, கயிற்றின் முடிவுப் பகுதியை மங்கம்மாள் கையில் கொடுத்து விடுவார்கள். மங்கம்மாளும் தெலுங்கிலே இனிய கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே மீனாட்சியை தாலாட்டுவாள்.

மங்கம்மாள், மீனாட்சியை அந்த விதத்தில் வணங்கு வதை பார்த்த ராமப்பையருக்கு தானும் அவளது பக்திக்கு

கொஞ்சமும் சளைத்தவனல்ல என்று காட்ட வேண்டிய ஒரு பக்தி ஆவேசம்!

அதன் காரணமாக ஒரு தூணில் உள்ளிருக்கும் மீனாட்சியை போலவே செதுக்கியவர், அதன் எதிரில் உள்ள தூணில் தன்னைப் போன்ற உருவத்தை வணங்கிடும் கோலத்தில் சிலையாக செதுக்கச் செய்து, இறப்புக்கு பிறகும் ராமப்பையர், மீனாட்சியை வணங்கியபடியே உள்ளார். அந்த ஊஞ்சல் மண்டபத்துக்குள் எப்பொழுது வந்து அமர்ந்தாலும் சுந்தரேசனுக்குள்ளும் அந்த பூர்வாங்க வரலாற்று சம்பவம் ஒரு ஓட்டம் ஓடி முடியும்.

அந்த மீனாட்சியை யார் வேண்டுமானாலும் தொட லாம். எனவே, அவளது திருவடியில் கை வைத்தபடியே மனதுக்குள் பிரார்த்தனைகளை செய்து கொள்வான்.

ஒரு பெரிய பின்னணிப் பாடகராக வேண்டும் என்பது அவனது விருப்பம். மீனாட்சி மனது வைத்தால் அது நொடி யில் நடந்துவிடும்.

அவள் மனது வைக்க வேண்டுமே?

அங்கே அமரும்போது காலைப் பிடித்துக் கொண்டு, என்னை எப்பொழுது எல்லோரும் பாராட்டும் ஒரு காலம் வரும்? என் பாடல் எப்பொழுது உலகம் முழுக்க ஒலிக் கும்?' என்று மனதுக்குள் கேட்டபடியே இருப்பான்.

அன்றும் அங்கே வந்து அமர்ந்தவன், ஐந்து ரூபாய்க் காக கைவிட்டபோது கிடைத்த தங்கச் சங்கிலியை எடுத்து ஒரு பார்வை பார்த்தான். அது அறுந்து விழுந்த சங்கிலி என்பது மிக நன்றாக தெரிந்தது. யாருடையது என்கிற கேள்வியும் எழுந்தது. சங்கிலியோடு மீனாட்சியைப் பார்த் தான். அப்படி எல்லாம் அவன் பார்க்க கூடியவனல்ல. அவன் பார்த்ததன் பின்னாலே ஏராளமான காரண காரியங்கள்.

''மூஞ்சிய பாரு... எப்ப பாரு பாட்டு... பாட்டு.. பாட்டு. தெருவுல, பிளாட்பாரத்துல உக்காந்து பாடினா நாலு காசாவது கிடைக்கும். ஆனா, அதுக்கு ஐயாவோட கௌரவம் இடம் கொடுக்காது. மனசுக்குள்ளேயே பெரிய டி.எம்.எஸ்., எஸ்.பி. பாலசுப்பிரமணியம்னு நினைப்பு...''

அவன் அப்பா சற்று முன்புதான் அவனை உரித்துப் போட்டிருந்தார்.

''இங்க தம்பிக்காரனுக்கு காலேஜிக்கு ஃபீஸ் கட்ட முடியல. ஒரு பத்தாயிரம் ரூபா கிடைக்காம நான் படற பாடு எனக்குதான் தெரியும். இதுல இவன் ஒருத்தன்... ஒரு பிரயோஜனமாவது உன்னால உண்டாடா?''

அவர் கேட்ட பல கேள்விகளில் அந்த கேள்வியும் ஒன்று.

அவருக்குப் பதில் சொல்லத் தெரியாமல் அவரையே வெறித்தவனை, ''நீ நல்ல சூடு சொரணை உள்ளவனா இருந்தா நாலு காசோட வா.. இல்ல வராதே'' என்றே கூறி விட்டார்.

வீட்டுக்கு வீடு இன்று இப்படிப்பட்ட ராகங்களுக் குத்தான் ஒரு பஞ்சமும் கிடையாதே? அதுவும் நடுத்தட் டுக்கு கீழான குடும்பங்களின் தேசிய கீதமே அப்பா பாடும் ஆவேசப் பாட்டுதானே? அதன் கருப்பொருள் அவர் பெற்ற பிள்ளைகள்!

சுந்தரேசனுக்கும் எரிச்சலாக வந்தது. 'மியூஸிக்கில் பட்டம் பெற்றதற்கு வேறு படிப்பில் பட்டம் பெற்றிருந் தால் ஒரு குமாஸ்தா வேலையாவது கிடைத்திருக்கும்' என்று வேறு சுற்றி உள்ளவர்கள் கூறும்போது, மிளகாயை கடித்த மாதிரி இருக்கும். அப்படியே அவர்கள் அவனை எங்க தெரு டி.எம்.எஸ், ஜூனியர் எஸ்.பி. என்றெல்லாம்

கிண்டல் செய்யும்போது அழுகையாக வரும். அடக்கிக் கொள்வான். அவர்களுக்காவது வாழ்ந்து காட்ட வேண்டும் என்று முடிவும் செய்து கொள்வான்.

அவன் தன் எல்லா சுமையையும் இறக்கி வைக்கும் ஒரே இடம் மீனாட்சி அம்மன் சந்நிதிதான்.

அவள்தானே ஊமையாக வந்த குமரகுருபரனையே கூப்பிட்டு, ''உம்ம்... பாடு... உம் பாடு பார்க்கலாம்'' என்று சொல்ல... அவரும், கொக்கு பறக்கும் அந்தக் குளக்கரையில் என்று பாடினாரே.

சுந்தரரேசனுக்கு அதெல்லாம் ஞாபகத்திற்கு வரும். ஒரு நாள் இல்லை, ஒரு நாள் மீனாட்சி அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு இளையராஜா முன் நிறுத்தி, 'ராஜா! இவன் என் பிள்ளை. இவனை நீ பெரிய இசை மேதையாக்கு' என்று கூறுவாள் என்பதெல்லாம் அவன் நம்பிக்கை.

இன்றுகூட அப்படி ஒரு நம்பிக்கையோடுதான் வந்திருந்தான். வந்த இடத்தில் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், தங்கம் கிடைத்துள்ளது. தாராளமாக பத்தாயிரம் ரூபாய் புரட்டலாம். தம்பிக்கும் ஃபீஸ் கட்டி அண்ணன் என்கிற பெருமையைத் தக்க வைத்துக் கொள்ளலாம். அப்படியே எப்பொழுதும் வசைபாட்டுப் பாடும் அப்பா வாயையும் தைத்து மூடலாம். இதற்காகவென்றே மீனாட்சி செய்த ஏற்பாடு இது என்றுதான் அந்த வேளையில் அவன் மனதுக்குப் பட்டது. அப்படியே காலடியில் கை வைத்து நன்றி கூறிவிட்டு சேட்டுக் கடைக்கு அந்த நகையை அடகு வைப்பதற்காக புறப்பட்டான்.

எதிரில் விளக்கு பூஜை முடிந்து சகுந்தலாவும் வந்து கொண்டிருந்தாள்.

4

அன்னையின் இயக்க கதியைத்தான் சக்தி என்கிறோம். இந்த சக்தி இல்லாவிட்டால் ஒருவரிடம் இயக்கம் செயலற்றுப்போகும். இருப்பது பெரிதில்லை. இயங்க முடிந்த மனிதனாக ஒரு மனிதன் இருக்க வேண்டும். இயங்க முடிவதிலும் எவ்வளவோ வகைகள் உள்ளன. குறிப்பாக அந்த இயக்க வகையை ஒன்பது வகையாக பிரித்து, ஒன்பது சக்தி அதாவது நவசக்தி என்பார்கள். ஒருவர் நவசக்தியை பெற்றுவிட்டால், அவரே இந்த உலகின் முதலும் முடிவுமான வெற்றியாளர்.

இந்த ஒன்பது வகை சக்தியை குறைவாகப் பெற்ற ஜீவனே சிவனாகும். சக்தி இயங்கிட கருவி வேண்டும். கருவிதான் உடல். அதைத்தான் சிவம் என்கிறோம். சிவனும் சக்தியும் இணைந்த நிலையே செயல்பாடு நிலை என்கிறோம். இந்த செயல்படு நிலை என்பது எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் நிகழ்கிறது. ஜீவராசிகளைக் கடந்து பிரபஞ்ச வெளியிலும் அதை அன்னை நிகழ்த்தினாள்.

இந்த நிலையை ஒரு நகரத்தின் மீதே அம்பிகை நிகழ்த்தினாள். அந்த நகரமே மதுரை. மதுரை நகரில் சக்தியின் ஆட்சி கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால், அது ஆட்சி புரிய அகப்பட்ட நகரமான மதுரையே சிவமாக இருப்பதுதான் இங்கே விந்தை!

நகையை தொலைத்துவிட்ட சகுந்தலா ஒருபுறம் தவிக்க, அவள் தொலைத்த நகையை எடுத்த பாடகன் சுந்தரேசன் அதை அடகு வைக்க சென்றவனாக அவளுக்கு நேர் எதிரில் வந்து கொண்டிருந்தான்.

சுந்தரேசனை மாமி ஓரளவு அறிவாள். மீனாட்சி சந்நிதியில் கூட்டமில்லாத சந்தர்ப்பங்களில் அவன் பாடக் கேட்டிருக்கிறாள். அதில் வெகுவாக மயங்கியும் போயிருக்கிறாள். அந்த பரிச்சயத்தோடு எதிரில் வந்த சுந்தரேசனைப் பார்க்கவும், மென்மையாக ஒரு சிரிப்பு சிரித்தாள். அவனும் சிரித்தவனாக, ''என்ன மாமி! எப்படி இருக்கீங்க?'' என்று ஆரம்பித்தான்.

''நன்னா இருக்கேன்பா, நீ எப்படி இருக்கே?''

''ஏதோ இருக்கேன்...'' அவன் இழுத்து பெருமூச்சு விட்டு சொன்ன விதமே ஒரு தினுசாக இருந்தது. அதில் அவன் ஒன்றும் திருப்திகரமான வாழ்க்கைப் போக்கில் இல்லை என்பது தெளிவாக அவளுக்கும் புரிந்தது.

''என்ன சுந்தரேசா... அம்பாளை உன் வெண்கலக் குரலால் மயக்கற உனக்குள்ளேயுமா ஆற்றாமை... அம்பாளோட செல்லப்பிள்ளையாச்சே நீ!''

''நீங்கதான் செல்லப்பிள்ளை, வெல்லப் பிள்ளைன்னு சொல்றீங்க. ஆனா, நான்தான் அவ கருணையே துளிகூட இல்லாதவன்கறது என் அபிப்பிராயம்.''

அவன் சொன்ன தொனியும், விதமும் சகுந்தலாவையும் அவன் பக்கம் திருப்பியது. அதே வார்த்தைகளைத்தான் அவளும் எண்ணியிருந்தாள். அதே தொனியில்தான் மனதுக்குள்ளும் சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த ஆச்சரியம் அவள் கண்களில் மின்னியது. அவனும் கவனித்தான்.

முதன்முதலாக அவளைப் பார்க்கிறான். இருவர் பார்வைகளும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்ள, வெகு அருகில் கம்பத்தடி மண்டபத்தூண் ஒன்றில் மீனாட்சி கல்யாண சுந்தரேஸ்வரர் சிலையானது, பெருமாளுடன் அவர்கள் இருவரையும் பார்க்கின்ற விதத்தில் இருந்தது.

''ஆங்... சொல்ல மறந்துட்டேனே. இவ பேர் சகுந்தலா. நான் குடியிருக்கிற தெருவுல குடி இருக்கா... இவளோட அப்பா ஒரு ரிட்டயர்ட் தமிழ் பண்டிட்.'' மாமி, சகுந்தலாவை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பதிலுக்கு வாஞ்சையுடன் கைகூப்பினான். அவளுக்கு அவன் அதிக மாகவே மதிப்பது போல்கூட இருந்தது.

''அப்புறமா, ஒரு உதவி கேட்க தோன்றது.''

''என்ன மாமி?''

''ஒண்ணுமில்லே.. நானும் சகுந்தலாவும் திருவிளக்கு பூஜைல கலந்துக்க வந்தோம். வந்த இடத்துல இவ கழுத்துச் சங்கிலி காணாம போயிடுத்து... மூணு பவுன் சங்கிலி. கோதுமைவடம் சங்கிலியப்பா அது. அதுவா அறுந்து விழுந்ததா, இல்லை யாராவது திருடிண்டு போனானான்னு தெரியாது. மொத்தத்துல போயிடுத்து. பாவம் சகுந்தலா... ரொம்ப ஏழைப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவ! அவ மனசு எவ்வளவு கஷ்டப்படும்னு நீயே யோசிச்சுப் பார்...'' மாமி கேட்ட விதத்தில் அவன் தன்னையே சந்தேகப்படுகிறாள் என்பது போல ஒரு தொனி. ஆனால், மாமி ட்ராக் மாறினாள்.

''காணாம போன அந்த சங்கிலிக்காக போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுக்கத்தான் போயிண்டிருக்கோம். அவாளுக்கு தெரியாத திருடனும் இருக்க முடியுமா என்ன? ஆனா எனக்கும், இவளுக்கும் போலீஸ் ஸ்டேஷன்னாலே கொஞ்சம் அலர்ஜி. அதனால, நீ கொஞ்சம் கூட வர்றியா?''

மாமி கேட்டு முடிக்கவும், ஆழமாக ஒரு பார்வை பார்த்தான் சுந்தரேசன். பின் சிரித்தான். மனதுக்குள் அந்த சங்கிலி தன் கைகளில் எதற்காக அகப்பட்டது என்பதை புரிந்துகொண்டவனாக பாக்கெட்டுக்குள் கையை விட்டு அதை வெளியே எடுத்தவன்,

''இதுவா அந்த சங்கிலி?'' என்று கேட்க, சகுந்தலா ஒரு வினாடி ஆடிப்போனாள்.

''இதேதான்.. இதேதான்...'' அவள் உதடு துடித்தது. அடுத்த நொடியே அவள் கைகளில் அந்தச் சங்கிலியைத் திணித்தான். பின்னர், ''இது கொஞ்சம் முந்திதான் என் கைல கிடைச்சது. இது என் கைக்கு வரவும் எனக்குள்ள ஒரே பதட்டம். அம்பாள் இதை எதுக்கு என் கண்ணுல காட்டினாள்னும் குழப்பம். நேர்மையா இதை உண்டியல்ல போட்டுடறதுதான் சரின்னு முதல்ல நினைச்சேன். பிறகு என் பணத் தேவையைப் பூர்த்தி செய்ய அவளா கொடுத்த பரிசுன்னும் நினைச்சேன். ஆனா, இப்பத்தான் தெரியுது. இது தொலைஞ்சாலும் திரும்ப இவர்களுக்கே கிடைக்கணும்கறது.''

சுந்தரேசன் மனதில் பட்டதை மறைக்காமல் பேசி முடித்தான். மாமியும் சகுந்தலாவும் கிட்டத்தட்ட சிலிர்த்துப் போய் விட்டிருந்தனர். மாமி சுந்தரேசனை மளுக்கென்று துளிர்த்துவிட்ட கண்ணீரோடு பார்த்தாள்.

''சுந்தரேசா! ரொம்ப நன்றி உனக்கு. நீ இப்பகூட எதுவும் சொல்லாம இதை எடுத்துண்டு போயிருக்கலாம். ஆனா, திருப்பிக் கொடுத்தே பார்.. அங்கதான் இருக்கு உன் நேர்மை...'' என்றாள்.

சகுந்தலாவும், ''ரொம்ப நன்றிங்க.. என் அப்பாவை எப்படிச் சமாளிக்கப் போறேனோன்னுதான் நினைச்சுக் கவலைப்பட்டேன். ஆனா, அந்த மீனாட்சி கைவிடலை. என்னைக் காப்பாத்திட்டா'' என்றாள்.

''எனக்கும் இப்ப மனபாரம் குறைஞ்சுது. உங்களுக்கு உதவ முடிஞ்சதுக்காக நான் சந்தோஷப்படறேன்'' என்றவன், அதற்கு மேல் அங்கு நின்று நீட்டி முழக்காமல் புறப்பட்டான். சகுந்தலா அவனையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டாள்.

5

'மதுரை நகரமே சிவமாக காட்சி தந்திட, அதனை அன்னை உமை மீனாட்சியாக தோன்றி வருடத்திற்கு நான்கு மாத காலம் ஆட்சி செய்கிறாள். உலகிலேயே பெண் ஒருத்தி அரசாட்சி செய்ததும், அவளாலும் செய்ய முடியும் என்று நிரூபிக்கப்பட்டதும் மதுரையில்தான்!

சிவம்தான் பெண்ணும், ஆணும் சரிசமம் என்று உலகுக்கு சொன்ன முழுமுதற் கடவுள், தன் உடம்பிலேயே சரிபாதியை உமைக்கு அளித்த ஈசன், மதுரையில் ஆட்சியிலும் பங்களித்தான். அளித்தான், அளித்தான் என்பதுகூட சரியில்லை. அப்படி ஒரு அமைப்பை உருவாக்கி, இதுதான் தர்மம் என்று இந்த உலகுக்கும் காட்டப்பட்டது.

இப்படிப்பட்ட மதுரையில் அன்னை மீனாட்சியை நன்கு கவனித்தால் ஒரு பேருண்மை புரியவரும். அன்னை இங்கே கண்களாலேயே ஆட்சி செய்கிறாள் என்பதுதான் ஆச்சரியமான விஷயம். மற்ற ஆலயங்களில் இறை ரூபங்களின் கரங்கள் அருளுகின்ற விதத்தில் இருக்கும். ஆனால், இங்கே அருள்வதற்கு பதிலாக அன்னையின் கரத்தில் அஞ்சுகமாகிய கிளி அமர்ந்திருக்கும். கிளி ஒரு பஞ்சபூத வடிவம். நீலம், பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் என்கிற நிறங்களைக் கொண்டது அது. வானத்தைக் குறிப்பது நீலம், பூமியைக் குறிப்பது பச்சை, நெருப்பைக் குறிப்பது சிகப்பு, நீரினை குறிப்பது வெண்மையாகிய ஸ்படிக நிறம், காற்றைக் குறிப்பது மஞ்சள் வண்ணம். பஞ்ச பூதங்களும் அவள் கரத்தில் அடங்கியிருக்கிறது என்பதே

உள்ளடக்கமான உண்மை. அஞ்சுகம் என்பதை அஞ்சுகம்.. அதாவது ஐந்து பூதங்களின் அகம் என்றும் கூறலாம். அதே தன் வசம் அவள் பிடித்தபடி இருக்கிறாள் அன்னை. அதே சமயம் நீரில் திரியும் மீனானது எப்படி உறக்கமில்லாமலும், கண்களாலேயே தன் குஞ்சுகளை அரவணைத்தும் வளர்க்கிறதோ அதுபோல பார்வையாலேயே அனைவரையும் ரட்சிப்பவள் மதுரை மீனாட்சி என்பது உட்பொருள்!

சாரங்கநாதன் வீட்டுத் திண்ணையிலேயே அமர்ந்து கொண்டிருந்தார். அவருக்கு மிகப் பிரியமான வெற்றிலைப் பெட்டி, அருகிலேயே இருந்தது. வயதான காலத்தில் சிலர் வரையில் மூக்குப் பொடியும், இன்னும் சிலர் வரையில் வெற்றிலைப் பாக்கும்தான் சுவாரஸ்ய மானவை! இவற்றை அவர்களிடம் இருந்து பிரிப்பதும் அவர்களின் உயிரை எடுப்பதும் ஒன்றுதான்.

இது தெரிந்தோ என்னவோ சாரங்கநாதனின் மாணவர்களில் ஒருவன் கைநிறைய வெற்றிலை சீவலுடன் அவர் முன் வந்து நின்றவனாக வணங்கினான்.

''ஐயா, வணக்கம்!''

''யாரது?''

''ஐயா, என்னைத் தெரியலீங்களா... நான்தான் சீனிவாசன்!''

''சீனிவாசனா... எந்த சீனிவாசன்?''

''என்னய்யா... மறந்துட்டீங்களா... நான்தான்யா திருப்புவனம் சீனிவாசன். உங்க மாணவன்.''

''சரியா ஞாபகம் வரலப்பா... சரி, என் மாணவன்கறே. உட்காரு.''

அவனும் உட்கார்ந்தான். வெற்றிலைப் பாக்கை முதல் காரியமாக அவர் எதிரில் நீட்டினான்.

அவரும் அதைப் பார்த்ததும் பரவசமாகிவிட்டார்.

''அடடே! வெத்தலை சீவலா?''

''ஆமாம் ஐயா... சோழவந்தான் கொடிக்கால் வெற்றிலை... நீங்கதான் அந்தக் காலத்திலேயே வெத்தலை சீவல்னா உசுரையே விடுவீங்களே..''

''ஆமாமா..'' என்றவர், அவனை கரிசனமாக பார்த்தார். அவனோ அவர் தலை குனியும்போதும் அவர் கவனம் திரும்பும்போதும் வீட்டினுள் பார்வையை ஓட விட்டான்.

உள்ளே விமலா, நிர்மலா என்று ஒருத்திக்கு இரு பெண்கள். தங்கப் பதுமைகள்! அவர்களிடம் விமலா அவன் பார்ப்பது தெரிந்து.. பார்த்துச் சிரித்தாள். அவள் சிரிப்பதை வைத்துப் பார்த்தால், அவனை அவளுக்கு ஏற்கெனவே தெரியும் போல இருந்தது. சாரங்கநாதனும் அதை எல்லாம் உணராதவராக அவனிடம் அவன் வந்த நோக்கம் பற்றி கேட்கத் தொடங்கினார்.

''ரொம்ப சந்தோஷம்ப்பா... இந்த ஏழை வாத்தியாரை நீ எதுக்காக பார்க்க வந்தேன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''அது... அது... ஒண்ணுமில்ல சார்! எனக்கு வேலை கிடைச்சிருக்கு. உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''அப்படியா.. என் மனப்பூர்வமான வாழ்த்துகள். ஆமா, என்ன வேலை?''

''அது... அது... ஆங்! ஷேர் மார்க்கெட்ல ஷேர்களை ஃபாலோ பண்ணி இன்வெஸ்ட் பண்ற கம்பெனில சூபர்வைஸரா ஜாய்ன் பண்ணப் போறேன் சார்...''

''ஷேர் மார்க்கெட் கம்பெனியா... கிட்டத்தட்ட அது ஒரு குதிரை ரேஸ் மாதிரியாச்சே...''

''அப்படி எல்லாம் இல்லை சார்... இது சயின்டிஃபிக் கான ஒரு துறை. நமக்கு இதுல ஜட்ஜ் பண்ணத் தெரிய ணும்.''

''அதெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேன். நீ பூசி மெழுகறே.''

''இல்லே சார்... நிஜமாதான் சொல்றேன்...'' என்றவன், வேண்டுமென்றே இருமத் தொடங்கினான்.

''எதுக்கு இப்படி இருமறே...''

''கொஞ்சம் ஜலதோஷம் சார்...'' என்றவன், திரும்ப வும் இருமினான்.

''கொஞ்சம் வெந்நீர் குடி. இருமல் நிக்கும்...'' என்ற சாரங்கநாதன், உள்ளே பார்த்து... ''விமலா, நிர்மலா...'' என்றார். அவர் அழைத்த வேகத்தில் வாசல் பக்கம் வந்தாள் விமலா.

''அப்பா! கூப்பிட்டீங்களா?''

''இவருக்கு கொஞ்சம் வெந்நீர் கொடும்மா... இருமறார் பாரு... போப்பா... உள்ளே போய் குடிச்சிட்டு வா...'' அவர் கூற, அவனும் உள்ளே சென்றான். அவரோ திண்ணையை விட்டு எழாமல் தெருவையே பார்த்தார். தெருமுனையில் மாமியோடு சகுந்தலா தலை தெரியவும் தான் அவருக்குத் தெம்பு வந்தது.

உள்ளே கொல்லைப்புறம் துணி துவைத்துக் கொண் டிருந்தாள் மூன்றாமவளான நிர்மலா.

விமலாவிடம் பின்பக்கம் பார்த்தபடியே அவனுடன் பேச்சு.

''என்ன இது... வீட்டுக்கே வந்துட்டீங்க?''

''வரேன்னு சொன்னேன். வந்துட்டேன் பார்த்தியா?''

''அதுக்காக இப்படியா... அக்கா வரப்போற நேரம்.''

''நல்ல அக்கா. ஆம்... இன்னிக்கு ஈவினிங் தெப்பக் குளத்துல சந்திக்கிறோம்தானே?''

''ஐயோ! மெல்லப் பேசுங்க. முதல்ல இடத்தை காலி பண்ணுங்க. எதுவா இருந்தாலும் சாயந்திரம் பேசிக்கலாம்.''

''அப்படி வா வழிக்கு... உங்கப்பாவை அவர் ஸ்டூடண்ட்னு சொல்லி எப்படி சதாய்ச்சேன் பார்த்தியா?'' அவன் கேட்க, அவள் முகத்தில் வெட்கம் இழையோடி யது. எல்லாம் சில நொடிகள்தான்...

''சரி, சரி... முதல்ல இடத்தை காலி பண்ணுங்க.''

''பண்றேன். பண்றேன்.. இனி ஸ்டூடண்ட்டா தமிழ் இலக்கணம் கத்துக்கூட வருவேன்'' என்றவன், அவள் கையைப் பற்றி வெடுக்கென்று இழுத்து நச்சென்று ஒரு முத்தம் இட்டான்.

அவள் உடம்பெங்கும் ஒரு மின்னோட்டம் ஏற்பட்டு அடங்கியது. குப்பென்று வியர்த்துப் போனாள். அவனும் சந்தோஷத்தோடு சிரித்தபடி வாசற்புறம் வரவும், சகுந்தலா உள் நுழையவும் சரியாக இருந்தது. அவளைப் பார்த்தவ னிடம் ஒருவித திணறல்.

''வாம்மா... ஏன் இவ்வளவு லேட்?'' சாரங்கநாதன் கேள்விகூட அவள் காதில் விழவில்லை. அவனோ அவள் பார்ப்பது தெரிந்து வழிசலாக சிரிக்கத் தொடங்கினான். பின்,

''சாரைப் பார்க்க வந்தேன். நான் சாரோட ஸ்டூடண்ட்'' என்று இழுத்தான்.

"சரி, வீட்டுக்குள்ள என்ன வேலை உங்களுக்கு?"

"இருமலா இருந்தது வெந்நீர் குடிக்கப் போனேன்."

"அட, நான்தாம்மா வெந்நீர் குடிக்கும்படி சொன்னேன்..." என்று சாரங்கநாதனும் இடையிட்டார்.

"அப்ப நான் வரேன் சார்!"

"வெந்நீர் சாப்பிட்டியா?"

"சாப்பிட்டேன் சார்.. சாப்பிட்டேன்.. ரொம்ப நன்றி சார்."

"நல்லது... பார்த்து தொழில் பண்ணு..."

"சரிங்க சார்."

அவன் ஏனோ விலகுவதிலேயே குறியாக இருந்து, அதேபோல விலகியும் போனான். அவளும் அவனை இதற்கு முன் எங்கோ பார்த்திருப்பது போலவும் உணர்ந்த வளாக கோயில் பிரசாதக் குங்குமத்தை சாரங்கநாதனிடம் நீட்டினாள்.

"திருவிளக்கு பூஜை நல்லபடி முடிஞ்சதாம்மா..."

"முடிஞ்சதுப்பா. அந்த பிரசாதம்தான் இது."

"நல்லதும்மா. உன் தங்கச்சிங்களுக்கும் உள்ள போய் கொடு."

"சரிப்பா."

பிரசாதத்தோடு உள்ளே நுழைந்தவளுக்கு சற்று அதிர்ச்சியாகக்கூட இருந்தது. விமலா தன்னையே மறந்த வளாக வீட்டுக் கூடத்து தூண்மேல் சாய்ந்தபடி நின்றிருந் தாள். பெண்களுக்கு ஆகவே ஆகாதது மயக்கம். பிரசவ வேதனையின்போதுகூட மயக்கம் ஆகாது என்பார்கள் சந்நியாசிகள். ஏன் என்றால், அது அவர்கள் வரையில் அவ்வளவு கொடுமையானது. சகுந்தலாவும் கேள்விப்பட்

டிருக்கிறாள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்தது போலத் தான் அவளுக்குள்ளும் ஒரு உணர்வு.

"விமலா!"

"....."

"ஏய் விமலா..." பலமாக அழைத்தபிறகே அவளும் திரும்பினாள்.

"என்னடி இது பகல் கனவா?"

"பகல் கனவா... சேச்சே.. சேச்சே.."

"என்ன சேச்சே.. ஆமா எங்க வெந்நீர்.. எனக்கும் ஒரு டம்ளர் கொடு. தொண்டையே சரி இல்லை."

"வெந்நீர்.. நான் எப்ப போட்டேன்."

"அப்ப இப்ப ஒருத்தன் வெந்நீர் குடிச்சிட்டுப் போறதா சொன்னதெல்லாம்?"

சகுந்தலா மடக்கவும், விமலா மிரளவும், சரியாக இருந்தது. கொல்லையில் இருந்து நிர்மலாவும் வந்து சேர்ந்து கொண்டாள்.

'வாயத் திறந்து பேசுடி... அந்த நபர் வெந்நீர் குடிச் சேன்னானே...'

"அதுவா... ஆமாமா... எனக்கு மறந்து போச்சு பார்.. இரு.. உனக்கும் போட்டு எடுத்துட்டு வரேன்" என்று சமாளிப்போடு உள்ளே ஓடினாள். சகுந்தலா முகம் வாடத் தொடங்கிவிட்டது.

தாயில்லாத வீடு!

தந்தையும் திண்ணையில் கிடக்கும் ஒரு அந்தக் கால மனிதர்.

ஹாலின் மையத்தில் மீனாட்சி படம் ஒன்று மட்டும்
அங்கு நடப்பதை எல்லாம் பார்த்தபடி...

சகுந்தலா அந்த படத்தைத்தான் பார்த்தாள்.

அதுவே, 'உன்னை நம்பித்தான் இருக்கிறேன்'
என்பதுபோல இருந்தது. அப்படியே குங்குமத்தை நிர்மலா
வுக்கும் விமலாவுக்கும்கூட இட்டுவிட்டாள்.

விமலா அடுப்படியில் அப்போதுதான் ஸ்டவ் பற்ற
வைத்துக் கொண்டிருந்தாள். அதுவே அவள் அந்தப் பக்கம்
வரவில்லை என்று சொன்னது.

சகுந்தலாவுக்கும் கொஞ்சம் சுருக்கென்றது.

வெந்நீர் போடாத நிலையில் போட்டதாக விமலா
ஏன் பொய் கூற வேண்டும். உள்ளே வந்துவிட்டு கள்
குடித்த குரங்கு போல வெளியேறிய அந்த நபர் யார்?
உண்மையில் அப்பாவின் மாணவனா... இல்லை?

சகுந்தலா பார்த்த விதமே விமலாவை உலுக்கி
விட்டது.

''யாருடி அது?''

'யாரு?''

''நான் உன்னை கேட்டா நீ என்னை கேட்கறியா?''

''நீ புரியாத மாதிரி கேட்டா?''

''இப்ப ஒருத்தன் உள்ள வந்துட்டுப் போறானே...
அவன்.''

''எனக்கு என்ன தெரியும். அதான் சொன்னானே
அப்பாவோட ஸ்டூடண்ட்டுன்னு...''

''விமலா உன் பேச்சும் பதிலும் சரியா இல்லடி...

சரியா இல்லை... நீ தடுமாறிக்கிட்டு பேசறதுல இருந்தே
ஏதோ தப்பு பண்றேன்னு நல்லா தெரியுது...''

சகுந்தலா குத்தலாக சொன்னதுதான் தாமதம்,
விமலாவிடம் ஊசிக் குத்துப்பட்டது போல ஒரு வலியும்
கோபமும்...

''சகுந்தலாக்கா... இப்ப நீ என்ன சொல்றே? அவன்
என்னைப் பார்க்க வந்த என் காதலன்னா?''

ஆவேசமாகவே கேட்டாள் விமலா! சகுந்தலாவுக்கே
அது அதிர்ச்சிதான்.

''ஆமாம்க்கா... அவன் என் காதலன்தான்! உனக்கு
எப்ப கல்யாணம் ஆகும், லைன் எப்ப க்ளியர் ஆகும்னு
தான் நானும் காத்துக்கிட்டிருக்கேன். நீ போன பிறகு அப்பா
எனக்கும் நிர்மலாவுக்கும் எல்லாம் நல்ல மாப்பிள்ளை
பார்த்து கல்யாணம் பண்ணிக் கொடுப்பார்ங்கற நம்பிக்கை
எல்லாம் எனக்கு சுத்தமா இல்லை. அதனாலதான் என்னைக்
காதலிக்கிறவரை நானும் காதலிக்கறேன். எனக்கு வேற
வழி?''

விமலா கேட்ட விதமும் தொனியும் சகுந்தலாவுக்கு
அவள் கன்னத்தில் அறைந்தது போலவே இருந்தது. நல்ல
வேளை... விமலா பேசியது வெளியே திண்ணையில்
சாரங்கநாதன் காதுகளில் விழுந்து விடவில்லை!

6

'மீனாட்சி தன் கண்களாலேயே அனைவருக்கும்
அருள்வதாந்தான், தனியாக கையை வரம் தருவது போல
அவள் காட்டிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, வண்ணக்
கிளியை கையில் ஏந்திக் கொண்டிருக்கிறாள்! அவள்

பார்த்துக் கொண்டேயிருப்பதால் அவள் பார்வையில் இருந்து ஒருவரும் தப்பி விட முடியாது.

மீனாட்சிக்கு சியாமளா என்றும், ராஜமாதங்கி என்றும்கூட வேறு பெயர்கள் உண்டு.

பொதுவில் மதுரை நகருக்கு வேறு எங்கும் இல்லாத பல சிறப்புகளில் ஒன்று. இந்த உலகையே தன் அருளினால் ஆட்சி செய்யும் மகாசக்தி.. ஒரு பெண்ணாக அவதாரம் எடுத்து வந்து, இந்த நகரையும் ஆட்சி செய்ததுதான்.

அது மட்டுமல்ல...

ஒருமுறையல்ல, இருமுறையல்ல... பலமுறை அந்த இறைவன் நேரில் பிரத்யட்சமான தலமும் மதுரைதான்.

எந்த ஒரு ஆலயத்தில் கல்லால் வடிக்கப்பட்ட நடராஜ சிற்பம் உள்ளதோ... அங்கெல்லாம் இறைவன் நேரில் பிரசன்னமாகியிருக்கிறான் என்பதே சத்தியம்!'

விமலா, சகுந்தலாவைப் பார்த்து அப்படி ஒரு கேள்வி கேட்பாள் என்று சகுந்தலா கொஞ்சம்கூட எதிர் பார்க்கவில்லை. தன் தங்கைகள் இருவரும் வாயில்லாப் பூச்சிகள், அப்பாவிகள் என்றுதான் அவளுக்கு ஒரு அபிப் பிராயம் இருந்தது.

அதை விமலா ஒரே அடியாக அடித்து நொறுக்கிவிட் டிருந்தாள். அவள் எழுப்பிய கேள்விகளும்கூட சகுந்தலா மனதைக் குத்தத் தொடங்கிவிட்டன.

'உனக்கு எப்ப கல்யாணம் ஆகும், லைன் க்ளியர் ஆகும்னுதான் காத்துக்கிட்டிருக்கேன். நீ போன பிறகு அப்பா எனக்கும், நிர்மலாவுக்கும் எல்லாம் நல்ல மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணிக் கொடுப்பார்ங்கற நம்பிக்கை

எனக்கு சுத்தமா இல்லை. அதனாலதான் என்னை காதலிக் கிறவரை நானும் காதலிக்கறேன்' என்று அவள் சொன்ன தற்கு என்ன பதில் சொல்வது என்றும் தெரியவில்லை.

மெல்ல நிர்மலாவும் வந்து நின்றாள்.

கண்கலங்கி விட்ட சகுந்தலாவை பார்த்தவள்,

''அக்கா...'' என்றாள் இதமான குரலில்.

''என்ன நிர்மலா... நீயும் யாரையாவது லவ் பண்றியா?'' சகுந்தலா உடைந்துபோன குரலில் கேட்டது அவளை என்னவோ செய்தது.

''அக்கா! அப்படி எல்லாம் சொல்லாதக்கா.. நான் உன் தங்கச்சிக்கா, எனக்கு காதல்லாம் வேண்டாம்கா...''

''ஏன் நிர்மலா... உனக்கு அப்பா மேல எதை வெச்சு நம்பிக்கை?''

''அப்பாவை விடுக்கா... அவர் பாவம்! நான் உன்னை நம்பறேன்கா!''

''என்னை நம்பறியா? என்கிட்ட என்ன இருக்கு?''

''உன்கிட்ட அந்த மீனாட்சி இருக்காளே?''

நிர்மலா சொன்னது சகுந்தலாவை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

மளுக்கென்று துளிர்த்துவிட்ட பரவசக் கண்ணீரோடு பதிலுக்கு நிர்மலாவைப் பார்த்தாள் சகுந்தலா.

''நீ கலங்காதக்கா... எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்..''

நிர்மலாவிடம் வாஞ்சை கொப்பளித்தது. ஆனால், விமலா அதற்கு மேல் அங்கே நிற்க விரும்பாதவள் போல விலகிவிட்டாள்!

இரவு நேரம்...

எல்லோரும் படுக்கப் போய்விட்டார்கள். மொட்டை மாடியில் மதியம் போல மிளகாய் வத்தலை காய வைக்கச் சென்றது சகுந்தலாவுக்கு நினைவுக்கு வந்தது. எடுத்து வருவதற்காக அவளே மாடிக்கு சென்றாள். சிலுசிலுவென்று காற்று...

மிளகாய் வத்தல் அந்த ஈரக்காற்றில் திரும்ப நமுத்துப் போயிருந்தது.

அதை எடுத்துக் கொண்டு நிமிரவும், எங்கிருந்தோ யாரோ கிசுகிசுப்பது போல சப்தம் கேட்டது.

கொஞ்சம் அதிர்ந்தவள் நாலாபக்கமும் பார்த்தாள்.

பக்கத்து வீட்டு மாடியில் அந்த வீட்டுக்காரப் பையன் தான், தன் வீட்டுக்கு வந்திருக்கும் தன் அத்தை மகளுடன் ரகசியமாக குழைந்து கொண்டிருந்தான்.

சகுந்தலாவுக்கு அதை ரசிப்பதர், இல்லை தலையில் அடித்துக் கொள்வதா என்று தெரியவில்லை.

அவர்கள் வயசு அப்படி? அதே வயதுதான் அவளுக்கும் ஆகிறது.

ஆனால், ஒரு தாயாகிவிட்டவளைப் போன்ற பொறுப்புணர்ச்சியோடுதான் எதையும் பார்க்க வேண்டியுள்ளது. பெற்றவள் நிர்மலாவை பெற்றுப் போட்டுவிட்ட கையோடு, போய்ச் சேர்ந்ததற்கு யாரை நோக முடியும்?

மிளகாய் முறத்தை அப்படியே வைத்துவிட்டு மாடியில் இருந்தபடி, தொலைதூரத்தில் தெரியும் மீனாட்சி யம்மன் கோயில் கோபுரத்தை பார்த்தாள்.

தெற்கு கோபுரம் மின்விளக்கு அலங்காரத்தோடு

பளிச்சென்று தெரிந்தது. நிர்மலா சொன்னதும் நினைவுக்கு வந்தது.

'அப்பாவை விடுக்கா... அவர் பாவம். எனக்கு நீ இருக்கே.. உனக்குள்ள மீனாட்சியிருக்கா!'

அவள் சொன்னது அவளது நம்பிக்கையாலா... இல்லை அதுதான் சத்தியமான நிஜமா? சகுந்தலாவின் கண்களில் நீர் சரசரவென்று பெருகத் தொடங்கியது.

அந்த இருளில் மொட்டை மாடியில் இருந்தபடியே கைகளை கூப்பினாள்.

'அம்மா... எனக்காக இல்லை. என் தங்கையின் நம்பிக்கைக்காகவாவது நீ எனக்கு அருள் செய்துதான் தீர வேண்டும்!'

அவளுக்குள் உருக்கமான வேண்டுதல்!

சுந்தரேசன் குளித்து முடித்த நிலையில் கோயிலுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான். ஹாலில் ஈஸிசேரில் சாய்ந்த நிலையில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார் அவன் அப்பா சங்கரராமன்.

தன்னை தாண்டிக் கொண்டு சென்றவனை ஏனோ முறைத்துப் பார்த்தார். அவனும் கவனித்தான்.

"எங்கடா கிளம்பிட்டே?"

"கோயிலுக்குப்பா..."

"பெரிய குமரகுருபரர்னு நினைப்பா... நீ கோயிலுக்கு போகலைன்னா அந்த மீனாட்சி கோயிலை விட்டே ஓடிப்போயிடுவாளோ?"

"அப்பா..."

"என்ன அப்பா... இது உழைக்கற வயசுடா... பக்தி செலுத்தறதுக்குன்னு ஒரு கால நேரம் இருக்கு..."

"அப்பா! நான் உழைக்கத் தயாரா இல்லைன்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"உழைக்கத் தயாரா இருக்கிறவனுக்கு கோயில்ல என்ன வேலை? செய்யும் தொழில்தாண்டா எப்பவும் தெய்வமா இருக்கணும்."

"நானும் மறுக்கலை... நல்ல ஒரு வாய்ப்பை கேட்டுத் தாம்ப்பா அவளோட சந்நிதிக்கு போறேன்."

"மீனாட்சி என்ன தொழிற்சாலையா நடத்தறா... நீ கேட்ட உடனே உனக்கு வேலை தர..."

"போதும்ப்பா... நான் உங்களை மாதிரி பேசிக் கிட்டிருக்கேன். நீங்க என்ன மாதிரி பேசிக்கிட்டிருக்கீங்க..."

"சரியா சொன்னே... நீ வேலைக்குப் போய் சம்பாதிக்க ணும். ஆனா, நான் வேலைக்கு போய்க்கிட்டிருக்கேன். நீ தண்டச்சோறு தின்னுகிட்டு ஊரை சுத்திக்கிட்டிரு..."

"அப்பா! நான் சாப்பிட்டதுக்கெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமா உங்களுக்கு கொடுத்துடுவேம்ப்பா.. சத்தியமா கொடுத்துடுவேன்.."

"அதான் எப்படின்னு கேக்கறேன். இப்படியே டெய்லி கோயில்ல போய் குளத்தாங்கரைல உக்காந்துட்டு வந்தால் லாம் வேலை கிடைக்காது. அதுக்கு அதே கோயில்ல சுண்டல் வடை முறுக்கு விக்கலாம். நாலு காசாவது கிடைக் கும்."

ஊசி எடுத்து குத்துவது போல வார்த்தைகள்! சுந்தரேசன் மனதில் ரத்தம் வடிய ஆரம்பித்தது. மௌனமாக அதற்கு மேல் நின்றுகொண்டு அவரிடம் வாயடிக்காமல் வெளியே கிளம்பினான்.

பக்தியோடு கோயிலுக்குப் புறப்பட்டதில் இப்பொழுது அவனுள் ஒரு மாற்றம்! அந்த மீனாட்சிக்கு கொஞ்சமும் கருணையில்லாமல் போய்விட்டது போலவும், ஒரு சலிப்பு ணர்ச்சி. கோயிலுக்குப் புறப்பட்டவன் திசைமாறி மாரி யம்மன் கோயில் தெப்பக்குளம் நோக்கி நடக்கத் தொடங்கி விட்டான். அங்கேதான் நடுவிலே ஒரு பெரிய மைய மண்டபம் உண்டு. அங்கே போய் மல்லாந்து விடலாம். நல்ல காற்று வரும். ஜனநாட்டமும் அவ்வளவாக இருக்காது. எனவே, அவன் கால்களும் தெப்பக்குளம் நோக்கித்தான் நடைபோடத் தொடங்கின!

7

'அன்னை மீனாட்சியம்மன் ஆயத்துக்கு எவ்வளவோ சிறப்புகள்... அதில் மிக முக்கியமான சிறப்பே அது நவக் கிரகங்கள் ஒன்பதிற்கும் பரிகார தலமாக இருப்பதுதான்! சாதாரணமாக சில ஆயங்கள் ஏதாவது ஒரு கிரகத் திற்குத்தான் காரணமாக இடமாக இருக்கும். அந்த வகையில் திருப்பதி சந்திரனுக்கும், சபரிமலை சூரிய னுக்கும், திருவரங்கம் சுக்கிரனுக்கும், பழனி செவ்வாய்க் கும், திருச்செந்தூர் குருவுக்கும், மதுரையம்பதி புதனுக் கும், திருக்கடவூர் ராகுவுக்கும், பிள்ளையார்பட்டி கேது வுக்கும், நாமக்கல் சனிக்கும் என்று ஒரு கணக்கு உண்டு. இதுபோக தஞ்சை மாவட்டத்தில் நவக்கிரகங்களுக்கு என்று தனியே ஆதர்ச கோயில்கள் உண்டு. ஆனால், இந்த ஒன்பது கிரகங்களுமே மதுரை மீனாட்சியம்மன் ஆயத்தில் வெவ்வேறு விதமாக அடங்கிக் கிடக் கின்றன. எப்படித் தெரியுமா?

சமையலை முடித்துவிட்டு வந்து பார்த்தபோது விமலாவை காணவில்லை. நிர்மலா மட்டும் கீரை ஆய்ந்து கொண்டிருந்தாள்.

''எங்க விமலா..''

''கோயிலுக்கு போய்ட்டு வரதா சொன்னாக்கா...''

''கோயிலுக்கா?'' சகுந்தலா கேட்ட விதமும் சரி, நிர்மலா சொன்ன விதமும் சரி, மிகுந்த சமாளிப்பாக இருந்தது. அருகிலேயே உட்கார்ந்து கொண்டு பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தார் சாரங்கநாதன்!

அவரிடம் துளியும் சஞ்சலமோ சங்கடமோ இல்லை.

மகள்களின் மேல் அப்படி ஒரு நம்பிக்கையா, இல்லை இந்த காலத்துப் பெண்களைப் பற்றி அவருக்குத் துளியும் ஞானமில்லையா என்று அனுமானிப்பதே சிரமமாக இருந்தது. இந்தவேளை பார்த்து, அவரது சிநேகிதர் ஒருவர் கைத்தடியும் கையுமாக வந்து சேர்ந்தார். பேர் வேணுகோபால்.

''வா, வேணு...''

''என்ன சாரங்கநாதா... எப்படி இருக்கே?''

''என்னவோ இருக்கேன். நீ எப்படி இருக்கே?''

''இங்க மட்டும் என்ன வாழுது.'' அலுப்புடன் எதிரில் அமர்ந்தவர், சகுந்தலாவையும் நிர்மலாவையும் ஒரு பார்வை பார்த்தார்.

''உனக்கு ரெண்டு பொண்ணுங்களா. மூணு பேரா?''

''மூணு பேர்தான். என்ன திடீர்னு சந்தேகம்?''

''இல்ல, இங்க ரெண்டு பேர்தானே இருக்காங்க.. ஒருத்திக்கு கல்யாணம் பண்ணிட்டியோ?''

''நீ ஒண்ணுப்பா... இவதான் பெரியவ பேர் சகுந்தலா! நீ இப்ப கேக்கவும்தான் கல்யாண ஞாபகமே எனக்கு வருது..''

சாரங்கநாதன் உண்மையை ஒப்புக்கொண்டார். அதுவே சகுந்தலாவை கீறியது.

''அப்ப நான் வந்ததுலயும் ஒரு நல்லது இருக்குன்னு நினைக்கறேன்...''

''என்ன நல்லது... யாராச்சும் மாப்பிள்ளை இருக்கானா? சொல்லு...''

''மாப்பிள்ளைக்கென்ன... பசங்களுக்கா பஞ்சம்? ஆமா, நீ எவ்வளவு செய்வ?''

வேணுகோபால் வந்து கல்யாணப் பேச்செடுத்தது கூட ஆச்சரியம் இல்லை. இந்தக் கேள்வி ஆச்சரியம் மட்டுமில்லை... அதிர்ச்சியாகவும் இருந்தது சகுந்தலாவுக்கு.

''வேணுகோபால்... நான் ஒரு ரிட்டயர்ட் டீச்சர். என்கிட்ட என்னய்யா இருக்கும்?''

''அப்படின்னா... எப்படி இதுகள கரை சேர்ப்பே?''

''என்ன சொல்றே நீ. இவங்களுக்குன்னு ஒருத்தன் இனிமேலா பிறக்கப் போறான். எல்லாம் வருவாங்கப்பா..''

''வருவாங்க... எத்தனை பவுனுன்னும் கேட்பாங்க. அப்ப என்ன பதில் சொல்வே...''

''என் பொண்ணுங்களே பவுனுங்கதான்னு சொல்வேன்.''

''சரிதான்... நீ அந்த காலத்து மனுஷனாவே இருக்கியேப்பா...''

இருவரிடமும் சகுந்தலாவின் கல்யாணப் பேச்சு அகப்படவும் சகுந்தலாவுக்கு மனசே பாரமாகிவிட்டது. அங்கே நிற்கப் பிடிக்காமல் அடுப்படி நோக்கி சென்றாள். பின்னாலேயே போனாள் நிர்மலா.

''அக்கா...''

''என்னம்மா...''

''அப்பா என்னக்கா இப்படிப் பேசறார்...''

''என்ன பண்ணச் சொல்றே?''

''அவருக்குப் புரிய வைக்கணும்க்கா...''

''புரிஞ்சா கவலைதான் ஜாஸ்தியாகும். அவர் இப்ப கொஞ்சம் நிம்மதியா இருக்கார். அதை கெடுக்க வேண்டாம் நிர்மலா...''

''அவருக்கென்ன... இப்படியே எல்லா நாளும் இருக்க முடியுமா?''

''நீ என்ன சொல்ல வர்றே?''

''விமலா அந்த லவ்வரை பார்க்கப் போயிருக்கா.. அவன் காலைலயே பைக்ல ரெண்டு தடவை நம்ம தெரு பக்கம் வந்துட்டு போனான்.''

நிர்மலா சொன்ன நிஜம் சகுந்தலா மனதை ஊசியாக குத்தியது. நெஞ்சை அடைப்பது போலவும் இருந்தது.

''அந்த பையன் நல்லவன் மாதிரியும் தெரியலக்கா...''

நிர்மலா மேலும் பீதியைக் கிளப்பினாள்.

சகுந்தலா கண்ணிரண்டும் குற்றாலமாகி கொட்ட ஆரம்பித்துவிட்டது.

''நீதான்க்கா அவ விஷயத்துல ஏதாவது செய்யணும்!''

''என்ன செய்யலாம்னும் நீயே சொல்லேன்?''

''உன் கல்யாணம் நடக்கறவரை பொறுமையா இருக்க சொல்லுக்கா.''

''எனக்கு ஒருவேளை கல்யாணமே நடக்கலைன்னா?''

''அக்கா...''

''என்ன அக்கா... நானும் கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டா, அவ நேத்து ராத்திரி கேட்ட மாதிரி உங்க ரெண்டு பேருக்கும் யார் இருக்கா?''

''அதனால நீ கல்யாணமே செய்துக்கப் போற தில்லையாக்கா...''

''என் கல்யாணம் பத்தி நான் நினைக்கக்கூட போறதில்ல நிர்மலா.''

''அப்ப விமலா விஷயம்?''

''அந்த பையன் யார்... அவனுக்கு நிஜமா என்ன வேலைன்னு நீ கேட்டு சொல்றியா?''

''எதுக்குக்கா?''

''இனி அவளை பிரிக்க முடியாது. குறைந்தபட்சம் அதிக தப்பு பண்றதுக்குள்ள கல்யாணத்தை பண்ணி வெச்சிடலாம்தானே?''

''அதுக்குக்கூட கொஞ்சமாவது பணம் வேணுமே?''

''எல்லாத்துக்கும் நானே ஏதாவது செய்யறேன். நம்ம மாமிகூட அப்பளம் வடாம்னு போட்டு பிஸினஸ் பண்றது பத்தி ஒரு நாள் என்கிட்ட பேசினாங்க. இந்த தொழிலுக்கு கைராசியும், கைப்பக்குவமும்தான் தேவை. இடஒதுக்கீடு, பட்டப்படிப்பு, கம்யூனிட்டி சர்டிபிகேட்டுன்னு எதுவும் இதுக்கு தடையா இருக்காது இல்லியா?''

''அப்ப அப்பளம் பிஸினஸ் பண்ணப் போறியா?''

"வேற வழி. எதையாவது செய்துதானேம்மா தீரணும்?"

சகுந்தலா கேட்க, நிர்மலா விக்கித்துப் போய் அக்காவைப் பார்த்தாள்.

"அக்காரா.." என்று அவளது உதடிரண்டும் துடித்தன.

மாரியம்மன் கோயில் தெப்பக்குளம்!

அங்கே ஒரு வெள்ளைக்கார ஜோடி தன் ஹோண்டா கேமிராவால் சுற்றிச் சுற்றி வந்து படம் எடுத்துக் கொண்டிருந்தது.

பிரமாண்டமான தெப்பக்குளம்!

திருமலை நாயக்கரின் சாதனைக்கு சான்று அந்த குளம்.

அவர்தான் முந்நூத்தி அம்பது வருடத்திற்கு முன் மீனாட்சியம்மன் கோயிலை பெரிதாக எடுத்துக் கட்டி, ஆடி வீதிகளை எல்லாம் உருவாக்கியவர். அப்போது அவருக்கு கல்லும் மண்ணும் தேவைப்பட்டபோது, தோண்டிய குளம்தான் அந்த தெப்பக்குளம்.

குளத்துக்கு குளம் வெட்டியது போலவும் ஆயிற்று, கோயிலை கட்டியது போலவும் ஆயிற்று. வரலாற்றுக்குள் புகுந்து பார்த்தால் இன்னும்கூட அபூர்வமான தகவல்கள் கிடைக்கலாம்.

வெள்ளைக்கார ஜோடிக்கு அந்த குளம் பற்றி எல்லாம் தெளிவாக தெரிந்துகொள்ள ஆசை. கைடு என்று சொல்லிக் கொண்டு வந்திருந்த ஒருவன் இஷ்டத்துக்கும் கதை விட்டுக் கொண்டிருந்தான்.

"இந்த குளம் எங்க சிவன் சாமியே தோண்டின குளம். அவரோட சூலாயுதத்துல ஒரே குத்துதான். குளம் உருவாயிடிச்சு.." இப்படிப் போய்க் கொண்டிருந்தது அவன் அளப்பு.

கச்சிதமாக அப்போது அங்கே சுந்தரேசனும் போய்ச் சேர்ந்தான். கைடின் அளப்பு சுந்தரேசனை முகம் சிவக்க வைத்து விட்டது.

8

'உலகில் வேறு எங்கும் இல்லாத சில சிறப்புகள் மதுரையில் மட்டுமே உண்டு. மதுரையை பற்றி என்னும் போது ஒரு பெண் ஆட்சி செய்யுமிடம் என்றும் ஒரு உணர்வு ரீதியான விஷயம் சேர்ந்தே மனதில் எழும்பும்.

இந்த உலகில் இறைவன் நேரில் தோன்றிய இடங்கள் வெகுசிலவே! அதில் ஒருமுறைக்கு பலமுறை தோன்றிய இடமும், பெரும் திருவிளையாடல்கள் புரிந்ததும்கூட மதுரையம்பதியில்தான். ஆனாலும் அவைகளை விடவும் மனதில் அதிகம் தோன்றுவது மதுரை என்றாலே அங்கே பெண்ணுக்கே முதல் உரிமை. அவளே அங்கு அதிக சக்தி உடையவள் போன்ற எண்ணங்கள் தான்.

உண்மையும் அதுதான்!

இறைவன் இங்கே இறைவிக்காக தன்னையே பின்நிறுத்திக் கொண்டிருக்கிறான். அதனால்தானோ என்னவோ, அன்னையின் அருள் அலை காரணமாக, பிற நகரங்களைவிட இங்கே பெண்கள் தன் கணவருடன் நீண்ட ஆயுளும், சுமங்கலி கோலத்துடனும் வாழ்ந்து வருவதை காணலாம்.

அதிலும் அன்னையின் திருக்கல்யாண வைபவத்தில் பங்கு கொண்டு அன்று கிடைக்கும் பிரசாத குங்குமத்தை

நெற்றியில் அணிந்திடும் கன்னியர்களுக்கு எல்லாம் அவர்கள் மனம் போல மாங்கல்யம் அமையும் என்பது உறுதி!

இதனாலேயே இன்றும் திருக்கல்யாண உற்சவத்திற்கு கன்னிப் பெண்கள் திரண்டு வந்திடக் காணலாம்!

மாரியம்மன் தெப்பக்குளப் பகுதியில் நடுவில் உள்ள மண்டபத்தில் நின்றுகொண்டு வெள்ளைக்கார ஜோடி யிடம் அளந்துவிட்டுக் கொண்டிருந்த அந்த கைடு, சுந்தரேசன் முகத்தில் கோப ஜ்வாலையை உருவாக்கி யிருந்தான்.

பொய்களுக்கு எவ்வளவோ முகங்கள்! அவற்றில் கைடு விடும் பொய்கள் தனி ரகம்!

''யூ சீ ஹவ் பிக் திங் டேங்க்? இட் ஈஸ் இண்டியாஸ் வெரி பிக் டேங்க்.. த்ரூ அவுட் த இயர் வாட்டர் ஈஸ் இன் சைட்! திஸ் வாட்டர் ஹி என்டர்ட் ஈஸிலி இன் ஹைவன்!'' என்று ஒருவித பட்லர் இங்கிலீஷ், அந்த கைடிடம் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தது. அவர்களும் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தனர். சுந்தரேசனால் ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க முடியவில்லை.

''யோவ் ஃப்ராடு! என்னய்யா இது... நானும் பார்த்துக்கிட்டு இருக்கேன். புளுகிகிட்டே போறியேய்யா... வெள்ளைக்காரங்க யார்கிட்ட போய் கேக்கப் போறாங்கற நினைப்பா?

மேல்நாட்டுல இருந்து வர்றவங்ககிட்டதான்யா நாம சத்தியத்தையும், உண்மையையும் பேசணும். இந்த குளத்துல உங்களுக்கு வருஷம் பூரா தண்ணி இருக்குமாக்கும்? இதைவிட ஒரு பொய் இருக்க முடியுமாய்யா? ஜீவநதிங்கற

காவேரிலயே வருஷம் முழுக்க தண்ணீர் இருக்கிறதில் லையே. பத்தாததுக்கு இதை குடிச்சாதான் சொர்க்கத்துல இடம் கிடைக்கும்கறே. சொர்க்கத்துலயா ஆஸ்பத்திரில யாய்யா?''

சுந்தரேசன் விருவிருவென்று ஒரு பிடிபிடித்தான். கைடு முகம் வெளிறிவிட்டது. இருந்தும் சமாளிக்கப் பார்த் தான்.

''பங்காளி... இப்படி எல்லாம் சொன்னாதான் மதிப் பாங்க பங்காளி. நமக்கு டிப்ஸும் கூட கிடைக்கும். இது நம்ம ஊர் காதல் ஜோடிங்க கூடிக் களையற இடம்னா மதிப்பாங்களா?''

''இதோ பார்... இல்லாத பெருமையை ஏன்யா சொல்றே... இருக்கறதை சொல்லு..''

''இதுக்குப் பின்னால அப்படி என்ன பெருமை இருக்கு?''

''அதுகூட தெரியல... நீ எல்லாம் கைடாயிட்டே... கொடுமைய்யா...''

''அட, அது என்னன்னுதான் சொல்லேன் பங்காளி!''

''இது திருமலை நாயக்கர் வெட்டின குளம். இப்ப இரண்டாயிரத்து ஏழாம் வருஷம் நடக்குது. சரியா ஆயிரத்து அறுநூத்தி முப்பத்தஞ்சாம் வருஷம், அதாவது முந்நூத்தி எழுவத்திரண்டு வருஷத்துக்கு முன்னாடி வெட்டப்பட்ட குளம் இது. குளம் வெட்டி தண்ணி தேக்கி ஊரைக் காப்பாத் தணுங்கறது நாயக்கரோட எண்ணமில்லை.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை சுத்தி, ஆடி வீதியும், அப்படியே மதில் சுவரும், அதுபோக நாயக்கர் மகாலும் கட்ட நாயக்கருக்கு மண் தேவைப்பட்டது.

அதற்காக தோண்டப்பட்ட இடத்தைதான் அவர் குளமாக
வும் மாத்தினாரு.

பக்கத்துலயே அனுப்பானடிங்கற கிராமம். அந்த
பக்கம் ஐராவதநல்லூர், மணலூர் இந்த கிராமத்துக்காரங்க
தான் இந்த குளம் வெட்டும்போது வேலை செய்தவங்க.

அதாவது, இந்த குளத்தை வெட்டும்போது கிடைச்ச
மண்ணை வரிசையாக ஒரு அடிக்கு ஒருத்தர் நின்னு
கைமாத்திவிட்டு, அது இப்ப இருக்கற நாயக்கர் மகால்
வரை போய்ச் சேர்ந்தது. அதாவது, அடி அடியா அனுப்பிய
மண்ணாலதான் அரண்மனையே உருவானது. அதனால்
தான் அனுப்பானடிங்கற பேர் வந்ததாகவும் சொல்வாங்க.
தோண்டத் தோண்ட தண்ணியும் வந்தது. ஒரு கட்டத்துல
தண்ணி அதிகரிக்கவும், அதை வெளியேத்த கால்வாய்
வெட்டி அந்தக் கால்வாயைக் கொண்டு போய் வைகை
ஆத்துல சேர்த்தாங்க.

ஆனா, இந்தக் குளத்தை பார்க்கறவங்க வைகை
ஆத்துல இருந்துதான் இந்த குளத்துக்கு தண்ணி வர்றதா
சொல்வாங்க. உண்மை அது இல்லை. இப்ப காலம் மாறிப்
போய் வைகைல தண்ணி வந்தாதான் குளத்துக்கும் தண்
ணின்னு ஆயிடிச்சு.

இவ்வளவு பெரிய குளத்தை வெட்டிட்டு, அதை
சும்மா போட்டு வெச்சா மதிப்பு இருக்காதுன்னு, இந்த குளத்
துல சாமியோட தெப்பம் மிதக்கிற தெப்ப உற்சவத்துக்கும்
நாயக்கர் காலத்துலயே ஏற்பாடு பண்ணாங்க.

இந்தக் குளம் தோண்டும்போது கிடைச்ச ஒரு பெரிய
பாறை, பார்க்கறதுக்கு பிள்ளையார் மாதிரியே இருந்தது.
அதை சிற்பிகளை விட்டு நல்லபடியா செதுக்கி மீனாட்சி
யம்மன் கோயிலுக்குள்ள முக்குறுணி விநாயகரா கொண்டு
போய் உட்கார வெச்சதும் திருமலை நாயக்கர்தான்!

இதுதான் இந்தக் குளத்தோட வரலாறு. இதுக்கு
மாரியம்மன் கோயில் தெப்பக்குளம்னும் ஒரு பேர் உண்டு.
காரணம், அதோ இருக்கற மாரியம்மன் கோயில்தான்.

அந்த காலத்துல ஊர் எல்லைலதான் மாரியம்மன்
கோயில் இருந்தது. மாரியம்மன்னா மழைக்கு உரிய தெய்
வம்னு அர்த்தம்.

மாரின்னா மழை!

அதுக்கு உரிய தெய்வம்தான் மாரியம்மன். அவள்
உருவத்தைப் பார்த்தா கறுப்பா மழை மேகம் போலவே
இருப்பா. மழை பெய்ய வெயில் வேணும். அதாவது
வெப்பம். வெப்பம் இருந்தாதான் பூமியிலுள்ள நீர்
ஆவியாகி மேகமாகும். மேகம் குளிர்ந்தா மழை பெய்யும்.
மாரியம்மனும் நம்ம பாவ நெருப்பை வாங்கிக்கிட்டு
வெப்பமா இருக்கிறவ. அவளுக்கு அபிஷேக ஆராதனை
பண்ணும்போது குளிர்ந்து போறா... பூமியில ஒரு கோயி
லுக்குள்ள நடக்கற விளைவு, வானத்துல மழையா எதி
ரொலிக்குது. அப்படி மழை பெய்யும்போது பெரிய மழை
யால ஊர்ல வெள்ளம் வந்துடக்கூடாதுன்னும் குளங்களை
வெட்டி வெச்சாங்க.

இந்த தெப்பக்குளம் ஒவ்வொரு முறை நிரம்பி
வழியறதும் இந்த மாரியம்மன் கருணையால்தான். இதுதான்
அடிப்படை விஷயம்! எனக்கு தெரிஞ்ச அவ்வளவையும்
சொல்லிட்டேன். இனியாவது இந்த உண்மைகளை சொல்லி
பிழைக்கற வழிய பாரு.

பொய் முதல்ல பெரிய அளவுல உதவி செய்யற
மாதிரி தெரியும். பின்னால அதுவே பெரிய விரோதியா
யிடும். விவரம் தெரிஞ்ச வெள்ளைக்காரங்க கிட்ட மட்டும்
நீ சிக்கினேன்னா அவ்வளவுதான். உன்னை பத்தி போலீஸ்
கம்ப்ளைண்டே பண்ணிடுவாங்க.''

சுந்தரேசன் ஒரு பெரிய லெக்சரே அடித்து முடித்தான்.
கைடு முகத்தில் ஈயாட்டமில்லை. அதேசமயம் வெள்ளை
கார ஜோடியில், வெள்ளைக்காரர் பெரிதாகக் கைதட்டினார்.

சுந்தரேசனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

''வெல்டன் சார்... வெல்டன். நல்லா சொன்னீங்க.'' என்று அவர் தமிழில் பேசவும், அந்த ஆச்சரியம் இரு மடங்காகிவிட்டது.

''சார்! உங்களுக்கு தமிழ் தெரியுமா?''

''உம்... நான் தமிழ்ல பி.ஹெச்டி-யே பண்ண ஒரு வெளிநாட்டு மாணவன். என் பேர் லாரன்ஸ். இவ என் மனைவி கிளரொ! எங்களுக்கு இந்தியாதான் ரொம்ப பிடிச்ச கன்ட்ரி. அதுலயும் தமிழ்னா எங்களுக்கு ரொம்ப ரொம்ப இஷ்டம்...''

லாரன்ஸ் சகஜமான ஒரு தமிழரைப் போல பேசியது சுந்தரேசனை மேலும் திக்குமுக்காட வைத்துவிட்டது.

அந்த கைடுக்கு உயிரே போனது போல் இருந்தது.

''இந்த கைடுன்னு இல்ல... பெரும்பாலான கைடுகள் இப்படித்தான் இருக்காங்க. பணத்துக்காக இந்த லைனுக்கு வந்துடறதாலயும், திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தை பேச வேண்டி இருக்கறதாலயும் அவங்களுக்கே ஒரு அலுப்பு ஏற்பட்டு கண்டபடி கதை விட ஆரம்பிச்சிடறாங்க. இட்ஸ் ஓகே! இருந்தாலும் நீங்க சொன்ன தகவல்கள் எங்களுக்கு ரொம்ப புதுசு. உங்களைப் பார்த்தா ஒரு பெரிய ஆராய்ச்சியாளர் மாதிரி தெரியுது. நீங்க ஆராய்ச்சியாளரா?''

அந்த வெள்ளைக்கார ஜோடி கேட்டபடி பக்கத்து கிரானைட் பெஞ்ச் மேல் அமர்ந்தது. புளுகிய கைடு நைஸாக நழுவிவிட்டான். சுந்தரேசன் மட்டும் அந்த வெள்ளைக்கார ஜோடி கேட்டதற்காக சிரித்தான்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''சிரிக்காம என்ன பண்ண... எனக்கும் ஆராய்ச்சிக்கும் ஒரு சம்பந்தமும் இல்ல மிஸ்டர் லாரன்ஸ். நான் ஒரு மியூஸிக் காலேஜ் ஸ்டூடண்ட். பாட்டுதான் என் உலகம். பாடணும், பாடணும், பாடிக்கிட்டே இருக்கணும். அப்படி பாடிக்கிட்டு இருக்கும்போது உயிரும் போயிடணும்கற அளவுக்கு பாட்டு மேல காதல் கொண்ட பாடகன் நான்!''

''வாவ்... வாட் எ டிஃப்ரெண்ட் பர்சனாலிட்டி..''

''டிஃப்ரண்ட் பர்சனாலிட்டி மட்டுமா... ரொம்ப பாவப் பட்ட ஜென்மமும்கூட.''

''வாட் டு யூ மீன்?''

''ஐ மீன், நான் ஒரு கடவுளால கைவிடப்பட்ட பாவி.''

''ஓ... நோ! அப்படி எல்லாம் இந்த பூமியில யாருமே இல்லை.''

''அதான் நான் இருக்கேனே மிஸ்டர் லாரன்ஸ்!''

''உங்க பிரச்னை என்ன?''

''உங்களுக்கு எதுக்கு மிஸ்டர் லாரன்ஸ். நீங்க எங்க விருந்தாளி. இந்த மதுரையை நல்லா என்ஜாய் பண்ணுங்க. வேணும்னா நான் உங்க கூட வரேன். இந்த குளத்தைவிட மீனாட்சி அம்மன் கோயில் எனக்கு அத்துப்படி! அந்த கோயிலையும் சுத்திக் காட்டறேன். என் டயம் உங்களுக்கு காவது பயன்படட்டுமே.''

''ரியலி?''

''இதுல உண்மையாங்கறதுக்கு இடமே இல்லை மிஸ்டர் லாரன்ஸ். நான் ஒரு வெட்டி ஆபீஸர்தான். அதனால எனக்கு எந்த வேலையும் தடைபட்டுற போறதில்லை.''

சுந்தரேசனிடம் வெறுப்பு பொங்கி வழிந்தது. ஆனால்
அந்த லாரன்ஸ் முகத்தில் பலவித தீர்மானங்கள்.

9

'மதுமை மீனாட்சியம்மன் ஆலயத்தை ஒரு சக்தி கோட்டையாகத்தான் அவள் பக்தர்கள் கருதுகின்றனர். உண்மையில் அது சக்திகோட்டை மட்டுமல்ல... பல அரிய சக்திகளும் அதனுள் அடங்கியுள்ளது. குறிப்பாக நவக்கிரகங்கள் அவ்வளவும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தங்களுக்கான ஜீவசக்தியோடு இதை ஒரு கிரகங்களுக்கான பரிகார தலமாகவும் ஆக்கியுள்ளனர்.

முதலில் இது தேவனால் கட்டப்பட்ட ஒரு ஆலயம். அடுத்து இது அமிர்த திவலையாலே ரட்சிக்கப்பட்ட ஒரு ஆலயமும்கூட, அந்த ஈசனுக்குரிய அவ்வளவு ஆலயங்களும் சந்திரனுக்கும் உரியவை. ஏன் என்றால், அந்த ஈசன் பிறையையே ஆபரணமாக சூடியவன். ஈசனின் அருள் பலத்தால்தான் நிலவானது பதினைந்து நாள் வளர்கிறது, பதினைந்து நாள் தேய்கிறது.

அடுத்து இதனுள் ஒன்றுக்கு மூன்றாக அந்த முருகப் பெருமானுக்கு சந்நிதிகள் உள்ளன. தமிழ்ச்சங்கம் கண்ட ஆலயமாகவும் இது இருப்பதாலும், தமிழ்ச் சங்கத் தலைவன் எனும் முறையில், முருக வேலாகிய செவ்வாய்க் கிரகத்துக்கும் இங்கே சிறப்பு வந்துவிடுகிறது.

புதன் கிரகத்துக்குரிய க்ஷேத்திரம் இது என்றும் கூறுவர். புதன் தன் தோஷ நிவர்த்தி ஒன்றிற்காக ஆலவாய் அண்ணலை வழிபட்டு, நிவர்த்தி பெற்றதாக

ஒரு புராணக் கதை உண்டு. அவ்வகையில் புதனுக்குரிய க்ஷேத்திரமும் இதுவே. நான்காவதாக குருவுக்குரிய க்ஷேத்திரமாகவும் இது கருதப்பட இந்த கோயிலில் அந்த இறைவன் தென்புறம் தட்சிணாமூர்த்தியாகவும், வடபுறம் சுந்தரானந்த சித்தராகவும் காட்சி தருகிறான். இரண்டுமே வழிகாட்டும் குருரூபங்கள்! எனவே, குரு பலமும் இங்கே வந்து விடுகிறது.

அடுத்து வெள்ளியாகிய சுக்கிரன்!

அந்த ஈசனுக்குரிய பஞ்ச சபையில் மாமதுரை வெள்ளியம்பலத் திருச்சபை ஆகும். எனவே, சுக்கிரபலமும் இதனால் வந்து விடுகிறது. அடுத்து சனி... எந்த ஒரு ஆலயத்தில் ஆஞ்சநேயனும், கணபதியும் பிரத்தியேகமாக பூஜிக்கப் படுகிறார்களோ அங்கே சனி சங்கடம் தீர்த்து பக்தர்களுக்கு நன்மையை மட்டும் தருபவனாக மாறிவிடுகிறான். இவ்வாலயத்தினும் அந்த கணபதி உருவில் பெரிதாகவும், பதினெட்டுப்படி அளவு கொள்ளும் கொழுக்கட்டை நிவேதனம் செய்யும் முக்குறுணிப் பிள்ளையாராக இருப்பதால் சனியின் சிறப்பும் வந்துவிடுகிறது. அன்னை சக்திக்குரிய அவ்வளவு தலங்களுமே ராகு அம்சம் கொண்டவை. பொதுவாகவே ஆலயம் என்பதே கேது வின் அம்சம் கொண்டவை. எனவே ராகு, கேது ஆகிய இருவரும்கூட வந்துவிடுகின்றனர். அடுத்து ஆத்ம காரனாகிய சூரியன்!

இந்த ஆலயத்துக்குள் அமைந்துள்ள பொற்றாமரை மலர்கள் மலர்ந்திடக் காரணமே சூரியன்தான். மலர்களை மலர்த்துவித்து இறைவனின் அன்றாட அர்ச்சனைக்கு உதவுவதை சூரியன் ஒரு பெரும் பாக்கியமாகவே கருது வதால் அந்த பொற்றாமரை மூலமாகவே சூரிய கிரகத்தின் அனுக்கிரகமும் வந்துவிடுகிறது.

இப்படி ஒன்பது கிரகங்களும் மீனாட்சியம்மை ஆலயத்தினுள் பக்தர்களுக்கு பெருங்கருணை புரிகின்றன.

பீரோவை திறந்து சர்டிபிகேட்டுகளை எடுத்து ஃபைல் ஒன்றில் வைத்தவளாக வெளியே கிளம்பிக் கொண்டிருந்தாள் சகுந்தலா. பார்த்துக் கொண்டே இருந்தாள் நிர்மலா!

எப்போதும் போல ஈஸிசேரும், தினமணி பேப்பருமாய் உட்கார்ந்திருந்தார் அவர்களின் அப்பா சாரநாதன்! விமலா மட்டும் தனியே ஒதுங்கி கைக்கு மருதாணி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெளியே புறப்பட்டுவிட்ட சகுந்தலாவை நிர்மலாவும் கேள்வி கேட்கத் தவறவில்லை.

''அக்கா!''

''உம்!''

''என்னக்கா இது... சர்டிபிகேட்டோட எங்கக்கா கிளம்பிட்டே?''

''பேங்க்ல லோன் வாங்கப் போறேன் நிர்மலா. அதுக்கு இந்த சர்டிபிகேட் தேவைப்படுது.''

''லோனா... எதுக்குக்கா?''

''என்ன நிர்மலா தெரியாத மாதிரி கேக்கறே... நான் தான் சொன்னேனே... அப்பளம், முறுக்குன்னு ஹோம் இண்டஸ்ட்ரீஸ் நடத்தப் போறேன்னு.''

''அக்கா! நீ கேட்டா லோன் கொடுத்துடுவாங்களா?''

''நம்ம மாமியோட அண்ணன்தான் பேங்க் மானேஜர். சுயவேலை முன்னேற்றத்துக்கு பேங்க்ல லோன் தரலாம்னு ரூல் இருக்காமே...''

''எவ்வளவுக்கா?''

''அவங்க நம்ம புராஜெக்ட்டோட அமைப்பை பார்த்துட்டு அதுக்கு தகுந்த மாதிரி தருவாங்கன்னு நினைக்கறேன்.''

''புராஜெக்ட் அமைப்புன்னா...''

''நம்ம ஹோம் இண்டஸ்ட்ரீயோட இடம், வேலை பார்க்கப் போறவங்க எண்ணிக்கை, எவ்வளவு சரக்கு போடப்போறோம், விக்கப் போறோம்... இப்படிப் பல விஷயங்கள்!''

''அக்கா! எனக்கே இதெல்லாம் புதுசாதான் இருக்கு. நீ என்னென்னமோ சொல்றியேக்கா...''

''நிர்மலா... என் சக்திக்கு முடிஞ்சதை பத்திதான் நான் சிந்திச்சிருக்கேன். முதல்ல இந்த சப்ஜெக்ட் பத்தி பேசும்போது மலைப்பாகத்தான் இருக்கும். ஆனா, நாளைக்கு வேலை நடக்கும்போது எல்லாம் கிளியர் ஆயிடும். நம்ம வீடுதான் இண்டஸ்ட்ரீ... அப்பாதான் மேனேஜர். மாமிதான் சரக்குக்கு ஏஜெண்ட். முதல்ல ஒரு லட்ச ரூபாய்க்கு முதல் போட்டு வியாபாரத்தை தொடங்க உத்தேசம். சிட்டில பத்து, பதினஞ்சு ஹோட்டல்கள். அப்புறம் ஒரு அம்பது மளிகைக்கடை. மாமி அதுக்கு பொறுப்பெடுத்துக்கிட்டாங்க. பணம் வந்து வேலையைத் தொடங்கி, சரக்கை அனுப்பற வரை கொஞ்சம் குழப்பமாத்தான் இருக்கும். போக போக சரியாயிடும்.''

சகுந்தலா, ஒரு தீர்மானமாக பேசிவிட்டு புறப்படுவதை விமலாவும் பார்த்துக் கொண்டே இருந்தாள். சகுந்தலா தலைமறையவும் நிர்மலாவிடம் வந்தவள்,

''என்னடி ஹோம் இண்டஸ்ட்ரீஸ்? அப்பளம், முறுக்குன்னுல்லாம் காதுல விழுந்துச்சே?''

''விழுந்துச்சா?''

"விழுவாமதானா வந்து கேக்கறேன்."

"நல்லது... கேட்டியே... அக்கா ஒரு ஹோம் இண்டஸ்ட்ரீ போடப் போறாங்க. மேல்கொண்டு வருமானத்துக்கு வழி பாக்கணும்ல."

"யார் பணம் தராங்களாம்?"

"பேங்க்ல!"

"இந்த பேங்க்காரங்களுக்கு அறிவே கிடையாது போகட்டும். அக்காவுக்கு அப்பளம், முறுக்கு பத்தி என்ன தெரியும்?"

"அது என்ன சந்திர மண்டலத்துக்கு போற சமாசாரமா என்ன... இல்ல தெரிஞ்சிக்கவே முடியாதுங்கறதுக்கு அது என்ன உன் மனசா?"

"என்னடி கிண்டலா?"

"எப்படி வேணா எடுத்துக்கோ. இந்த ஏற்பாடே ஒரு வகைல உன்னாலதான்!"

"என்னாலயா?"

திகைத்துப் போய் பார்த்தாள் விமலா.

விமலா திகைத்தாலும் நிர்மலா அசரவில்லை.

"என்னம்மா கண்ணு... எதுக்குன்னு புரியலையா?"

"புரியலையே... அக்கா ஹோம் இண்டஸ்ட்ரீஸ் போடறதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கே... சில சமயங்கள்ல ஒண்ணுக்கும் உதவாத முள் செடிகளாலகூட எதிர்பாராம ஒரு பயன் ஏற்படும். வீட்ல கேஸ் தீர்ந்து போய்ட்டா அடுப்பு எரிக்க அந்த முள்தான் பயன்படும். அப்படித்தான் இப்ப நீயும்."

"என்னடி உளறுறே... நான் முள்ளுன்னா, நீ யாரு?"

"கோபத்த பாரு... விஷயத்தை விவரமா சொல்றேன். கேட்டுக்கோ. நீ இப்ப எவனோ ஒருத்தன் பின்னாடி கூடவே சுத்திக்கிட்டிருக்கே. அப்பா உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் போறதில்லைங்கறதுலயும் ரொம்ப தெளிவா இருக்கே. ஓடிப் போயாவது வாழ்ந்து பார்த்துடணும்கறது உன் எண்ணம். அதான் அன்னிக்கு அக்காவையே தூக்கி எறிஞ்சுட்டே. அதுதான் அக்காவுக்கும் திருப்புமுனை... அப்படி ஒருவேளை ஓடிப்போயிட்டா அப்புறம் எங்க கதி?

அப்புறம் இந்த வீட்டுக்கே இப்ப இருக்கற வாத்தியார் வீடுங்கற அடையாளம் போய் 'ஓடிப்போனவ வீடு'ன்னு பேர் வந்திடும். அப்புறம் உன்னால நாங்களும் எவன் பின்னாலயாவது ஓடினாதான் வாழ முடியும்கற நிலை வந்துட்டா என்ன பண்றது? அதான் அக்கா இப்படி ஒரு ஏற்பாட்டுல இறங்கிட்டா. இதுல நிச்சயமா ஒரு வருமானம் கிடைக்கும். அப்புறமா யார்கிட்டயாவது போய் கடன் கேட்டாலும் சுயமா தொழில் செய்யறவங்கன்னு கடன் கொடுப்பாங்க. அப்படி கடன் கிடைச்ச நொடி நீ ஆசைப் படற பையனுக்கே உன்னை கட்டி வெச்சுட்டா, ஒரு தப்பை சரிசெய்துட்டா மாதிரி ஆயிடும்ல?"

நிர்மலா நீட்டி முழக்கினாலும் கேள்வியில் ஒரு நியாயம் இருந்தது. அது விமலாவையும் வாயடைக்க வைத்துவிட்டது.

"நிஜமாவா சொல்றே?" என்று திரும்பத் திரும்ப கேட்டாள்.

"சரி, பொய்யின்னே வெச்சுக்க... இதுக்கு மேல உனக்கு உண்மையை புரியவைக்க என்னால முடியாது..."

"அட என்னடி நீ... ஆமா லோன் கட்டாயம் கிடை
சிடுமா?"

"இப்ப கடன் வாங்கறவங்களுக்குத்தான் காலம்கறது
உனக்கு தெரியாதா? நீ சும்மா மனசுக்குள்ள நினைச்சாகூட
போதும். ஒரு பேங்க் ஏஜெண்ட் உன் முன்னால வந்து நி
னுடுவான். நீ சும்மா நினைச்சுத்தான் பாரேன்..."

நிர்மலா அவளை நன்றாகவே தூண்டினாள். விமலா
முகத்திலும் முதல் தடவையாக ஒரு நம்பிக்கை ஒளி, இடை
யிட்டது சாரங்கநாதன் குரல்...

"அம்மாடி சகுந்தலா..."

"இவர் ஒண்ணு... அக்கா வெளிய போனதுகூட
தெரியாம உக்காந்துகிட்டிருக்கார் பார்... இதோ வந்துட்
டேம்ப்பா..." நிர்மலா அவரை நோக்கி ஓடினாள்.

"சகுந்தலாவை கூப்பிட்டா நீ வந்து நிக்கறே?"

"அக்கா வெளியே போயிருக்காங்கப்பா.. என்ன
வேணும்?"

"மூக்குப்பொடி தீர்ந்து போச்சும்மா... கொஞ்சம்
வாங்கிட்டு வர்றியா?"

"சரிப்பா... ஏம்ப்பா அது இல்லாம ஒரு நாள்கூடவா
உங்களால இருக்க முடியாது?"

"ஏம்மா! போய் வாங்கிட்டு வர முடியாதுங்கறத
ஜாடையா சொல்றியா?"

"இல்லப்பா... அது கடைல இல்லேன்னா என்ன
பண்ணுவீங்க... அதான் கேட்டேன்."

"என்னைப் போல என்ன பண்றதுன்னே தெரியாத
பல கிழடுகளுக்கு அதுதாம்மா சுறுசுறுப்பான ஒரு தோழன்.

அதுக்குகூட தட்டுப்பாடு வந்துட்டா நாங்க வாழறதுல
துளிகூட அர்த்தமில்லை. அப்படியே வடக்க பார்த்து
உக்காந்து மூச்சை இழுத்துக்கிட்டு மனோ வைராக்கியத்
தோட உள்ள இழுத்த மூச்சை வெளியே விடாம நெஞ்சு
வெடிச்சு செத்துப்போக வேண்டியதுதான்."

சாரங்கநாதன் சொன்னது நிர்மலாவை நெஞ்சை நெகிழ
வைத்துவிட்டது. சுவாமி சந்நிதியில் நாலணா எட்டணாக்
கள் எப்பவும் இருக்கும். அதில் ஒரு இரண்டு ரூபாயை
எடுத்துக் கொண்டு பெட்டிக்கடை நோக்கிப் புறப்பட்டாள்.

நல்லவேளை...

மாமி தயாராக இருந்தாள். வைரக்கல் மூக்குத்தி
தோடு என்று அம்பாளாட்டம் மின்னினாள். பட்டுப் புடவை
மடிசாரில் அவளைப் பார்க்கும் யாருக்கும் கட்டாயமாக ஒரு
மரியாதை வரும்.

சகுந்தலா வரவும், போலாமோ என்று கேட்டபடி
வாசலுக்கே வந்துவிட்டாள்.

"என்ன மாமி.. ஏதாவது கல்யாணத்துக்கு கிளம்பிக்
கிட்டு இருக்கீங்களா. நான்தான் தப்பான நேரத்துல வந்துட்
டேனா?"

"சேச்சே... என்ன சகுந்தலா புரியாதவளா இருக்
கியே... நாம பேங்க்குக்கு கடன் வாங்கப் போறோம். கடன்
கொடுக்க நினைக்கற மேனேஜருக்கு நம்மளைப் பார்த்தா
ஒரு நம்பிக்கை வரணும். அதுக்குத்தான் இப்படி... இந்த
வைரத் தோடு எவ்வளவு தெரியுமோ உனக்கு. இரண்டு
தோடு மட்டும் ஒரு லட்ச ரூபா! இந்த மூக்குத்தி மட்டுமே
அறுபதாயிரம் ரூபா. இந்த புடவை ஒரு பத்தாயிரம்.

இதுபோக சங்கிலி வளையல்லாம் ஒரு முப்பதாயிர
மொத்தத்துல நானே இப்ப இரண்டு லட்ச ரூபாய்.

அப்படி இருக்க என்னைப் பார்த்து லோன் இல்லை
னோ, அப்புறமா வாங்கன்னோ சொல்ல மேனேஜருக்கு
மனசு வருமா?''

மாமி சரியாகத்தான் கேட்டாள். அவளுக்கு மாமி
யின் அக்கறை சிரிப்பை உண்டாக்கியிருந்தது.

''மாமி...'' என்று லேசாக கண்கலங்கிவிட்டாள்.

அடியே பைத்தியம்... எதுக்கு கண் கலங்கறே? நமக்கு
நிறைய வேலை இருக்குடி. நாம ரொம்ப தூரம் வேற போக
வேண்டியிருக்கு. அதுல நிறைய கட்டங்களும், சோதனை
ளும் வரலாம். அப்ப அழறதுக்காக கொஞ்சமாவது கண்
ணீரை ஸ்டாக் வெச்சுக்கோ. இப்பவே எல்லாத்தையும்
கொட்டிடாதே...'' என்றபடி மாமி கிளம்பவும், உள்ளே
டெலிபோன் ஒலிக்கவும் சரியாக இருந்தது. ஒரு
நிமிஷம் என்று உள்ளே ஓடினாள் மாமி. காதைக் கொடுத்
தவள் முகத்தில் கொலையைப் பார்த்துவிட்டது போல்
அதிர்ச்சி. போனை மெல்ல வைத்தவள் சகுந்தலா அருகில்
தயக்கமுடன் வந்து நின்றாள்.

''என்ன மாமி?''

''சகுந்தலா என்னால இப்ப உன்கூட பேங்குக்கு வர
முடியாது.''

''ஏன் மாமி?''

''என் அண்ணன் சுந்தர்ராஜன் கோயம்புத்தூர்ல கால
மாயிட்டான். ஹார்ட் அட்டாக்.''

''மாமி ஈஈஈ''

''நீ போ... நான் அப்புறமா வரேன். நீ போய் ஆக
வேண்டியத பாரு...''

''நீங்க இப்ப கோயமுத்தூர் போகணுமா?''

''பின்ன... அவன்தான் எனக்கு கல்யாணமே பண்ணி
வெச்சவன். முழுசா இன்னும் ஐம்பத்தைந்து வயசாகலை.''

மாமியின் கண்கள் பிழியப்பட்டது போல ஆயிற்று.
சகுந்தலா மாமியை சோகமாக பார்த்தபடியே கிளம்பினாள்.
முதலே கோணலாகிவிட்டது. இனி அடுத்தடுத்து?

10

'ஒன்பது கிரகங்களின் உறைவிடமான மதுரை
மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள பொற்றாமரைக்
குளம் ஒரு உலக அதிசயம். இன்றைக்கு உலகின்
அதிசயங்கள் ஏழு என்றும் அவை இருக்குமிடங்கள்
பற்றியும் ஒரு பார்வை நிலவி வருகிறது. உண்மையில்
உலக அதிசயங்களில் அன்னையின் ஆலயத்துக்கும்
பொற்றாமரைக் குளத்துக்கும் பெரும் பங்கு உண்டு.

அந்த குளத்தில் குளித்திராத புலவர்களே இல்லை.
பரணர், பாணர், கபிலர் முதல் கௌதமர், பிருங்கி,
தூனர் என்கிற முனிவர்கள் வரை பலரும் நீராடிய திருக்
குளம் அது.

அதுமட்டுமல்ல... உலகம் கொண்டாடும் திருக்
குறளை உலகுக்கு அடையாளம் காட்டியது அதுதான். பல
உலக இலக்கியங்களை அதனுள் உள்ள சங்கப்பலகை
தான் காத்து ரட்சித்தது. இப்பொழுதும் வாழ்வில் ஏழுத்
தாம், சித்தனையாம் ஒரு உயரிய நிலைக்கு செல்ல

விரும்புகின்றவர் எவராகினும் அவர்கள் சில நாழிகை நேரம் அந்தக் குளத்தின் கரையில் அமர்ந்திருந்து தியா னித்தால் போதும், அவர்கள் விருப்பம் வெகுவிரைவாக நிறைவேறும்!'

பேங்க்!

மேனேஜர் அறைக்கு வெளியே பெரும் கூட்டம். கட்டுகட்டாக சிலர் நோட்டுகளை எண்ணிக் கொண் டிருக்க, சிலர் கட்டிக் கொண்டிருக்க, மனித வாழ்க்கை யின் ஆதாரமான பணம் என்கிற விஷயம் அங்கே பல் வடிவங்களில் சகுந்தலாவின் கண்ணில் பட்டது. மேனேஜர் உள்ளே அழைக்கும் வரை காத்திருந்தவள், ஒருவர் தவ விட்ட நூறு ரூபாய் கட்டை இன்னொருவர் தன் பாக்கெ டில் தூக்கிப் போட்டுக் கொண்டு அந்த பேங்க்கை விட்டு ஓடுவது முதல் பலவித காட்சிகள்.

ஒரு வழியாக மேனேஜர் சகுந்தலாவை அழை தார். அவளும் போய் எதிரில் அமர்ந்தாள். சகுந்தலாவு இன்டர்வியூவுக்கு வந்தவளைப் போல ஃபைலை மு வைத்தாள்.

''இது என்னம்மா?''

''என்னைப் பத்தின ஃபைல் சார். என் ஸ்கூல் சர்டி பிகேட், மார்க் லிஸ்ட்.''

''என்னம்மா நீங்க... நாங்க என்ன உங்களை வேலைக்கா கூப்பிட்ருக்கோம்...'' சிரித்தார் மேனேஜர்.

''ஸாரி சார்... எதுக்கும் இருக்கட்டும்னு கொண்டு வந்தேன்.''

''இட்ஸ் ஓகே... ஆமா, உங்களுக்கு எவ்வளவு லோன் வேணும்?''

''தொடக்கத்துல ஐம்பதாயிரம் சார்...''

''அப்பளம், வடாம் பிஸினஸ்னு சொன்னீங்கல்ல...''

''ஆமாம் சார்...''

''ரைட்... உங்களுக்கு ஏதாவது பிராப்பர்ட்டி இருக்கா?''

''இல்ல சார்... நாங்களே வாடகை வீட்லதான் இருக் கோம்.''

''அப்ப எதை வெச்சும்மா பணம் கொடுக்கறது?''

''நம்பிக்கை சார்...''

''ஸாரிம்மா... நம்பிக்கை வெச்சு நான் லோன் தந்தா இந்த பேங்க் ஒரு மாசத்துல காணாம போயிடும். எங்க அனுபவத்துல கடன் வாங்கறவங்க யாருக்கும் பணத்தை திருப்பிச் செலுத்தும்போது மகிழ்ச்சி இல்லை. வேண்டா வெறுப்பா அவங்க அடமானப் பொருளுக்கு எதுவும் ஆயிடக்கூடாதேன்னுதான் பணம் கட்டறாங்க.''

''சார்! நான் அப்படி இல்லை...''

''இருக்கலாம். சட்டத்துல இடம் இல்லையே...''

''அப்ப என்னைப் போல ஏழைகள் சுயதொழில் செய்து முன்னுக்கு வர நினைக்கிறது வெறும் கனவுதானா?''

''நோ... நோ... நீங்க மந்திரி, இல்ல கலெக்டர் மாதிரி யார்கிட்டேயாவது ஒரு ரெகமண்டேஷனோட வாங்க. நான் இம்மீடியேட்டா கிராண்ட் பண்றேன்.''

''என்ன சார் நீங்க... என்னைப் போல இருக்கற ஒரு ஏழைக்கு எப்படி சார் மந்திரியும் கலெக்டரும் பழக்கமா இருக்க முடியும்?''

''அம்மாடி... பெத்த அப்பா அம்மாகிட்டகூட நீங்க சிரமம் இல்லாம பணத்த வாங்கிட முடியாது. இது

பப்ளிக்கோட பணத்தால செயல்படற பேங்க். நீ
பேசறது ரூல்ஸ். புரிஞ்சுக்குங்க. உங்க கேள்விகளை நீ
வேற யார்கிட்டேயாவது வெச்சுக்குங்க. இப்பவே இ
பேங்க்கோட வராக் கடன் எவ்வளவு தெரியுமா? கிட்
தட்ட தொண்ணூறு லட்ச ரூபா! அதையே எப்படிச் சமா
கிறதுன்னு தெரியாம நாங்க திணறிக்கிட்டு இருக்கோம்.''

மேனேஜர் அடுத்து எழுந்து போ என்று சொல்
விடுவார் என்பது சகுந்தலாவிற்கும் புரிந்தது. கண்கள
கண்ணீர் கட்டிக் கொண்டது. மெல்ல அங்கிருந்து கி
பினாள்.

மந்திரியும், கலெக்டரும் பழக்கமில்லைதான். ஆனா
மீனாட்சி இருக்கிறாளே? கால்கள் அவளது ஆலயம் நோக்கி
தான் நடக்கத் தொடங்கின!

மீனாட்சியம்மன் கோவில்!

சுந்தரேசன் அந்த வெள்ளைக்கார ஜோடிகளான
லாரன்சுக்கும் கிளாராவுக்கும் கோவிலை சுற்றிக் காட்டி
கொண்டிருந்தான். அவர்கள் பிரமித்திருந்தார்கள். பொற்
றாமரைக் குளம் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடந்தது
தான் கண்ணைக் கரித்தது. அதைப் பார்த்தபடியே பே
னான் சுந்தரேசன்.

''இந்த குளம் தான் மதுரைக்கே ஆதாரம்!

இதுல பொன்னாலயே தாமரை பூக்கும்... இந்த
பூவை பறிச்சு பூஜை செய்துதான் இந்திரன் சாப விமோ
சனம் பெற்றான். அவன் கட்டின கோவில்தான் இது! இந்த
உலகத்துல இருக்கற மற்ற அவ்வளவு கோயில்களையும்
ராஜாக்களும், அவருக்கு துணையா மக்களும் தான் கட்டி
னாங்க. ஆனால் தேவர்கள் பூ உலகத்துல கட்டின கோவில்
இது ஒண்ணுதான்! இந்த உலகத்துல கோடிக்கணக்கான

லிங்கங்கள் இருக்கு. அவ்வளவு லிங்கங்களும் வேர்விட்டு
அந்த வேர் இங்க இருக்கிற லிங்கத்துல வந்து முடியுது.
இங்க இருக்கற சோமசுந்தர லிங்கத்துக்கு அவ்வளவு
சிறப்பு. அந்த லிங்கத்தை பார்க்கும்போது நாம் நம்மையும்
அறியாம கோடான கோடி லிங்கங்களை பாக்கறோம்.
தரிசிக்கிறோம்.

இப்படிப்பட்ட கோவிலோட குளத்துக்குதான்
இன்னிக்கு இப்படி ஒரு நிலை...''

அவன் குரலில் வருத்தம் இழையோடியது. லாரன்
சிடமோ வேறு மாதிரி எண்ணம்.

''மிஸ்டர் சுந்தரேசன் நான் உங்கள ஒண்ணு கேக்க
லாமா?''

''தாராளமா...''

''இந்த உலகத்தை படைச்சு, உங்களையும் என்னை
யும் படைச்ச கடவுளுக்கு இந்த குளத்துல தண்ணி வர
வைக்கறது ஒரு விஷயமா?'' லாரன்ஸ் கேள்வி பொட்டில்
அடித்தது. என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை.
திணறினான். நியாயமான கேள்விதானே?

''சாரி... ஏதோ என் மனசுல பட்டுச்சு கேட்டேன்''
என்றார் லாரன்ஸ்.

''நோ... நோ... நீங்க கேட்டதுல தப்பில்ல... இந்த
குளத்துக்கு தண்ணி வரவழைக்கிறது மட்டுமில்ல... கடவுள்
ஏன் பல கெட்டவர்களுக்கு தண்டனை கொடுக்க மாட்
டேங்கறாரு. பல நல்லவங்கள ஏன் கஷ்டப்படுத்தறா
ருன்னு எனக்குள்ள இன்னும் நிறைய கேள்விகள் இருக்கு...
அதுலயும் இந்த மதுரைலதான் கடவுள் நேர்லயே வந்து
நடமாடியிருக்கார். ஒரு கிழவிக்காக மண் சுமந்து பிரம்படி
வாங்கியிருக்கார், ஒரு பஜனை பாட்டு பாட்றவருக்காக

விறகு வெட்டியா வந்துருக்காரு, ஒரு ஏழை புலவனுக்காக தானே புலவனா வந்து பாடியிருக்கார்... ஆனா இப்ப எனக்காகவும் யாருக்காகவும் அவர் வர்றதேயில்லை. ஏன்னு எனக்கும் தெரியலை...''

சுந்தரேசன் லாரன்ஸ் போட்ட கோட்டை ரோடாக்குவது போல பேசி முடித்தான்.

''ஒருவேளை கடவுள்ங்கறவர் மனுஷனோட அழகான கற்பனைன்னு சொன்னதுதான் உண்மையோ?'' லாரன்சிடம் அடுத்த கேள்வி.

''தெரியலை சார்... ஆனா கடவுள் மட்டும் கற்பனையானா மிக அதிகம் பாதிக்கப்பட்றது நானாதான் இருப்பேன்''

''அது எப்படி?''

''அவர் இருக்கார்... நிச்சயம் இன்னிக்கு இல்லை நாளைக்கு என்னை கைதூக்கி விட்றுவார்ங்கற நம்பிக்கைல நான் இருக்கேன். அவர் இல்லேன்னா அப்புறம் எனக்கு யார் இருக்கா?'' அந்த கேள்வியை கேட்கும்போதே சுந்தரேசனுக்கு நெஞ்சை அடைத்தது.

''நம்பள நாமதான் பாத்துக்கணும் மிஸ்டர் சுந்தரேசன். ஒரு நாய் பூனை கூட யாரையும் டிபெண்ட் பண்றதில்ல. ஏதோ கிடைச்சத சாப்ட்டுட்டு, அதெல்லாம் வாழறதில்லையா... அதுங்களால முடியும், ஆறறிவுள்ள மனுஷங்களால முடியாதா?''

''மிருகமும் மனுஷனும் ஒண்ணா மிஸ்டர் லாரன்ஸ்? அதுக்கென்ன துணி மணி வாங்கனுமா? மான அவமானம் உண்டா? டெலிபோன் பில் கட்டணுமா? எலக்ட்ரிக் பில் கட்டணுமா? அதுக்கு என்ன கமிட்மெண்ட்?''

சுந்தரேசன் கேள்வியும் கொஞ்சம் லாரன்ஸை இடித்தது. பேசிக் கொண்டே நடந்தான். லாரன்சின் ஜோடியான கிளாரா கேமராவால் புகைப்படம் எடுத்தபடியே நடந்தாள். அவர்கள் இருவர் பேசிக் கொள்வதிலும் அவளுக்கு உடன்பாடு இல்லாதது போல் இருந்தது.

அப்போது எதிரில் சகுந்தலா வந்து கொண்டிருந்தாள். சுந்தரேசனைப் பார்க்கவும் நின்று சிரித்தாள். அவனும் பதிலுக்கு சிரித்தான். அவளது தலை வகிடெடுத்த பின்னலும் நூல் புடவையும், முகத்தில் அவளிடம் தென்பட்ட சாந்தமும் எதனாலோ கிளாராவுக்கு மிக பிடித்து விட்டிருந்தது.

சுந்தரேசன் அவளிடம் பேச்சு கொடுத்தான்.

''என்னங்க... தினசரி கோவிலுக்கு வருவீங்களா?''

''முடிஞ்சப்பல்லாம் வருவேன்... ஆமா இவங்க யார்? பாத்தா வெள்ளைக்காரங்க மாதிரி தெரியுது...''

''மாதிரியா... அவங்களே தான் - பாத்து பேசுங்க - ரெண்டு பேரும் நல்லா தமிழ் பேசுவாங்க...''

''ஆமாம்... நாங்க ஓரளவு தமிழ் பேசுவோம்... பை த பை யு லுக் ஸோ ஸ்மார்ட் அண்ட் க்யூட்... யூ ஹேட் எ வெரி லாங் ஹேர்'' என்று கிளாரா சிலாகித்து சிரித்தாள். அதைக் கேட்டு சகுந்தலாவுக்கு சற்று கூச்சமாகிவிட்டது.

''ஒரு போட்டோ எடுத்துக்கறேன், ப்ளீஸ்...'' என்று சகுந்தலாவையும் சுந்தரேசனையும் ஒருசேர போட்டோ எடுத்தாள். அது சகுந்தலாவை என்னவோ செய்தது.

''ஆமாம் நீங்க என்ன பண்றீங்க?'' லாரன்ஸ் நட்போடு கேட்டார்.

"நான்... நான்... சும்மா தான் இருக்கேன்..."

"சும்மா... தட் மீன்ஸ் யூஸ்லெஸ்... ஆம் ஐ கரெக்ட்...?"

"நோ மிஸ்டர் லாரன்ஸ்... சும்மா மீன்ஸ் வெரி லெஸ்... நாட் யூஸ்லெஸ்... ஐ ஆம் ஆல்ஸோ எ 'சும்மா' மேன்..."

"ஏன் அப்படி.... ஏதாவது செய்யலாம் இல்லையா?"

"நான் தயார்... ஆனா என்னை யூஸ் பண்ணிக்கத்தான் யாரும் தயாரா இல்லை..."

"வாட் டு யூ மீன்...?"

"யாரும் வேலை தர மாட்டேங்கறாங்கன்னு சொல்றேன்..." அந்த பேச்சே சகுந்தலா முகத்தை கோணச் செய்தது. "சார் நான் வரேன். எனக்கு நேரமாச்சு" என்று நழுவப் பார்த்தாள்.

"ஆமாம் ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க..?"

"வேலை இல்லேங்கறது தான் என் பிரச்சினையும். மனுஷங்க எல்லாரும் கைவிட்டுட்டாங்க. அதான் தெய்வத்துகிட்ட வந்தேன்"

நம்ம கேஸ் தான் போல இருக்கு... "போங்க - போய் எனக்கும் சேர்த்து வேண்டிக்குங்க..." சுந்தரேசன் அவளிடம் வேடிக்கையாக பேசி அவளை அனுப்பி வைத்தான்.

லாரன்ஸ் முகத்தில் சிரிப்பு. அது சற்று கேலிச் சிரிப்பாகவும் இருந்தது.

"என்ன சார்... உங்க வரைல இல்லாத கடவுள்கிட்ட அவங்க போறாங்களா?"

"கடவுள் இருக்கார் - இல்லைங்கறது வேற மிஸ்டர் சுந்தரேசன். நாம நம்மை நம்பணும். அது முக்கியம்..."

லாரன்ஸ் சுய முன்னேற்ற புத்தகங்களை அதிகம் படித்தவர் போல பேசினார். கிளாரா திரும்பவும் புகைப்படம் எடுப்பதில் மூழ்கிவிட்டாள்!

11

"மீனாட்சி அம்மன் கோவிலில் ஒரு இடத்தில் 'தன கோளம்' என்று ஒன்று தேர்ச்சக்கரம் போல வரையப் பட்டுள்ளது. அதனுள் உலகின் தொடக்கம் அதன் வளர்ச்சி பின் அதன் மாற்றங்கள் என்று பல அரிய தகவல்கள் மிக சுருக்கமாக குறியிட்டு சின்னம் வடிவில் கூறப்பட்டுள்ளது. விண்வெளி எப்படிப்பட்டது... அதில் உள்ள நட்சத்திரங்கள், கோள்கள் பற்றியும் அதில் குறியீடு உள்ளது!

அதைப் பற்றிய விளக்கங்களை உரிய முறையில் தருவார் தான் இன்று இல்லை. ஏதோ வரைந்து எதையோ இஷ்டத்துக்கும் எழுதி வைத்துவிட்டு போயிருப்பதாகத் தான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் பூகோள ஞானமுள்ளவர்கள் அதை பார்த்து வியக்கிறார்கள். பெரும் பூகோள அறிவுடன், காலம் பற்றிய ஞானமுடன் விண்வெளி பற்றிய பார்வையுடன் பெரும் விஞ்ஞான பார்வை உடையவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருந்தால் மட்டுமே இது சாத்யம். அப்படிப்பட்டவர்கள் மீனாட்சி அம்மையின் பால் பக்தி கொண்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அதனால்தான் ஆலயம் அழியாதது என்று உணர்ந்து அங்கே இதை வரைந்து உலகத்தவர்களுக்காக விட்டுச் சென்றுள்ளனர்!"

மீனாட்சி சன்னதி!

சகுந்தலா கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தாள். பெரும் கூட்டம்... அவ்வளவு பேரிடமும் ஒருவித பரவசம். எல்லோருக்குமே ஏதேதோ தேவைகள்... அதை அவள் கட்டாயம் தருவாள் என்னும் நம்பிக்கை அவர்களை கைகூப்பச் செய்திருந்தது.

''அம்மா... உன்னிடம் நான் கோடிகளை கேக்கலை... தங்கம் வைரம்னு கேட்கல... ஒரு அடிப்படையான வாழ்க்கையை தான் கேட்கறேன். தோட்டத்துல முளைக்கற புல்லுக்கு கூட மழைங்கற பேரால நீ உணவு கொடுக்கறே... ஆனா ஒருத்தருக்கு மூணு பேரை பெத்து போட்டுட்ட என் அப்பாவுக்கு வறுமையை கொடுத்து நீ எங்கள சோதிக்கலாமா?

இந்த உலகத்துல மனுஷனுக்கு மட்டும் மானம்ங்கற விஷயத்தை வெச்சே? அதனால தான் ஆடை அணியற துங்கற ஒரு வழக்கம் உருவானது... அது அப்படியே வளர்ந்து ஒரு குடும்பம் மானத்தோட வாழறதும் ஒரு விஷயமாப் போச்சு.

மானத்துக்காக உயிரைக் கூட விட்றது தான் மனிதப் பண்புன்னும் ஆகிப்போச்சு. இப்ப என் தங்கையால என் குடும்ப மானம் போயிடுமோன்னு பயமா இருக்கு. அவ கொஞ்சம் சுயநலமா யோசிக்கறா. அதுக்கு காரணம் கூட என் அப்பாவும் அவரோட முதுமையும் தான். அவரும் என்ன செய்வார்? அவருக்கு போய் ஒரு மகளுக்கு மூன்று மகள்களை கொடுத்தது உன் தப்பு. அவரை ஒரு சாதாரண தமிழாசிரியராகவே வெச்சிருந்தது அதைவிட தப்பு.

இது எவ்வளவு பெரிய உலகம்... இதுல எங்களுக்கு சொந்தமா ஒரு இடம் இல்லையே...? இருக்க இடம்,

உண்ண உணவு, உடுத்த உடைன்னு அடிப்படையான விஷயங்களுக்கே அலைபாய வேண்டியிருக்கே...?

உன்னை நம்பினவங்கள நீ கைவிட்டதில்லைன்னு ஊரே சொல்லுது. ஆனா என் விஷயத்துல மட்டும் ஏன் மௌனமாவே இருக்கே. நான் தொழில் செய்து பிழைக்கத் தான் கடன் கேட்டு பேங்குக்கு போனேன். ஆனா எனக்கு தகுதியில்லையாம்... நேர்மையா உழைச்சு பொழைக்க ஆசைப்பட்ற எனக்கு தகுதியில்லைங்கறது நியாயமா?

எது தகுதி?

உன்னோட பக்தைங்கற தகுதிக்கு மதிப்பே கிடை யாதா?'' சகுந்தலாவுக்குள் எண்ண அலைகள் பொங்கி பிரவாகித்துக் கொண்டிருந்தன. மீனாட்சியும் கேட்டபடியே நின்றிருந்தாள்.

உலகை படைத்து அதில் உயிர்களையும் படைத்து அவர்களுக்கு கஷ்டங்களையும் படைத்ததனால் வந்த விளைவை அவள் அனுபவிப்பது போலவும் இருந்தது.

பட்டரும் குங்குமம் கொடுத்தபடி வந்தார்.

அவர் தட்டில் தாலிச்சரடு ஒன்றும் இருந்தது.

என்ன தோன்றியதோ? கண்ணீரோடு நிற்கும் சகுந்த லா முகம் அவர் மனதை நெகிழ்த்தியிருக்க வேண்டும். அந்த தாலிச்சரடை எடுத்து அவள் வசம் தந்தார். கூடவே குங்குமமும்...

சகுந்தலாவுக்கு திகைப்பு...

பக்கத்தில் நின்று கொண்டிருந்த பெண் முகமோ அதிர்ந்தது.

''சாமி சரடு கொடுத்தது நான்... என்கிட்ட தராம இந்த பெண்ணுக்கு தந்துட்டீங்களே'' என்றாள்.

''ஓ... இதை தந்தது நீங்களா... எனக்கு ஞாபக
மில்லை. இவங்கள பாக்கவும் கொடுக்கத் தோணிச்
கொடுத்துட்டேன்'' என்றார். சகுந்தலா வேகமாக அந்த
தாலிசரடை அந்த பெண்ணிடம் தந்து ''எடுத்துக்கம்
கம்மா... நான் கேட்டு வந்தது இதை இல்லை...'' என்றாள்.
ஆனாலும் அந்த பெண்ணிடம் ஒரு சின்ன தயக்கம்.

இருவரும் பேசிக்கொண்டே பிரகாரத்தை வலம்
வர ஆரம்பித்தனர்.

''ஏம்மா தயங்கறீங்க?''

''இல்லம்மா... இது உனக்குத்தான் சேரணும். நான்
என் மகளுக்கு கல்யாணம் நடக்கணும். அதற்காக ஒரு
வரன் வந்துருக்கு. அந்த வரனுக்கு என் மகளை தரலா
மான்னு கேட்க வந்தேன். ஏன்னா நாங்க பார்த்துக்கற
மாப்ளையை பத்தி சில தவறான விஷயங்களும் காதுல
விழுந்தது. எதை நம்பறது யார் சொல்றது சரின்னு தெரியல.
இந்த மாதிரி நேரத்துல தெய்வத்துக்கிட்ட முறையிட்றது
தான் சரின்னு நான் கோவிலுக்கு வந்தேன். எனக்கு ஒரு
தெளிவான பதிலை சொல்லுன்னு உருக்கமா அழுதுகிட்
டிருந்தப்ப தான் பட்டர் சாமி தாலியை உன் கைல கொடுத்
தாரு. அதுவே எனக்கு இந்த இடம் வேண்டாம்கற பதிலா
அமைஞ்சிடுச்சு... அதே சமயம் உனக்கு கல்யாணம்ன்னு
அவ சொல்லாம சொல்லிட்டா...'' என்றாள்.

''எனக்கு கல்யாணமா.. நான் நினைச்சுக்கூட பாக்க
லம்மா''

''நாம நினைக்கறதாம்மா முக்கியம், அவள்ள நினைக்
கணும்?''

''இவ ரொம்ப மோசம்மா.. நான் ஒண்ணு கேட்டா
இவ ஒண்ணு தரேங்கறா. நான் வேலை கேட்டேன். இவ
தாலியை தந்தா என்ன அர்த்தம்''

''உனக்கு வரப்போற புருஷன் உன்னை பாத்துக்கு
வான்னு அதுக்கு ஒரு அர்த்தம் இருக்கலாம் இல்லையா?''

''எனக்கு ஒரு புருஷன் வரப்போறானா?'' உதட்டைச்
சுழித்தபடி சிரித்தாள் சகுந்தலா.

''என்னம்மா... என்னமோ நடக்கவே முடியாத ஒரு
விஷயத்தை நான் சொல்லிட்ட மாதிரி சிரிக்கறே?''

''கொஞ்சம் அப்படித்தாம்மா... இப்ப கல்யாணம்னு
ஒண்ணு நடந்தா அது என் தங்கைக்கு தாம்மா நடக்கணும்...''

''அப்ப உனக்கு...?''

''எனக்கு அம்மா இல்லை... அப்பாவுக்கு வர்ற
பென்ஷன்ல தான் குடும்பம் நடக்குது. எனக்கு ரெண்டு
தங்கைங்க, இதுல நான் கல்யாணமாகி போயிட்டா இவங்க
கதி?''

''உனக்கு ஆன மாதிரியே இவங்களுக்கு ஆயிட்டு
போகுது. இனிமேலா ஒருத்தன் பிறக்கப் போறான்?''

''அது இல்ல தான்... ஆனா எப்பவோ பிறந்த
ஒருத்தன் என் தங்கையை சுத்திச் சுத்தி வர்றானே...?''

''ஓ... காதல் பண்றாங்களா?''

''ஆமாம்... என் அப்பாவால கல்யாணம் பண்ணி
வைக்க முடியாதுங்கறதாலயும் நான் வேற மூத்த பெண்ணா
இருக்கறதாலையும் அவ ஓடிப் போறது தான் ஒரே வழின்னு
தீர்மானிச்சுட்டா...''

''மீனாட்சி...''

''இதே பதைப்புதான் எனக்கும்... இதை தவிர்க்க வழி
தெரியாமதான் இங்க வந்தேன். அவங்க கல்யாணத்த
முதல்ல நடத்திட்றதுன்னும் தீர்மானிச்சேன். ஆனா அந்த

பையன் கொஞ்சம் பெரிய இடம்னு தெரிய வந்தது. நாங்க
ஒரு அஞ்சு பவுனாவது போட்டா தானே நல்லா இருக்கும்?

''இப்ப புரியுதும்மா உன் சிக்கல்...''

''அந்த அஞ்சு பவுனுக்கு எனக்கு ஒரு வேலை
வேணும். அதுக்கு சொந்தமா தொழில் செய்ய முடிவு செ
தேன். எனக்கு ஊறுகாய், அப்பளம், வடாம் போட
தெரியும். ஒரு இரண்டு மூணு லட்ச ரூபாய் இருந்
போதும்... அதை மூணு மாசத்துல அஞ்சு ஆறு லட்ச
ஆக்கிடுவேன். பேங்க்குல கடன் கேட்டேன். அ
கைவிரிச்சிட்டாங்க...''

''புரியுதும்மா... என் மகனும் பேங்க்குல தான் வேலை
பாக்கறான். பேங்க்குல யார் கிட்ட எப்படி பேசுவாங்கன்
எனக்குத் தெரியும். அது அவங்க ட்யூட்டி... அதை விடு
ஒண்ணு மட்டும் உறுதிம்மா... உனக்கு அம்மாவோ
கருணை நிறைய இருக்கு.. அதை நான் நேர்ல பாத்து
டேன். நீயும் ஒரு மூணாம் மனுஷியா என்னை நினை
காம உன் மனசுல இருக்கறத கொட்டுனதுல இருந்
உன் மனசு எப்படின்னும் தெரிஞ்சு போச்சு.

உனக்கு நான் இப்ப ஒரு விஷயத்த சொல்றேன்
நாங்க சில ஏழை பெண்களுக்கு கல்யாணம் பண்ண
வைக்கறதா வேண்டிகிட்டிருக்கோம். அதுக்காக ஒ
மூணு லட்சம் ரூபாயையும் எடுத்து வெச்சிட்டோம். அந்
பணத்தை நான் உனக்கு தரேன்... நீ அதுல தொழி
பண்ணு... உனக்கு சம்மதம் தானே?''

''ஐயோ அம்மா வேண்டாம்...''

''ஏம்மா..?''

''இல்ல... அது கல்யாண பணம்''

''நான் உனக்கு தந்தா அதனாலையும் கல்யாணங்கள்
தானே நடக்கப் போகுது...''

''இல்லம்மா... நீங்க இவ்வளவு தூரம் சொன்னதே
போதும்...''

''பைத்தியம் மாதிரி பேசாதே. சொன்னது எப்படி
போதும்? இன்னிக்கு மீனாட்சி எனக்கு இரண்டு விஷயத்தை
உணர்த்தியிருக்கா. ஒண்ணு என் மகளுக்கான வரன்.
அடுத்தது உனக்கான உதவி. உனக்கு செய்யற உதவி
அவ உண்டியல்ல நான் பணம் போட்றதுக்கு சமம். நான்
ஒண்ணும் சும்மா தரலை.. நீ வட்டியோட திருப்பித்தா.
பேங்க் உன்னை நம்பல... நான் நம்பறேன். பேங்குக்கு
ரூல்ஸ் பெருசு. எனக்கு மீனாட்சி பெருசு. அவ்வளவுதான்...''

அந்த பெண்மணி பேசிக்கொண்டே போனாள்.
சகுந்தலா கண்களில் இருந்து கண்ணீர் பொலபொல
வென்று கொட்டத் தொடங்கியது. உள்ளுக்குள்ளே
'அம்மா... தாயே...' என்று ஒரு குரல் ஒலிக்கப் பார்த்தது.
பரவசமும் நெகிழ்ச்சியும் அதைப் போட்டு அமுக்கிற்று.
திக்கினாள் - திணறினாள். அது அந்த பெண்மணிக்கும்
புரிந்தது.

கைகளை பற்றிக் கொண்டாள். ''என் போன் நம்பர்
தரேன். குறிச்சுக்கோ'' என்றாள். குறித்துக் கொள்ள பேப்பர்
பேனா இல்லை.

''வேண்டாம் விடு... நாளைக்கு இதே நேரம் - இதே
இடம். நான் பணத்தோட வந்துட்றேன். நீயும் வந்துரு.
அவ சன்னதில வெச்சே உன் கைல பணம் தரேன். பாண்டு
பத்திரம், சாட்சி கையெழுத்து எதுவும் வேண்டாம். 'அவ,
நான், நீ' மூணு பேர் தான்... சரியா?''

அந்த பெண்மணியின் ஒவ்வொரு வார்த்தைகளும்
மீனாட்சியே வந்து பேசுவது போல் இருந்தது!

சகுந்தலாவால் பதிலுக்கு எதுவுமே பேச முடிய
வில்லை.

பேங்க் மேனேஜர் தர மறுத்தது இப்படி ஒருத்தி அ
வேண்டும் என்பதற்காக தானா? அப்போது அது தெரிய
வில்லையே... நான் ஒரு துரதிர்ஷ்டக்கட்டை என்றல்லவா
மனது எண்ணியது. இப்படித்தான் பல நேரங்களில்
ஏமாற்றம் ஏற்படும்போது நாம் எண்ணுகிறோம். ஆனால்
ஒரு விஷயம் நடப்பதற்கு பின்னாலும் சரி நடக்கும் போதும்
சரி - ஒரு சரியான காரண காரியம் அதன் பின்னாலே
இருக்கிறது.

அவ்வேளையில் சகுந்தலாவுக்குள் ஒரு ஞானப்
பூவே மலரத் தொடங்கிவிட்டது. இப்படி சிந்திக்கத் தொடங்
கும்போதுதான் பக்குவம் ஏற்படத் தொடங்குகிறது.

சகுந்தலாவிடமும்...

அந்த பக்குவத்தோடும் பக்தியோடும் பணிவோடும்
அந்தப் பெண்மணியைப் பார்த்து கைகளைக் கூப்பினாள்.
கண்களில் சந்தோஷக் கண்ணீர் பெருக ஆரம்பித்தது!

''எதுக்கும்மா இதுக்கு போய் அழறே..''

''இப்படி ஒரு உதவியை யாரும்மா செய்வா... ஊருக்கு
பொதுவான பேங்க் கூட செய்யலையே...''

''அவங்களுக்கு நீ மீனாட்சி பொண்ணுன்னு தெரி
யாது பார்...''

''என்னது... நான் மீனாட்சி பொண்ணா?''

''ஆமாம்மா.. நீ மட்டுமில்ல. நானும்தான்... நாம
அவளை அம்மான்னு கூப்பிடும்போது அவளுக்கு நாம
மகள்தானே?''

''எனக்கு இந்த பதில் ரொம்ப திருப்தியை தருதும்மா...''

''எனக்கும் இப்ப ரொம்ப திருப்தியா இருக்கு... என்
மகளுக்கு வாய்க்கப் போற வரன் மேல ஒரு சந்தேகம்
இருந்தது அம்மா அது உண்மைதான், உன் பொண்ணுக்கு
நான் வேற நல்ல மாப்ளையை அனுப்பித் தரேன்னு சொல்
லாம சொல்லிட்டா...''

''அம்மா உங்க பேரை நீங்க சொல்லவேயில்
லையே...?''

''அன்னபூரணி...''

''எனக்கு பிடிச்ச பேர்கள்ள ஒரு பேர்மா அது...''

''சரி உன்ன பத்தி சொல்லு... உன் அப்பா அம்மா
என்ன பண்றாங்க?''

பேசிக்கொண்டே பொற்றாமரைக் குளம் வந்து
விட்டார்கள். அங்குள்ள ஊஞ்சல் மண்டபத்தில் தூணோடு
தூணாக ஒரு குட்டி மீனாட்சி சிலை உண்டு. அந்த மீனாட்
சியை ஒரு பத்தடி தூரத்தில் நேர் எதிரில் இன்னொரு
தூணில் சிற்பமாக நின்றுக் கொண்டு ராமப்பய்யர் என்னும்
ராணி மங்கம்மாள் காலத்து தளவாய் வணங்கிக் கொண்
டிருப்பார்.

அங்கே போய் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

சகுந்தலா தன் குடும்பக் கதையை சுருக்கமாக கூறி
முடித்தாள்.

''அப்ப உன் அப்பாவோட பென்ஷன்ல தான்
வாழ்க்கை ஓடுதுன்னு சொல்லு...''

''ஆமாம்மா... ரேஷன்ல இந்த ஒரு ரூபாய் அரிசியை
வாங்க, நாங்க ரொம்ப வெட்கப்படுவோம். இப்ப அதுதான்
எங்களுக்கு பெரிய ஆதாரம். ஆனாலும் அரிசி மலிவா
கிடைச்சாலும் அதுக்கான தண்ணில இருந்து அடுப்பெரிக்கற

கேன் வரை எல்லாமே ஆகாயத்துல தானே இரு
ஒவ்வொரு நாளும் ஒரு யுகமா இருக்கு... ஹாஸ்
தோட்டை மாத்தினா ஒரு நாள் கூட தாங்கறதில்
காலத்தை நினைக்கவே பயமா இருக்கு. ஒரு
எங்க குடும்ப டாக்டர் கிட்ட போட்டு மருந்தும் கொடுத்
முப்பது ரூபா வாங்கிக்குவார். அவரே இப்ப
ரூபா கேக்கறார். யாருக்காவது உடம்புக்கு வந்தா
டாக்டர்கிட்ட போறதேயில்லை. நாட்டு வைத்
நல்லவேளை டாக்டர்கிட்ட போயே தீரணும்கற
வியாதியை காலம் இதுவரை தரலை...''

சகுந்தலாவின் பேச்சில் இன்றைய வாழ்வின்
ராதார அழுத்தம் அப்பட்டமாக வெளிப்பட்டது. அது
அன்னபூரணி என்கிற பெண்ணிடம் பெருமூச்சை
வளைத்தது.

''நான் பார்க்க லட்சத்துல சம்பாதிக்கறவங்களு
ஒரு குறையும் இல்லை. குடிசைவாசிகளுக்கும்
சவால்கள் இல்லை. ரொம்ப பாவம் நடுத்தட்டு
தான். மாடியில வாழவும் முடியல. பிளாட்பாரத்துல
வும் மனசு வர மாட்டேங்குது...''

''புரியுது... அதான் தொழில் பண்ணப் போறே
அதுல நீ நிச்சயம் லட்ச லட்சமா சம்பாதிப்பே...
கஷ்டம் தீர்ந்திடும்.''

''உங்க வாய் முகூர்த்தம் பலிக்கணும்மா...''

''பலிக்கும்... அதோட உனக்கும் வயசாயிடிச்சு.
கும் கூடிய சீக்கிரம் ஒரு நல்ல புருஷன் அமையட்டும்.''

''என் வாழ்க்கையை பத்தி நான் எந்த கனவுகளு
காண விரும்பலம்மா. இப்ப என் முதல் வேலையே
தங்கை விமலாவுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறதுதான்...

''நான் உன்னை பத்தி சொல்லிட்டிருக்கேன். நீ உன்
தங்கை கிட்ட போயிட்டியே. உனக்கு கல்யாணமானா,
தானா அவளுக்கும் ஒரு வழி பொறக்கும்.''

''இல்லம்மா, நான் தொழில் பண்ணி முன்னுக்கு வந்து
னக்கு ஒரு மாப்பிள்ளை அமையறதுக்குள்ள என் தங்கை
யோட காதலும் கனவுகளும் சிதறிப்போயிடும்மா...''

''என்னது காதலா? உன் தங்கை காதலிக்கறாளா?''

அதற்கு கனத்த மௌனத்தோடு தலையை அசைத்
தாள் சகுந்தலா.

''அடக்கடவுளே... காதலிக்கற பையன் எப்படி?''

''ரொம்ப நல்ல பையன்னு அவ சொல்றா. ஒருவேளை
இல்லேன்னாலும் அவ கேக்கற மனநிலைல இல்ல. எப்ப
அவனோட ஓடிப் போயிடுவாளோன்னு பக்கு பக்குன்னு
இருக்கும்மா...''

சகுந்தலா உடம்பு சொல்லும் போதே நடுங்கத் தொ
டங்கி விட்டது.

''உன் துடிப்பு புரியுதும்மா, கவலைப்படாதே. அப்படி
எல்லாம் எதுவும் நடக்காது. நம்ப அம்மா விட்டுட மாட்டா''
என்று கையை பிடித்தபடி ஆறுதலாக பேசினாள்
அன்னபூரணி.

இதமாய் இருந்தது சகுந்தலாவுக்கு!

12

''ஆறு, குளம், விருட்சம், ஸ்தலம், அருவி என்று
ஐந்தும் ஒரு ஊரில் அமைவது அபூர்வத்தோடு சேர்ந்த
தாகும். ஆறு பாயும் எல்லா ஊரிலும் திருக்குளங்களோ,

தெய்வ விருட்சங்களோ பாடல் பெற்ற ஸ்தலங்களோ, இல்லை பாவம் போக்கும் அருவியோ இருக்காது. அப்படியே இருந்தாலும் இதில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு தான் இருக்கும். இந்த ஐந்தும் இருப்பது மதுரையில் மட்டும்தான்.

வைகை ஆறு, கடம்ப விருட்சம், பொற்றாமரைக் குளம், மீனாட்சி சன்னதி, அழகர்கோயில் மலையில் உள்ள ராக்காயி கோயில், ஆகாய கங்கை அருவி என்னும் ஐந்தும் மதுரையில் மட்டுமே இருப்பதால் தான் காசியில் இறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி, திருவாரூரில் தரிசிக்க முக்தி, சிதம்பரத்தில் பிறக்க முக்தி, மதுரையில் வசிக்க முக்தி என்றனர்.

ஆம்...

மதுரையில் பிறந்து மதுரையிலேயே இறப்பவர்களுக்கு வீடுபேறு அடைவது மிக சுபம்!''

கோவில் மொத்தமும் சுற்றிவிட்டு சுந்தரேசனும், அவனாலே சுற்றிக் காட்டப்பட்ட லாரன்சும் கிளாராவும் வெளியே வந்தனர்.

அப்போது எதிரில் ஒரு வயதான கிழவி!

மஞ்சள் புடவை - சிகப்பு குங்குமம் என்று ஜொலித்தாள். அவள் கையில் ஒரு வெள்ளிக் பூண் போட்ட குச்சி. நேராக சுந்தரேசனிடம் வந்து ''தம்பி ஜோசியம் பாக்கறியா?'' என்று கேட்டாள்.

சுந்தரேசன் பதிலுக்கு கையெடுத்து கும்பிட்டான்.

''ஏன் தம்பி... நம்பிக்கை இல்லையா?''

''நம்பிக்கையும் இல்லை - உனக்கு தர காசும் இல்லை. நான் ஒரு வெட்டி ஆபீசர் இப்போ...''

''இப்ப தானே?''

''அப்படின்னா?''

''கூடிய சீக்கிரமே உன் வாழ்க்கை மாறப் போவதப்பா. உலக அளவுல நீ பேர் வாங்கப் போறே - காசும் கொட்டோ கொட்டுன்னு கொட்டப் போகுது...''

''கொஞ்சம் வாய பொத்திகிட்டு பேசாம போறியா?''

''கோவிச்சுக்காதப்பா. என் பேச்ச கேள்... நான் பொய் சொல்லல. அந்த மீனாட்சிக்கு பொதுவா சொல்றேன்.''

''மீனாட்சிக்கு பொதுவான்னா நான் நம்பிடுவேனா?... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா... நான் இப்ப மீனாட்சியையே நம்பறதுக்கு தயாரா இல்லை...''

''நீ வெறுப்புல பேசறப்பா, ஆனா இன்னிக்கு பேச்சு நாளைக்கு கிடையாது...''

''பாட்டியம்மா... நீ எப்படி பேசினாலும் புண்ணிய மில்லை. அதான் காசு இல்லேங்கறேன்ல. அப்புறம் எதுக்கு தொண தொணங்கறே?...''

''இன்னிக்கு காசு இல்லங்கறது சரி... நாளைக்கு வந்தா தர மாட்டியா?''

''பார்றா... இப்பல்லாம் இப்படி எல்லாம் பேசி ஜோசியம் பாக்க ஆரம்பிச்சுட்டீங்களா..?''

''அப்படி இல்ல தம்பி... உனக்கு சில சேதிகள சொல்லணும்னு மனசு துடிக்குது - அதான்''

''நீ சொல்ற அளவுக்கு அப்படி என்ன இருக்கு?''

''நிறைய இருக்குப்பா... அம்மா தான் சொல்லச் சொல்றா...''

அந்தப் பாட்டியின் விடாத பேச்சு லாரன்சையும் ஆச்சரியப்படுத்தியது.

''பாட்டியம்மா... அம்மா சொல்லச் சொல்றதா சொ
நீங்களே யார் அந்த அம்மா?'' என்று கேட்டான்.

''அட வெள்ளைக்கார தம்பி நல்லா தமிழ் பேசு
களே?''

''இது உங்க ஜோசியத்துல தெரியலியா?''

''தெரிஞ்சுக்க நான் விரும்புனா தானே - பதில் சொ
யும்?''

''நீங்க பேசறது எனக்கு புரியல...''

''என்ன புரியல... உனக்கு ஜோசியம் சொல்ல எனக்
உத்தரவு வந்தாதான் நான் ஜோசியமே சொல்வேன். அப்ப
உத்தரவு வரும்போது தான் உன்னை பத்தி எல்லாமு
தெரிய வரும். உத்தரவு வராதப்ப நீ எவ்வளவு பெரியவ
இருந்தாலும் அது எனக்கு தெரியாது...''

''அப்ப இப்ப நான் ஜோசியம் பார்க்க விரும்பி
உத்தரவு வந்தா தான் பாப்பீங்களா?''

''நிச்சயம். எங்க ஜக்கம்மா அனுமதிச்சா தா
எங்களால ஜோசியமே சொல்ல முடியும்.''

''யார் அது?''

''இந்த கோவில் மீனாட்சி தான் வாக்குல வரும்போது
ஜக்கம்மாவாயிட்றா...''

பாட்டியின் பதிலுக்கு லாரன்சிடம் ஒரு கேலிச் சிரிப்
விளைந்தது.

''நீ எதனால் சிரிக்கறேன்னு தெரியுது... இரு உன்னைப்
பத்தி ஜக்கம்மா கிட்ட கேக்கறேன்...'' பாட்டி கண்களை
மூடி தீவிரமாக நெற்றியில் வரிகள் விழ யோசித்தாள்.
லாரன்சும் சுந்தரேசனிடம் ''பாட்டி என்கிட்ட வசமா மாட்டப்
போறாங்க'' என்றார். பாட்டி கண் திறந்தாள்.

''ஆத்தா உத்தரவு தந்துட்டா... உன்ன பத்தி நீ கேக்கா
மலே நான் சொல்லவா - இல்ல கேட்டுச் சொல்லவா?''

கேள்வியே பொட்டில் அடித்தது.

''அது எப்படி நான் கேக்காமலே சொல்ல முடியும்?''

''அதானே ஜக்கம்மா வாக்கு...''

''அப்ப சரி... நான் எதுவும் கேக்கல. என்ன பத்தி
சொல்லு பார்ப்போம்...''

''நாலெழுத்துல பேரு... இந்த நாட்டுக்கு வெளியில
உன் ஊரு, வீட்டுக்கு நீ தலைப்புள்ள, ஆனா வீட்டுக்கு
புடிக்காத புள்ள, ஊர் சுத்த உனக்கு ரொம்ப புடிக்கும். அரிசி
யில இருந்து ஊசி வரை விக்கறது உன் தொழிலு... சரியா?''

அந்த பாட்டி கேட்டு முடிக்கவும் லாரன்சிடம் பதிலே
இல்லை. அப்படியே விக்கித்துப் போய் விட்டான். பெரும்
பிரமிப்பு அவன் கண்களில் வழிந்தது. பாட்டி சொன்ன
அவ்வளவுமே அவன் வரையில் உண்மை.

''என்ன மிஸ்டர் லாரன்ஸ்... பாட்டி அசத்திட்டாங்
களா?''

''எக்ஸாக்ட்லி... நான்தான் என் வீட்டுக்கு எல்டர்...
நான்னா என் அப்பாவுக்கு அவ்வளவா புடிக்காது. நாங்க
அங்க பெரிய டிபார்ட்மென்டல் ஸ்டோர் நடத்தறோம்.
அதுல இல்லாத திங்க்ஸே இல்ல...''

''எது உண்மையோ அதை சொல்றவதானே
மீனாட்சி...''

''அப்ப மீனாட்சி இருக்காளா பாட்டி...''

''இல்லாம தான் உன்ன பத்தி சொன்னாளா...''

''கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. என்ன பத்தி

சொன்ன மாதிரி இப்ப மும்பைல குண்டு வெடிச்சிருக்கு அங்க குண்டு வெச்சவங்க யார்னு சொல்வீங்களா?''

''உடனே விவகாரமா கேள்வி கேட்க ஆரம்பிச்சிட்டியே...''

''நான் கேட்டதுல என்ன தப்பு இருக்கு... என்னை பத்தி நான் தெரிஞ்சுக்கறதால யாருக்கு என்ன பிரச்சனை ஜனம் - அதுவே அவங்கள பத்தி தெரிய வந்தா நாட்டுல அமைதி ஏற்படும் இல்லையா?''

''உன் நல்ல எண்ணத்த ரொம்ப மெச்சறேன். அவங்க யாருங்கறத பொறுப்பில உள்ளவங்க வந்து எதிர்ல நின்னு ஆத்தாள கும்புட்டுட்டு பக்தியோட கேட்டா நிச்சயம் சொல்வேன்.''

''இது என்ன பேச்சு பாட்டி... எங்ககிட்ட சொன்னா நாங்க போலீசுக்கு சொல்லி அவங்க கேக்கறதுக்கு உதவி செய்துட்டு போறோம்...''

''நானும் இந்த நாட்டுல வாழறவ தானே தம்பி. அதை நானேகூட செய்யலாம் தானே!''

''தாராளமா செய்துட்டு போங்க - நல்லது நடந்தா சரி.''

''நான் சொல்லலேன்னு உனக்கு தெரியுமா?''

பாட்டியின் கேள்வி ஊசியாய் குத்தியது.

''சொன்னீங்களா... யார்கிட்ட?''

''தம்பி... நாங்க தெய்வத்துகிட்ட தான் முறையிடுவோம் அது பாத்துக்கும்...''

''கவுத்துட்டீங்களே பாட்டி... அது எங்க பாத்துக்குது? இதோ இந்த கோவில் குளத்துல தண்ணிய கொண்டு வரவே அதால முடியலியே...?''

''மீனாட்சிக்கு எதுக்கு தம்பி கோவிலும் தண்ணியும் அவளுக்கென்ன தாகமா தவிப்பா...?''

''அதுக்கு எதுக்கு குளம்...?''

''அது உனக்கு, எனக்கு... நமக்கு... நாமன்னா யார்... இந்த ஊர், அவ்வளவு பேரும் நினைச்சா தண்ணி என்ன ஒரு நிரந்தர ஊத்தே இங்க வரும்''

''அப்ப ஊர் நினைக்கலியா - அதனால வரலியா?''

''பின்ன... கோவிலை சுத்தி எப்படி குடி இருக்கணும்னு இருக்கு. அப்படியா குடியிருக்கோம்? மீனாட்சியையே எப்படி பாக்கறோம். நாம கேக்கும் போதெல்லாம் கேக்கறத எல்லாம் கொடுத்தா தான் அவ சாமி. இல்லாட்டி கல்லு. அப்படிதானே?''

''அப்ப இங்க இருக்கற தப்புக்கெல்லாமும், தவறுக்கெல்லாமும் மனுஷங்க தான் காரணம்னு சொல்றீங்க.. அப்படிதானே?''

''எப்பவும் அப்படித்தான்... இப்ப மட்டுமில்ல...''

''பாட்டி... முறையிடத் தான் தெய்வம். தட்டுனாதான் திறக்கும். கேட்டாதான் கிடைக்கும்னு சொல்றதுக்கெல்லாம் அப்ப என்ன அர்த்தம்?''

''முறையிடத்தான் தெய்வம்னா நான் கோடீஸ்வரனாகணும், ஏரோப்ளேன்ல போகணும்னு முறையிட்றது கிடையாது. ஊர் நல்லா இருக்கணும், உலகம் நல்லா இருக்கணும்னு முறையிடத்தான் தெய்வம். இவ்வளவும் நல்லா இருக்கும்போது நாம தானா நல்லா இல்லாம போயிடுவோம்...?''

''பாட்டி நீ ரொம்ப சாமர்த்யமா பதில் சொல்றே. என்ன எடுத்துக்கோ... படிச்சு முடிச்சிட்டு ஒரு வேலை இல்லாம

பட்றபாடு எனக்கு தான் தெரியும். எனக்கு ஒரு
நான் கேட்டா அவ இன்னும் தாலியே...''

''அது எப்படி உனக்கு தெரியும்?''

''இந்த நிமிஷம் நான் வெட்டி ஆபீசா
கேன். இதோ இவங்களுக்கு கைட் மாதிரி
கிட்டு இருக்கேன்''

''அப்ப இது ஒரு வேலை தானே?''

''ஆனா நான் அப்படி நினைக்கலியே''

''அப்ப பிரச்னை உன்கிட்ட தானே?''

''பாட்டி நீ திரும்ப திரும்ப சாமர்த்யமாவே
சொல்றே?''

''நீ முட்டாள்தனமாகவே கேள்வி கேட்டா
என்ன பண்ணட்டும்?''

''முடிவா என்ன சொல்றே?''

''நல்லா கேட்டுக்கோ... இந்த மதுரைல சப்பாத்
விழான்னு ஒண்ணு நடக்கும். கேள்விப்பட்டுருக்கியா?''

''உம்..''

''அதுக்கு அர்த்தம் தெரியுமா?''

''என்ன?''

''அன்னிக்கு எல்லாரும் வீட்டு முன்னால அரிசி
மாவால கோலம் போடுவாங்க. கைப்பிடி அரிசியை புத்துக்
கும் எறும்புக்கும் தூவுவாங்க.. ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''இந்த அரிசி அவன் கொடுத்தது - அது ஈ எறும்புல
இருந்து சகலத்துக்கும் சொந்தமானது. எல்லா நாளும் எனக்கு

இந்த நினைப்பு இல்லாட்டியும் இன்னிக்காவது நினைச்சுப்
பாக்கறேன்கறது தான் அதுக்குள்ள இருக்கற உண்மை.
பரமேஸ்வரனை பத்தி சொல்லும்போது ஒரு கருத்து சொல்
வாங்க. 'அவன் கல்லுக்குள்ள வெளிய வர முடியாம
கிடக்கற தேரைக் குஞ்சுக்கு கூட படியளக்கறவன்னு...!'

அப்படிப்பட்டவன் படைச்ச உலகம் இது.

தெருவுல எவ்வளவு நாயிங்க திரியுது. அதெல்லாம்
சோறில்லாம தானா உயிரோட இருக்கு? அதுங்களே
இருக்கும்போது நமக்கு தானா இல்லாம போயிடும்?

ஆனாலும் சுயநலம், பயம்கற உணர்ச்சிக்கு அடிமை
யாகி நாளைக்குன்னு சொல்லி மூட்டை மூட்டையா வாங்கி
அடுக்கி வெச்சுக்கறோம். ஒருவேளை கிடைக்காம போய்ட்
டான்னு பயப்பட்றோம்.

நாம இங்க காட்டிக்கிட்டு இருக்கிறது பக்தி தான்.
எப்படிப்பட்ட பக்தி தெரியுமா இது...? பயபக்தி! இதை
அவன் எதிர்பார்க்கல. தூயபக்தி - சுயநலமில்லாத பக்தியை
அவன் எதிர்பார்க்கறான். அவன்கிட்ட எதையும் கேக்கத்
தேவையே இல்லை தம்பி. உன்னை கேட்டுகிட்டா
உன்னை படைச்சான். உனக்குன்னு ஒரு அப்பா அம்மா,
உனக்குன்னு ஒரு நாடு, நீ பேச ஒரு பாஷை, நல்ல கை
காலு, பாக்க பார்வை பேச பேச்சுன்னு தரத் தெரிஞ்ச
வனுக்கு உனக்கு எப்ப எதை தரணும்னு தெரியாதா? நாம
கேட்டா தான் கிடைக்குமா?''

பாட்டியின் பேச்சு அவர்கள் மூன்று பேரையுமே
கட்டிப்போட்டு விட்டது.

''அப்ப இப்ப இருக்கற ஏற்ற தாழ்வுக்கெல்லாம்
காரணம் சுயநலமும் பயமும்தானா?''

''பின்ன... ஏன் குண்டு வெடிக்குது - யாருக்கோ
ஒருத்தனுக்கு வாழ வழியில்லேங்கறதால தானே?''

"ஆமா..."

"அவன் அரிசி பருப்பை சேமிப்புங்கற பேர்ல நீ எதுக்கு உன் வீட்டு சமையல் கட்டுல மூட்டை கட்டி வெச்சுக்கறே? நீ எவ்வளவு நாள் உயிரோட இருப்பேன்னே தெரியாது... ஒரு பேச்சுக்கு 100 வருஷம்னு வெச்சுப் போம்... ஆனா எதுக்கு உனக்கு 1000 வருஷத்துக்கு தேவை யான சொத்து பத்து..? தினமும் தான் நீ மரணங்கள் கண் எதிர்ல பாக்கறே? எவ்வளவு பெரிய ஆளா இருந் தாலும் எதையும் எடுத்துகிட்டு போக முடியறதில்ல. தெரிஞ்சும் நீ கேக்கறியே - பதுக்கறியே?"

"பாட்டி... நான் எதையும் கேக்கல... எதையும் பதுக் கல?"

"அது எனக்குத் தெரியும். ஆனா அப்படி கேக்கற வனுக்கும் பதுக்கறவனுக்கும் பயந்து தானே வாழறே... நமக்கு எதுக்கு ஊர் வம்புங்கறது தானே இங்க வேதம்? அது எதுல இருந்து வருது - பயத்துல இருந்து தானே?"

"அதனால...?"

"அந்த பயமும், இப்படி ஒரு சூழலும் இருக்கற வரை இந்த பொற்றாமரைகுளம் இல்ல... எந்த குளமும் ரொம்பாது. மும்பை மட்டுமல்ல எல்லா இடத்துலயும் குண்டு வெடிக்கும்."

"அப்ப இதுக்கு எதிரா தீவிரவாதியா மாற சொல்றியா?"

"தப்பா புரிஞ்சுகிட்டியே... இந்த நாடு ஏன் இப்படி இருக்கு? ஏன் கடவுள் கருணை காட்ட மாட்டேங்குதுன்னு கேட்டதுக்கு நான் பதில் சொன்னேன்... இங்க ஏற்ற இறக்கம் இருக்க நாமதான் காரணம் - தெய்வம் இல்லேன்னும் சொன்னேன். மற்றபடி அது எப்பவும் போல தன் கருணையை விடாம பொழிஞ்சுகிட்டு தான் இருக்கு?

இல்லேன்னா இவ்வளவு பெரிய உலகத்துல மழைன்னு ஒண்ணு பொழியுமா... இல்ல அரிசின்னு தான் ஒண்ணு விளையுமா?"

"இந்த ஏற்ற இறக்கங்களை மாத்த வழி இல்லையா பாட்டி?"

"என் இல்லை..? முதல்ல கடவுள்கிட்ட பிச்சை எடுக்கறத விடு, அதை ராஜாவா பாவிச்சு பூஜை செய்ய றதயும் விடு! உண்மையான அன்போட இரு. எதிர்பார்ப் பில்லாம பக்தி செய். எவ்வளவு உண்மையோட இருக்க முடியுமோ அவ்வளவு உண்மையோட இரு. எது நடந்தாலும் அதுக்கு பின்னால ஒரு சரியான பௌதிக காரணம் இருக்க றத புரிஞ்சுக்கோ. அதுக்கும் மேலே இவ்வளவு பெரிய பூமியை சுழற்றி, சூரிய சந்திரர்கள்னு இரண்டு ஆகாய விளக்குனால உலகத்துக்கு ஒளியூட்டி, நம்மை வழி நடத்தற அந்த பேராற்றலுக்கு தினமும் நன்றி சொல்."

பாட்டியின் பேச்சுக்கு லாரன்ஸ் கை தட்டி விட்டார். "ஃபென்டாஸ்டிக்... ரொம்ப பிரமாதமான பதில்" என்றார். சுந்தரேசனிடமும் ஒரு நம்பிக்கை ஒளி. "பாட்டி அப்ப எனக்கு வேலை கிடைச்சிடுமா... எங்க எனக்கு ஜோசியம் சொல்... எனக்கு பணம் வந்தவுடனே நீ முன்ன சொன்ன மாதிரியே பணம் தந்துட்றேன்..."

அதை கேட்டு சிரித்தாள் அந்த ஜக்கம்மா பாட்டி.

"அதான் நீ நல்லா இருப்பேன்னு ஆரம்பத்துலயே சொல்லிட்டேனேப்பா"

"நல்லா இருப்பேன்னா எந்தவிதத்துல..?"

"நல்ல பொண்டாட்டி வரப்போறா, அவளும் இந்த மீனாட்சின்னா உயிரை விட்றவ தான்..."

"வேலைக்கு கேட்டா - பொண்டாட்டி வரை போயிட் டீங்களே"

"நான் [illegible] செல்போன் [illegible]
[illegible] நான்..."

"சரி [illegible] எப்ப [illegible]
[illegible] நான் [illegible] பண்ணி [illegible]
கிடைக்கணும்"

"[illegible] உன் [illegible]..."

"அது எப்ப கிடைக்கும்...?"

"கிடைக்கணும்..."

"கிடைச்சுட்டா... ஓ... வீட்டுக்கு [illegible]
கடிதம் வந்திருக்குமா?"

பாட்டி சிரித்தாள். [illegible]
அப்போது அந்த ஆள் வீதியில் ஒரு [illegible]
ஓடி வந்தபடி இருந்தது. [illegible]
முன் சிதறியது. அவர்கள் [illegible]

அந்த மாட்டின் வேகத்தை பார்த்து [illegible]
அதை புகைப்படம் எடுக்கப் பார்த்தான் கிளார்!

அதுதான் அவன் செய்த தவறு.

அது அவன் வயிற்றில் தன் கொம்பாலே ஒரு [illegible]
முட்டி தூக்கி எறிந்தது. அவன் விழுந்த இடத்தில் [illegible]
லாவும் வந்து நின்றிருந்தான்!

13

"மதுரை ஒரு அறுசுவை நகரம். [illegible],
சாக்தம், கௌமாரம் (முருக வழிபாடு), [illegible]
(பிள்ளையார் வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) [illegible]

[illegible] ஒரு [illegible]
[illegible] - [illegible] [illegible]
[illegible] மீது [illegible]
[illegible] மதுரைக்கு.

[illegible] நல்ல திருவிளையாடல்களின் போது
[illegible] மதுரை வீதியில் நடந்தே திரிந்திருக்கிறான்.
[illegible] விளக்கி மதுரையை
[illegible] செதுக்கியிருக்கிறான்.

[illegible] திருப்பரங்குன்றத்திலிருந்தான் மலைக்
[illegible]

[illegible] திருக்குளம்
[illegible] மூலவரைத் தான். [illegible] பொற்றாமரை மலர்த்
[illegible] முழுக்கும் பயன்பட்டது.

[illegible] ஆறு வழிகளும் சீருடன் இருக்கும் ஒரு [illegible]
[illegible] வேறு எந்த ஒரு [illegible] கூற முடியாது. [illegible]
[illegible] ஒன்றிருக்காது...? ஆனால் மதுரை பொருத்தேற்ப
[illegible] பரிபூரணமுடைய நகரமும்.

ஆம்பத்திரி!

கிளார் ஜ.சி.யூவில் கிடத்தப்பட்டிருந்த நிலையில்
[illegible]வரின் [illegible] அவனுக்கு பொருத்திவிருந்தது
[illegible] ஆச்சரியம்... வெளியே வாசல்கள், [illegible]
[illegible]டு அமர்ந்திருந்தனர். நடந்தது ஒரு விபத்து - [illegible]
[illegible] வரை விஷயம் போய்விட்டது. விபத்து ஏற்ப்ட்
[illegible] ஒரு வெளிநாட்டு ஜோடிக்கு... [illegible] சர்வதேச
[illegible]யாக [illegible] மீடியாக்களிடமும் தனி கவனம் இருந்
[illegible]. குறிப்பாக சில ஆங்கில டி.வி. நியூஸ் சேனல்
[illegible] அந்த விபத்தை ஒரு அரிய செய்தியாகவே கருதி

"பிடிச்சாதானேடா காதலிக்க முடியும்... நல்லவேளை நல்ல குடும்பத்து பெண்ணை காதலிச்சியே..." சீனிவாசன் சிரித்தான்.

"ஆமா... எங்களுக்கு தெரியாம ஓடிப்போற பிளான்னு இருந்தியா!"

"சத்யமா இல்லம்மா. நான் அப்படி ஆசைப்பட்டப்போ கூட விமலா அதுக்கு சம்மதிக்கல. எனக்கு ஒரு அக்கா இருக்கா... அவளுக்கு கல்யாணம் ஆகட்டும்னுதான் சொன்னா..."

"ஆனா அந்த அக்கா அப்படி என்கிட்ட சொல்லலியே..."

"அவங்க விமலா கல்யாணத்தை நடத்த ட்ரை பண்றாங்கன்னு எனக்கு தெரியும். ஆனா நாங்க அவங்களுக்கு கல்யாணம் ஆகாத நிலைல கல்யாணம் பண்ணிக்கற ஒரு முடிவுல இல்லம்மா. இன்னிக்கு தான் அந்த விஷயத்துல உறுதியான ஒரு முடிவுக்கும் வந்தோம்..."

"இப்பவாவது ஒரு நல்ல முடிவெடுத்தீங்களே...?"

தப்பா எடுத்துக்காதம்மா... சரியான ஒரு நேரத்துல என் காதலை சொல்லத்தான் நினைச்சேன்..."

நெளிந்தான் சீனிவாசன்.

"போடா போ... என் வரைல நீ எவ்வளவு நல்ல காரியம் பண்ணியிருக்க தெரியுமா? அந்த சகுந்தலா என்னை அந்த அளவு கவர்ந்திட்டா... ஹூம் - அவளுக்கொரு நல்ல புருஷன் சீக்கிரமா வரணும். அந்த மீனாட்சி நிச்சயமா அனுப்பி வைப்பா..." என்றாள் அன்னபூரணி.

அப்போது ஓடிக்கொண்டிருந்த டிவியில் ஒரு காட்சி. சகுந்தலா ரத்ததானம் முடித்து வந்து வெளியில் அமர்ந்

திருக்கிறாள். அருகில் சுந்தரேசன்! இருவரையும் நேரடியாக படம் எடுக்கும் வெளிநாட்டுக்காரர் தனது கமெண்டாக பேசும்போது, "இந்த ஜோடி தான் கிளாராவை பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்றியது. இவர்கள் இல்லாவிட்டால் கிளாரா உயிர் பிழைத்திருக்க முடியாது. இந்தியாவில் மட்டும்தான் இப்படிப்பட்ட ஜோடிகளை பார்க்க முடியும்! என்று கூறிவிட்டு சகுந்தலா பக்கம் திரும்பி "மேடம்... உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று கேட்க சகுந்தலா தனக்கு திருமணமே ஆகவில்லை என்று நெளிந்தாள்.

"ஓ... அப்ப இவர் உங்க பாய்ஃப்ரெண்டா?"

"அதெல்லாம் உங்க ஊர்ல... இங்க ஒரு பெண் ஒரு ஆணை நண்பனா பாக்கறதவிட காதலனாவோ இல்ல சகோதரனாவோ பாக்கறதுதான் வழக்கம்..."

"அப்ப இவர்...?" அந்த கேள்விக்கு சட்டென்று ஒரு பதில் கூற முடியாமல் திகைப்போடு பார்த்தாள் சகுந்தலா.

சுந்தரேசன் கோபமானான்.

"இப்ப நாங்க யாருங்கறதா முக்கியம்? சகுந்தலா செய்த உதவிய பாருங்க. நான்தான் இவங்களுக்கு சகுந்தலாவை அறிமுகப்படுத்தி வெச்சேன். அது இப்படி ஒரு பேருதவில முடியும்னு கொஞ்சமும் எதிர்பார்க்கல..."

"அவன் பதில் சகுந்தலாவுக்கும் ஆறுதலாக இருந்தது. லாரன்ஸ் குறுக்கிட்டார்.

"இவங்களுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டிருக்கேன். கிளாரா என் மனைவி. அவளுக்கு ரத்தம் கொடுத்ததால சகுந்தலா கிளாராவோட சிஸ்டர் ஆயிட்டா. அப்படிப் பார்த்தா சகுந்தலா எனக்கு ரிலேஷன்.

சகுந்தலா ஊறுகாய், அப்பளம்னு சிறு தொழில் தொடங்கப் போறாங்க. அதை நான் அமெரிக்காவுல எங்க

நாங்க சம்மதிச்சுட்டோம். நீ ஒண்ணும் உன் [illegible]
ணத்துக்கு பணம் இல்லேன்னு கஷ்டப்பட [illegible]
கல்யாணச் செலவு எங்களோடது...'' அன்னபூரணி [illegible]
தன்மையில் விஸ்வரூபம் எடுத்தாள். சகுந்தலாவுக்[illegible]
செய்வதென்றே தெரியவில்லை. சந்தோஷத்திலும் [illegible]
வருமாமே.. பொங்கிக் கொண்டு வந்தது!

மாசுமருவில்லாத பக்திக்கு அந்த ராஜ[illegible]
இப்படியா ஒரு வாழ்வளிப்பாள்... இப்படியா [illegible]
தவிடுபொடியாகும்? இப்படியா பேரும் புகழும் [illegible]
ஓடிவரும்..?

இதைத்தான் அவள் கடைக்கண் பட்டால் [illegible]
என்று கூறுகின்றார்களோ?

அவள் விக்கித்து நின்றபோதே அன்னபூரணி [illegible]
கல்யாணப் பேச்சையும் எடுத்துவிட்டாள்.

''சகுந்தலா உனக்கு கல்யாணமாகாம என் பி[illegible]
யும் சரி, உன் தங்கையும் சரி கல்யாணம் பண்ணிக்க[illegible]
போறதில்ல. ஆகையால முதல்ல உன் கல்யாணம்தான்.
அதுக்கு பிறகு தான் இவங்க கல்யாணம்'' என்றாள்.

''அதானேம்மா முறை... நான் சீக்கிரமா சகுந்தலா[illegible]
வுக்கும் ஒரு வரன் பாக்கறேன்'' என்ற சாரநாதனைப் பார்[illegible]
லாரன்ஸ் ''எக்ஸ்க்யூஸ்மி ஜென்டில்மேன். நீங்க வெளி[illegible]
எங்கேயும் மாப்ளை பார்க்க வேண்டாம். மிஸ்டர் சுந்தரேச[illegible]
ரொம்ப சரியான ஜோடின்னு நான் நினைக்கறேன்...''
என்றார்.

சுந்தரேசனிடம் ஒரு குபீர் திகைப்பு. சகுந்தலா[illegible]
விடமோ பெரும் பரபரப்பு... ஒரு சந்தோஷத் திக்குமுக்
காடல்!

''ஜோடியா உலகம் பூரா தெரிஞ்ச இவங்க லைஃப்புல[illegible]
யும் ஜோடியாகறது தான் சரி. சிஸ்டர் ஓ.கே.ன்னு சொல்[illegible]
லுங்க'' என்றார் லாரன்ஸ்.

அவளது வெட்கத்தை பார்த்து அன்னபூரணியே
''அப்ப ஒரே மேடைல இரண்டு ஜோடிகளோட கல்யா
ணத்தை நடத்திட வேண்டியதுதான்'' என்றாள். ஆமோ
திப்பது போல் தெருவில் உள்ள பிள்ளையார் கோவில்
மணி ஒலித்தது!

கிளாரா பூரணமாக குணமாகிவிட்டாள்.

திரும்பவும் லாரன்சுடன் மீனாட்சி அம்மன் கோவி
லுக்கு வந்தாள். சுந்தரேசனும் அவர்களுடன் இருந்து தரிசிக்
கச் சென்றபடி இருந்தனர்.

முன்பிருந்த அவநம்பிக்கை, மனச்சோர்வு எதுவும்
அவர்களிடம் இல்லை.

லாரன்ஸ் பார்வை நாலாபுறமும் யாரையோ தேடியது.

''மிஸ்டர் லாரன்ஸ்... அந்த ஜக்கம்மா பாட்டியை
தானே தேடறீங்க?''

''எக்ஸாக்ட்லி...'' லாரன்ஸ் சொல்லவும் பாட்டியும்
ஆடி வீதியில் தென்பட்டாள்.

அவளை நோக்கி ஓடினர்.

''ஹாய் பாட்டி...''

''பாட்டியா... நானா... யாரப்பா நீங்க?''

''எங்கள தெரியல?''

''தெரியலியே...''

''விளையாடாதீங்க''

ஒன்று இருந்தது. அதன் முனையில் ஒரு திரிசூல வடிவம் செதுக்கப்பட்டு கீழே எழுத்தாணிக்காரன் என்னும் எழுத்து கரும் பொறிக்கப்பட்டிருந்தன.

"அந்த கல்லைப் பிடுங்கிப் போட்டுட்டு அந்த பாவத் துலயே ஒரு பத்துக்கு பத்து அளவுல கழிப்பறையை கட்டு டுங்க...." என்றார் நடராஜன். சித்தாள் ஒருவனும் அதற்கான அந்த கல்லின் மேல் கை வைத்து அதை ஆட்ட முற்பட்டான்.

✱

அந்த நான்கு வழிச்சாலை பார்ப்பதற்கு வெளிநாடு களை ஞாபகப்படுத்தியது. விசாலபுரத்தின் குறுக்கில் புகுந்து அந்த நான்கு வழிச்சாலை சென்றது. அதன் நடுவில் அரளிச் செடிகளை வளர்த்துவிட்டிருந்ததில் அவை கலீரென்று பூத்துக்கிடந்தன.

ஊரில் உள்ள வயதான பெருசுகளில் சிலர் சாலை ஓரமாக நின்றுகொண்டு சாலையின் அழகையும் அதன் மேல் சர்ர்.... சர்ர்.... என்று விரையும் வாகனங்களையும் ரசித்தபடி இருந்தனர்.

இந்த செல்போன் யுகத்திலும் மூக்குப் பொடிக்கு இன்னமும் மௌஸ் இருக்கத்தான் செய்தது. அழகப்பன் செட்டியார் சோறில்லாமல்கூட இருந்துவிடுவார். பொடி இல்லாமல் இருக்க மாட்டார். சர்ரென்று மூக்கில் பொடியை ஏற்றும்போது உடம்பில் மின்சாரம் பாய்கிற மாதிரி இருக்கும். சுவாசிக்கத்தான் கடவுள் மூக்கைப் படைத்தான். அதில் பொடியைப் போடும் பழக்கத்தை கண்டுபிடித்து இரண்டு விதமாக மூக்கைப் பயன்படுத்திக் கொண்டது மனிதனின் புத்திசாலித்தனம். எப்பொழுதுமே மனித புத்தி குறுக்கு வழிகளில் திறம்பட வேலை செய்யும்.

அழகப்பன் செட்டியாருக்கு எழுபது வயதாகிறது. வயதாகிவிட்டாலே பொழுதுபோக்குவதில் சிரமங்கள் வந்துவிடுகின்றன. என்னவோ தெரியவில்லை. டி.வி. பார்க்க அவருக்குப் பிடிக்கவில்லை. ரேடியோவில் பாட்டு கேட்பதிலும் அதற்கான ரசனை இல்லை. அரட்டை என்றால் கொள்ளைப் பிரியம். அதில் ஊர்வம்பு நிறைய இருக்க வேண்டியதும் அவசியம்.

பொடி போட்ட சுறுசுறுப்போடு அரட்டைக்கு யாராவது அகப்படுகின்றார்களா என்று அவர் காத்திருந்த போது எதிரில் வந்தார் ஆவன்னா ஊவன்னா லட்சுமணன்.

"எவ்வளவு நேரமாய்யா உனக்காக காத்திருக்கிறது" என்று அவரிடம் சண்டைப்போட்டு பேச்சை எடுத்தார் அழகப்பன். இருவரும் போய் நாற்கரச் சாலையோரமாக தப்பிப் பிழைத்து விட்டிருந்த அரச மரத்தின் கீழ் உள்ள திண்ணை மேல் போய் அமர்ந்து கொண்டனர்.

அந்த சிமிண்ட்டு திண்ணையும் ஜிலுஜிலுவென்று இருந்து ஆசனவாய் பரப்பில் ஒரு கூச்சத்தை உருவாக் கியது.

"ரோடு போடறவங்ககிட்ட இருந்து இந்த மரமும் திண்ணையும் எப்படியோ தப்பிச்சிக்கிச்சு... இல்ல லட்சு மணா?"

"ஆமா அழகப்பா... ஆனா, இதையும் வெட்ட வந்தாங்க. அதுக்காக மண்வெட்டியையும் அரிவாளை யும் எடுத்தப்பல்லாம் கால்லயும் கைலயும் அடிபட்டு ரத்தம் பெருகவும் பயமா போச்சு. அத்தோட அந்த காலத் துல காசிக்கு போகைல நம்ம முனியப்ப சேர்வை நட்ட மரம் இது! அப்புறமா ஒரு சர்ப்பம் ஒண்ணு வந்து இந்த மரத்துக்குள்ள பூந்துக்கிச்சு. அதுல இருந்து இதை முனுசாமி

''உனக்கு கிறுக்கு பிடிச்சுப் போச்சு, அதான் உளறு ஆரம்பிச்சுட்டே...''

''உன்னைப்போல ஆட்கள் இருக்கவும்தான் கான்ட்ராக்ட் எடுத்தவன் இஷ்டத்துக்கும் வசூல் பண்ணி கொள்ளை அடிக்கிறான். கார் வெச்சிருக்கறவன்லாம் பாவிங்க... பெட்ரோல் விலை ஒரு பக்கம் போட்டுத் தாளிச்சா, இவங்க ஒரு பக்கம்...''

- அழகப்பன் செட்டியாரிடம் இந்த மாதிரி சமூக கோபங்கள் நிறையவே வெளிப்படும். அதில் நிறைய நியாயங்களும் இருக்கும். அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் லட்சுமணன் திணறியபோதுதான் அந்த படகு கார் அவர்களை ஒட்டி வந்து நின்றது. அதன் கதவின் கண்ணாடிகள் இறங்கிக் கொள்ள, உள்ளே பருத்து கொழுத்த நிலையில் கூலிங்கிளாஸ் அணிந்த ஒரு முகம், உதட்டில் சிகரெட் வேறு...

அழகப்பனும், லட்சுமணனும் கூர்மையாகப் பார்த்தனர். அவரும் புகையைக் கக்கியபடியே...

''இதுதானே விசாலபுரம்?''

''ஆமாம்...''

''இங்க சீனிவாசன்கறவர் வீடு எங்க இருக்குன்னு சொல்ல முடியுமா?''

''சீனிவாசன்னா எந்த சீனிவாசனை கேக்கறீங்க? இந்த ஊர்ல ஏழு சீனிவாசனுங்க இருக்காங்க...''

''இவர் திருப்பத்தூர் பக்கம் காலேஜ்ல புரொபசரா இருக்காரு...''

''ஓ... நம்ம படிப்பாளி சீனுவா...'' லட்சுமணன் உடனேயே மடக்கிப் பிடித்தார்.

''படிப்பாளி சீனு இல்லங்க... புரொபசர் சீனிவாசன்..''

''அட, என்ன சார் நீங்க... சீனிவாசனை சீனுன்னு கூப்பிடறதுதானே சார் உலக வழக்கம்... அதை வெச்சு சொன்னேன். எங்க ஊர்லயே அதிகம் படிச்சவர் அவருதான். அதனாலதான் படிப்பாளி சீனுவான்னு கேட்டேன்...''

''சரி... அவர் வீட்ட கொஞ்சம் காட்ட முடியுமா?''

''தாராளமா... நான் நேர்லயோ வந்து காட்டறேன். கார்ல ஏறிக்கட்டுமா?''

- லட்சுமணன் கேட்டபடியே மிக உரிமையாக பின்கதவை திறந்த கொண்டு காரில் ஏறி அமர்ந்து கொண்டார்.

''எவன் காரை எடுத்துக்கிட்டு வருவான் ஓசி சவாரி பண்ணலாம்னே கிடக்கறான்...'' என்று அழகப்பன் முணுமுணுத்துக் கொள்ள, அந்த காரும் சீறிக் கொண்டு புறப்பட்டது.

அழகப்பனும் பின்பக்கமாய் தெரிந்த காரை வெறித்த போது அதில் வாரித் தெளித்தது போல ரத்தக்கறை!

2

ஆகஸ்ட் 31- 1948.

'அந்தக் கல்லை அசைப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. அந்த கொத்தனாரோடு மேஸ்திரியும் சேர்ந்து கொண்டு அதை ஆட்டி அசைத்தே பிடுங்க முற்பட்டார்.

அதன் பிறகே அது மெல்ல அசைந்து கொடுத்தது.

''ஆமா... இங்க இந்த கல்லு எதுக்கு இருக்குது?'' கொத்தனார் அதை பிடுங்கிப் போட முனைந்தபடி கேட்டார்.

"யாருக்கு தெரியும்... இந்த வீட்டை நான் வாங்கி
நாளா இருக்குது. ஈசானக்கல்லுன்னு சொன்னாங்க. நான்
இருந்துட்டுப் போகட்டும்னு விட்டுவிட்டேன்..." என்றார்
நடராஜன்.

"கல்லுல சூலக்குறியும் எழுத்தாணிக்காரன்னு பேரும்
இருக்குது. இந்த ஊர்ல ஒரு காத்துல எழுத் தாணிக்காரன்
கன்னு ஒரு கூட்டம் இருந்ததா சொல்வாங்க..."

"அப்படின்னா யாரு அது?"

"எழுத்தாணிக்காரங்கன்னா தெரியாதா சாமி உங்
ளுக்கு... அந்தக் காலத்துல நாலு எழுத்துப் படிக்கவும்
எழுதவும் தெரிஞ்சவங்களத்தான் எழுத்தாணிக்காரங்கன்னு
சொல்லுவாங்க. இப்ப மாதிரி அப்ப ஏது பேப்பரு பேனா
லாம்? பனை ஏட்டுல குத்துக் கம்பியைப் பிடிச்சுக்கிட்டு
எதையும் எழுதணும். இல்லாட்டி உளியால இப்படி செதுக்
கணும். அப்படி எழுதறவங்களத் தான் எழுத்தாணிக்காரங்கன்னு
வாங்க..."

– பேசிக்கொண்டே அந்த கல்லை இருவருமாக தூக்கி
ஒரு பக்கமாய் போட்டு அது இருந்த குழிப்பாகத்தையும் பார்த்
தனர். கீழே அடியில் படுக்கை வாட்டில் மண்ணுக்கு பதிலாக
ஒரு பட்டியக்கல் தெரிந்தது. அந்த இடத்தில் ஒரு கல்
கிடக்க வேண்டிய அவசியமே இல்லை!

கொத்தனார் மற்றும் மேஸ்திரி முகத்தில் மெல்ல
ஒரு திகைப்பு பரவ ஆரம்பித்தது!

✱

ரத்தக் கறையைப் பார்த்த அழகப்பன் செட்டியாருக்கு
சற்று பகீரென்றது.

'வர்ற வழியில் யார் மேல காரை விட்டான்னு தெரிய
லியே பின் பாகத்துல ஒரே ரத்தமால்ல இருக்கு' என்று
முணுமுணுத்துக் கொள்ளவும், அவரை ஒட்டி சரசரவென
எட்டடி நீளத்துக்கு ஒரு சர்ப்பம் செல்லவும் சரியாக இருந்
தது. அதைப் பார்த்த நொடி அழகப்பன் முதுகுத்தண்டில்
ஒரு குறுகுறுப்பு. அந்த சர்ப்பமும் விறுவிறுவென்று அந்த
மரத்தின் பொந்துக்குள் புகுந்து மறைந்தும் போனது. அழகப்
பனுக்கு தொண்டை வறண்டுவிட்டது.

'லட்சுமணன் சொன்னது நிஜம்தான் போல....
ஆத்தாடி எவ்வளவு பெரிய பாம்பு...' என்று முனகியவராக,
அதற்கு மேல் அங்கு நிற்க தைரியமில்லாதவராக தன் வீடு
நோக்கி செல்லத் தொடங்கினார்.

புரொபசர் சீனுவாசன் வீடு!

அந்த நாளைய வீடுதான்...

வீட்டு வாசலில் பெரிய ஒதிய மரம். அதன் கிளை
எங்கும் வசந்த காலத்தில் பூக்கும் செக்கச் சிவந்த பூக்கள்,
தரை எங்கும் கொட்டிக் கிடந்த அந்த பூக்களின் மேல்
அந்த படகு கார் தேங்கி நிற்கவும் உள்ளிருந்து அந்த
கன்னங்கரிய குண்டு மனிதர் இறங்கினார். அப்படியே
லட்சுமணனும் இறங்கி வீட்டை காண்பித்தார்.

"இதாங்க நம்ம சீனு வீடு..."

"அந்தக் காலத்து வீடு போல இருக்குதே...."

"ஆமாங்க.... இந்த ஊர்ல எல்லா வீடுகளுமே பழைய
வீடுங்கதான். நகரத்தார் வீடுங்கன்னாலே சும்மா கிண்
ணுன்னுல்ல இருக்கும். இன்னிக்கெல்லாம் இப்படி கட்ட
முடியுமா?"

– லட்சுமணனிடம் பெருமை வழிய ஆரம்பித்தது.
அந்த கரிய மனிதரும் கூலிங்கிளாஸை கழற்றி பாக்கெட்டில்

போட்டவராக லட்சுமணனைப் பார்த்து, ''வீட்ட காட்டுங்
துக்கு ரொம்ப நன்றிங்க'' என்றார். அதுவே அப்படியே
நீங்கள் கழண்டு கொள்ளுங்கள் என்பது போல் இருந்தது.

லட்சுமணன் அதை கண்டுகொள்ளாதவராக, ''என்ன
விஷயமாக வந்திருக்கீங்கன்னு சொல்லவே இல்லையே...''
என்று கேட்கவும், அவரிடம் ஒரு மெல்லிய முறைப்பு.
அதற்குள் வீட்டு வாசலில் கார் வந்து நிற்பது தெரிந்து
சீனிவாசனே வெளியில் வந்து பார்த்தார். அவரைப் பார்க்க
வும், கரிய மனிதரிடம் ஒரு புன்சிரிப்பு.

''வணக்கம் புரொபசர்...''

''ஓ.... நீங்களா?''

''நானேதான்... என்னை நீங்க எதிர்ப்பார்க்கலியோ?''

''ஆமாம்... நான்தான் அப்பவே முடியாதுன்னு சொல்
லிட்டேனே....''

''அட, என்ன புரொபசர் சார், பேசுனதையே பேசி
கிட்டு... போகட்டும். உள்ற வான்னு கூப்பிட மாட்டீங்
களா?''

''உள்ற வாங்க...''

அரை மனதாக சீனுவாசன் அழைப்பதையும் கார்
காரரும் வெளியே பேச விருப்பமில்லாமல் உள்ளே செல்
வதையும் பார்த்த லட்சுமணனிடம் முகத்தில் பூச்சி பறக்கத்
தொடங்கியது. ஏதோ அந்த மட்டில் காரில் வர நேர்ந்ததை
எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டே திரும்பவும், எதிரில்
அழகப்பன் வந்து கொண்டிருந்தார். அவருக்கு லட்சு
மணனை பார்க்கவும் ஒரு கோபம்.

''என்ன அழகப்பா, உன்னை விட்டுட்டு கார்ல ஏறி
வந்துட்டேன்னு கோவமா?''

''வராதா பின்ன... நீ எல்லாம் என்ன சிநேகிதன்? ஒரு
கார்காரன் வந்து வழிய கேட்டா வாயால சொல்ல வேண்
டியதுதானே... அது என்ன சின்ன புள்ள மாதிரி ஏறி
உக்கார்ந்துக்கறது... உன்னை நினைச்சா எனக்கு எரிச்சலாத்
தான்யா வருது. நமக்குன்னு ஒரு கௌரவம் வேண்டாம்?''

அழகப்பன் செட்டியார் லட்சுமணனை போட்டு
வாங்கத் தொடங்கிவிட்டார். அப்போது அவரது புலம்பலை
மீறிக் கொண்டு புரொபசர் வீட்டுக்குள் இருந்து பலமான
குரலில் சீனிவாசன் பேசுவது காதில் விழுந்தது.

'தயவுசெய்து புறப்படுங்க சார்... அந்த இடத்தை
நான் இப்ப விக்கறதா இல்லை. அதுல நானே காம்ப்ளெக்ஸ்
கட்டடம் கட்டி வாடகைக்கு விடற எண்ணத்துல இருக்
கேன்'' என்னும் அவர் குரலே அவர்கள் இருவருக்கும்
விஷயத்தை உணர்த்திவிட்டது! பார்த்தபடியே நின்றனர்.
அந்த கரிய மனிதர் ஏமாற்றமுடன் திரும்பி வந்தார்.
சீனிவாசன் திரும்பிச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்
டார். தாழிடும் சப்தமும் கேட்டது.

அந்த கரிய மனிதரை அழகப்பனும், லட்சுமணனும்
சற்று நெருங்கி வந்து ஏறிட்டனர். அவரும் அவர்களை ஒரு
மாதிரி பார்த்தார்.

''வந்தது இடம் வாங்கறதுக்கா?'' மெல்ல ஆரம்பித்தார்
லட்சுமணன். அவரிடம் ஆமோதிப்பு.

''நம்ம சீனிவாசன் வீட்டு இடம்தான் வேணுமா?''

''ஆமாம்... அந்த மூணு ஏக்கராதான் வேணும்...''

'அந்த நிலத்தையா வாங்க ஆசைப்படறீங்க?''

''ஆமாங்க.... ஆனா, சீனிவாசன் ஒரேயடியா முடியா
துன்னுட்டார்.''

''அதுக்காக சந்தோஷப்படுங்க....''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''அது சீனிவாசன் சாரோட பரம்பரைச் சொத்து. அவங்க வீட்டுல யார் இறந்தாலும் அந்த நிலத்துலதான் புதைப்பாங்க... அங்க போய் பார்த்திருக்கீங்களா?''

''பார்த்ததில்லை... ஆனா, சார்கிட்ட இடம் இருக்குன்னு தெரிஞ்சுதான் விலைக்கு கேட்டு வந்தேன். ஆமா, இங்க ஒரு செண்ட் என்ன விலை போகுது?''

''அதை எதுக்கு கேக்கறீங்க?''

''அந்த மூணு ஏக்கருக்கு நான் ஒரு கோடி ரூபா தரேன்னேன். நீங்களே சொல்லுங்க... நல்ல ரேட்டுதானே?''

''என்னது... மூணு ஏக்கர் கட்டாந்தரைக்கு ஒரு கோடியா? ஈஸ்வரா.... ஈஸ்வரா... இங்க ரொம்ப அதிகபட்ச விலையே ஏக்கர் பத்து லட்சம்தான். மூணு ஏக்கருக்கு முப்பது லட்சம். அதுலயும் அந்த இடம் பிணங்களைப் புதைச்ச இடம் பிணம் புதைச்ச இடத்துக்கு பத்து லட்சம்கறதெல்லாம் அநியாய விலை.'' அழகப்பன் செட்டியார் வாயில் அடித்துக் கொண்டார்.

''தா பாருங்க... நாங்க வேற நல்ல இடத்தையே முடிச்சுவிடறோம், அதுவும் இதுல பாதி விலைக்கு. எங்களுக்கு அஞ்சு பர்சண்ட் கமிஷன் மட்டும் தாங்க போதும்....'' என்று லட்சுமணன் அப்போதே வியாபாரம் பேசத் தொடங்கி விட்டார்.

ஆனால், அந்த மனிதரிடம் ஆழமான மௌனம்.

''என்னங்க பேச மாட்டேங்கறீங்க.''

''இல்ல... இந்த அஞ்சு பர்சண்ட் கமிஷனை நான் இந்த சீனிவாசன் நில விஷயத்துக்கே தரேன். இவர்கிட்ட எனக்காக பேசி உங்களால சம்மதிக்க வைக்க முடியுமா?''

''அட, என்னங்க நீங்க. அது விளங்காத இடம்க. கிட்டத்தட்ட சுடுகாடு மாதிரி. அதுக்குப் போய் இப்படி ஆசைப்படறீங்களே.''

''சரி, விடுங்க... நான் வேற ஆளைப் பார்க்கறேன். ஆமா, இந்த ஊர்ல அருணாசல சாமியார்னு ஒருத்தர் இருக்காருல்ல...''

''இருக்காரு... அவரை உங்களுக்கு தெரியுமா?''

''நல்லா தெரியும்.. சென்னைக்குப் பக்கத்துல இருக்கற பம்மல்ல தொழில் பண்ற பாண்டித்துரைன்னா தெரியாத சாமியாருங்க கிடையாது...''

''அப்ப சாமியாருங்களையும் தேடிப் போவீங்களோ?''

''ஆமாம்... நான் பரம சிவபக்தன். சாமியாருங்கன்னாலும் ரொம்ப இஷ்டம். இங்க நான் இந்த மூணு ஏக்கர் இடம் வாங்க ஆசைப்படறதுகூட சாமி சொல்லிதான்...''

''நான் தெரியாமதான் கேக்கேன். அந்த சாமியாருக்கு புத்திகித்தி கெட்டுப் போச்சா... ஒரு சுடுகாட்டை போய் உங்களை வாங்கச் சொல்றாரே...''

''சென்னைல இந்த மாதிரி சுடுகாட்டை வாங்கின வங்கதான் இன்னிக்கு கோடீஸ்வரங்களா இருக்காங்க. இடத்தை சுத்தம் பண்ணி குழி தோண்டி எலும்புகளையும் அப்புறப்படுத்திட்டு அப்புறம் வாஸ்து தோஷம் கழியறதுக்காக ஒரு யாகம் பண்ணிட்டா முடிஞ்சிச்சு...''

''அது சரிங்க... அதுக்கு எதுக்கு இவ்வளவு விலை கொடுக்கணும்?''

அழகப்ப செட்டியார் பாயிண்ட்டை பிடித்தார். ஆனால், அந்த மனிதர் அதற்கு மட்டும் பதில் கூறவில்லை. அவர்களிடம் அதற்கு மேல் எதுவும் பேச விரும்பாமல் தன் காரில் ஏறிக் கொண்டு சாமியாரைப் பார்ப்பதற்கு புறப்பட்டுவிட்டார்!

3

ஆகஸ்ட் 31- 1947.

கல்லை அகற்றிய இடத்துக்கு கீழே தெரிந்த சதுரமான பட்டியக்கல் கொத்தனாரை ஆச்சரியப்படுத்தியது.

"ஐயா... இங்கு ஒரு கல் கிடக்குதுங்க... அதை அகத்தாம குழியைத் தோண்டி கடக்கால் (அஸ்திவாரம்) போட முடியாது" என்றார் கொத்தனார்.

"எங்கே, எங்கே?" என்று எட்டிப் பார்த்த மேஸ்திரி முகத்திலும் ஆச்சரியம் ரேகையாக விழுந்து ஓடியது.

"என்ன மேஸ்திரி... ஏன் அது ஒரு பாறையா இருக்கக் கூடாது?" என்று கேட்டார் நடராஜன்.

"பார்ப்போம்... நல்லா நாலு பக்கமும் மண்ணை விலக்கிட்டுப் பார்ப்போம்" என்ற கொத்தனாரும் தொடர்ந்து நாலா பக்கமும் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தத் தொடங்கினார்.

கிட்டத்தட்ட இரண்டு மீட்டர் நீள அகலத்துக்கு மண்ணை அகற்றிவிட்டு பார்த்தபோது அந்த கல்லின் நடுவில் அதை கையாலோ, இல்லை கயிறு கட்டியோ தூக்குவதற்கு தோதாக கைப்பிடி வெட்டப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த உடனேயே மேஸ்திரிக்கு புரிந்து விட்டது.

"ஐயா.. இந்த கல்லுக்கு கீழ 'அத்துவான அறை' இருக்குதுங்க. இந்த வீட்டுக்கு இது ஈசான்ய பாகம். ஈசான்யத்துல அத்துவான அறை இருந்தா அதுக்குள்ள

...வணங்கப்பட வேண்டிய விஷயம் இருக்குதுன்னு அர்த்தங்க..."

என்றார்.

"வணங்கப்பட வேண்டியதுன்னா, சாமியா?"

"தெரியாது. திறந்து பார்த்தா தெரியும். பாருங்க கல்லுலியே கைப்பிடி இருக்குது. இதுல ஒரு கயித்தை கட்டி தானு போரா சேர்ந்து இழுத்தோம்னா கல்லு மேல வரும். அப்ப உள்ளார என்ன இருக்குன்னு தெரிஞ்சிடும்.." என்றவர், கயிற்றுக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.

நடராஜன் செட்டியாருக்கு வியர்க்க ஆரம்பித்து விட்டது.

உள்ளே ஏட்டிக்கு போட்டியாக ஏதாவது இருந்தால் என்னாவது என்கிற பயம் வந்து ஒட்டிக் கொண்டது.

ஒரு கழிவறை கட்டுவதற்கு ஆசைப்பட்ட விஷயம் திசை மாறி வேறுவிதமாய் செல்கிற மாதிரி எல்லாம் தோன்றியது. விசாலாட்சியும் வந்து நின்று புடவை முந்தானையால் வாயை மூடியபடி ஆர்வமாகக் கவனிக்கத் தொடங்கினாள்.

கயிறும் வந்தது.

கைப்பிடிக்குள் புகுந்து முடிச்சுப் போட்டு மேலே ஒரு மூங்கிலை நீட்டிப் பிடித்து அதில் கயிற்றை மடக்கிக் கட்டி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாய் இரண்டு பேர் தங்களின் தோளில் மூங்கிலை வைத்து தம் கட்டி தூக்க முற்பட்டனர்.

பலப்பல வருடங்களாய் அமுங்கிக் கிடந்த கல் அசைய மறுத்தது.

மூச்சுத் திணறியது.

வியர்த்து வடிந்தது.

இறுதியாக ஒரு வழியாக அசைந்து கொடுத்த கதவை விலக்கிவிட்டு உள்ளே தெரிந்த அத்துவான அறையைப் பார்த்தபோது...

✶

டொக்... டொக்..!

கதவு தட்டப்படவே திறந்தார் சீனிவாசன். எதிரில் லட்சுமணன்!

''வாங்க மாமா...'' வரவேற்றார் சீனிவாசன்.

''யாருவே அது அந்த கருவாயன்... உம்ம சுடுகாட்டு இடத்தைக் கேட்டு வந்தான் போல தெரியுது?'' லட்சுமணன் எடுப்பிலேயே விஷயத்தை தொட்டுவிட்டார். அப்படியே உள் நுழைந்து ஹாலில் கிடந்த நாற்காலியிலும் அவர் பாணியில் ஒரு கால் மேலும் ஒரு கால் கீழுமாக உட்கார்ந்து கொண்டார்.

லட்சுமணன் கொஞ்சம் வம்பு பிடித்த மனிதர். ஊரில் உள்ள எல்லார் வீட்டு விஷயமும் ஓரளவுக்குத் தெரியும். அதனால் அவர் என்றால் ஒரு மெல்லிய பயம். அது சீனிவாசன் முகத்திலும் தெரிந்தது.

''என்ன சீனி... நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலியே...''

''என்னத்த மாமா சொல்ல... உசுரைக்கூட விட்டுடுங்க... அந்த இடத்தை மட்டும் யாருக்கும் விக்காதீங்கன்னு எங்க அப்பச்சியும் அப்பத்தாவும் சொல்லிட்டு செத்தது தான் காரணம். இதை எல்லாம் நான் அந்த ஆள்கிட்ட விலாவரியா சொல்லிக்கிட்டிருக்க பிரியப்படலை. அதான் இஷ்டமில்லை கிளம்புங்கன்னுட்டேன்.''

''அப்பச்சிக்கும் அப்பத்தாவுக்கும் நீ இப்படியா கட்டுப்படுவே. அந்த ஆள்தான் கோடி ரூவா வரைலயும் தரேங்கறான்ல....''

''நீங்க வாயைப் பிடுங்காதீங்க.... உங்க வயசுக்கு மரியாதை கொடுத்து எது காரணமோ அதை சொல்லிட்டேன். அதுக்கு மேல போட்டு நோண்டக் கூடாது...''

சீனிவாசன் முகம் கணத்தில் மாறி விட்டது.

லட்சுமணனும் முறைத்தபடியே விலகிப் போனார். வாசல் தாண்டியவர் திரும்பவும் வந்தார்.

''அந்தாள் நம்ம சாமியை பார்க்கப் போயிருக்கான். சாமி கூப்பிட்டு வித்துடுன்னு சொன்னா என்ன பண்ணுவே?''

''நான் கும்புடற அந்த குன்னக்குடி முருகனே வந்து சொன்னாலும் கேக்க மாட்டேன். ஏன்னா, அதைவிட பெருசு எங்க வீட்டுப் பெரியவங்க சொன்ன வார்த்தை...'' லட்சுமணனுக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது. அந்த நொடியே சீனிவாசன் வீட்டு லேண்ட் லைன் போனில் அமட்டல்.

போய் காதை கொடுத்தார்.

''ஆசீர்வாதம் சீனு! நான் சாமி பேசறேன். சிவபெருமான் கடாட்சத்தால எல்லாம் நல்லபடியா நடக்கட்டும். ஆமா, இப்ப நமக்கு வேண்டப்பட்ட தொண்டிமுத்துங்கறவர் இட விஷயமா உன்னை வந்து பார்த்தாராம். நீ மறுத்திட்டியாமே?''

- எடுப்பிலேயே சாமி விஷயத்தைதான் தொட்டார்.

''ஆமாம் சாமி.. இப்பதான் லட்சுமணன் மாமாகூட அந்த இடத்தை வித்தாதான் என்ன இப்போன்னு கேட்டார். நான் கும்புடற முருகனே வந்து சொன்னாலும் எங்க பெரியவங்க ஆசைப்படி அதை அப்படியேதான் வெச்சிருக்கப்

போறேன்னு சொல்லிக்கிட்டிருந்தேன். உங்களுக்கும் அ
பதிலை திரும்ப ஒரு தடவை சொல்லத் தேவையிருக்
துன்னு நினைக்கிறேன்'' என்று சாமிக்கும் சரியான வி
தில் பதிலைச் சொல்லி முடித்தார். மறுபக்கம் அ
மேல் பேசாமல் சாமியும் போனை வைப்பது சப்தத்தி
கேட்டது.

வாசலருகிலேயே நின்று கேட்டபடி இருந்த ல
மணனும் பெருமூச்சுடன் வாசல் தாண்டும்போது கூரி
தபால் ஒன்று...

ஓடிப்போய் கைழெத்துப் போட்டு வாங்கினா
சீனிவாசன். கடிதத்தை பார்த்த மாத்திரத்தில் அது சென்னை
யிலுள்ள அவரது ஒரே மகளான சந்தியாவிடமிருந்து என்பது
தெளிவாகிவிட்டது. சீனிவாசன் மனைவி மல்லிகாவு
ஆவலாக நெருங்கி வந்தாள்.

''யாருங்க... சந்தியாதானே?''

''ஆமாம் மல்லிகா...''

''அப்படியே உரத்த குரல்ல படிங்க... நானும் கேட்டு
கறேன்.''

''உன் மகதான் இன்னும் அந்தக் காலத்துலயே இரு
காள்னா நீயும் அப்படியே இருக்கியே மல்லிகா...'' என்றபடி
கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தார்.

'மை டியர் மம்மி டாடி...

அன்பு முத்தங்கள்.

இங்கு என் ட்ரெயினிங் நல்லவிதமாக முடிந்தது.
ட்யூட்டியில் சேர ஆர்டர் அடித்துக் கொடுத்துவிட்டார்கள்.
நடுவில் ஒரு நாள்கூட லீவு கிடையாது.

எனக்கு க்ரியேடிவ் அசிஸ்டெண்ட் போஸ்டிங் போட்
டுள்ளனர். எல்லாவித அலவன்ஸுகளுடனும் சேர்த்து

நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வருகிறது. முதல் மாத
சம்பளம் வாங்கியவுடன் அப்படியே எடுத்துக் கொண்டு
வருகிறேன். நமது குலதெய்வமான குன்னக்குடி முருகனுக்கு
அபிஷேகம் செயது உங்கள் விருப்பம் போல் சம்பளப்
பணத்தை உண்டியலில் போட்டுவிடலாம்.

இந்த செல்போன் யுகத்தில் இப்படி நான் கடிதம்
எழுதக் காரணம் இருக்கிறது. செல்போனில் பேசினால்
பேசின அந்த நிமிடங்களோடு என் பேச்சு முடிந்துவிடும்.
கடிதம் என்றால் அப்படியில்லை. அம்மாவுக்கு என் நினைவு
வரும்போதெல்லாம் எடுத்துப் படிக்கலாம். செலவும் கிடை
யாது. அத்துடன் கடிதங்கள்தான் எண்ணங்களை அழுத்த
மாக பகிர்ந்துகொள்ள சரியானவை. இந்த செல்போன்
சுத்த வேஸ்ட். இது தொழில்முறை பேச்சுக்குதான் மிகுந்த
பயன்தரக்கூடியது. மற்றபடி இதனால் நிறைய தீமைகளே
ஏற்படுகின்றன. என்னோடு வேலைபார்க்கும் ஒரு பெண்
மிகவும் பாவம். அவள் ஹாஸ்டலில் குளிக்கும்போது யாரோ
திருட்டுத்தனமாக செல்போனில் படம் எடுத்துவிட்டனர்.
அதைக் காட்டி பணம் புடுங்கவும் முயற்சி செய்தனர்.
பின்னர் நான்தான் அவளுக்கு தைரியம் தந்து போலீஸில்
புகார் கொடுக்கச் செய்து படம் எடுத்த நபரையும் தந்திர
மாக பிடிக்க ஏற்பாடு செய்தேன். அவன் ஒரு ஏழு வருஷத்
திற்கு வெளியே வர முடியாது. அவன் மேல் அப்படி அழுத்
தமாக குற்றத்தை பதிவு செய்துள்ளோம்.

இதைப் படித்துவிட்டு என்னை நினைத்து அநாவசி
யமாக கவலைப்படாதீர்கள். நான் ஜாக்கிரதையாகவும்
பாதுகாப்பாகவும் தான் இருக்கிறேன் - இருப்பேன்.

நான் உங்கள் பெண்.

என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது.

எனக்கு குன்றக்குடி முருகனின் துணை உள்ளது.

அந்த விபூதி அணியாமல் நான் ஆபீஸ் போவதே
கிடையாது. இதனால் ஆபீஸில் என் சக தோழிகள் நண்பர்
கள் என்னை கேலியாக 'சந்தியா மாதாஜி' என்று கிண்டலாக
கூப்பிடுகிறார்கள். ஆனால், அது எனக்கு மகிழ்ச்சியைத்
தருகின்றது.

அப்பா! நீங்கள் காபியில் சர்க்கரை சேர்த்துக் கொள்
ளாதீர்கள். அம்மா! நீ தினமும் காலை மடக்கி பயிற்சி செய்
அப்போதுதான் மூட்டுவலி வராது. இருவரும் ஆசைப்பட்டு
மொச்சைப் பயறை சாப்பிட்டு விடாதீர்கள். உங்கள் இரு
வருக்குமே அது ஆகாது.

அப்பா... இந்த கடிதம் கிடைத்ததற்கு போன் பண்
ணவும். போனில் இது தொடர்பாக ஒரு 5 நிமிடம் பேச
னால் உண்மையில் அதுதான் ஜாலி.

இப்படிக்கு, பாசத்திற்குரிய உங்கள்
சந்தியா.'

நீண்ட அந்த கடிதத்தைப் படிக்க சீனிவாசனுக்கு
மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. சந்தியாவின் தெளிவு -
அவளது தீர்க்கம் என்று எல்லாமே அவரைப் பரவசப்படுத்
தியது. மல்லிகாவின் கண்களிலும் நீர் துளிர்த்துவிட்
டிருந்தது.

''என்னங்க... முதல்ல சந்தியாவுக்கு போன் போடுங்க.
என் செல்லத்தோட குரலை முதல்ல கேட்கறேன்...'' என்று
பரபரப்பாக மாறினாள்.

''இரு, மல்லிகா! கொஞ்சம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்
திக்கோ. இன்னேரம் சந்தியா நாம லெட்டர் கிடைச்சு படிச்சி
கிட்டு இருக்கிறதா நினைச்சுக்கிட்டிருப்பா. அதே எண்ணத்
துல நம்ம போனுக்காவும் காத்திருப்பா. ஆனால், நாம

உடனே போன் பண்ணிடக் கூடாது. கொஞ்சம் அவளை
தவிக்க விடுவோம்.''

''அட, போங்க நீங்க... அது குழந்தைங்க. அதைப்
போய் தவிக்க விட்டுக்கிட்டு... உங்களுக்கு எது எதுல
விளையாடறதுன்னு இல்லையா?''

''நம்ம பிள்ளைகிட்ட நாம விளையாடாம யார்
மல்லிகா விளையாடுவா?''

''கூடாதுங்க... நம்ம பிள்ளையை நாம எதுக்காகவும்
தவிக்கவிடக் கூடாது. அது மனசு தாங்காதுங்க...''

''அட.. இதுக்காக நீ ஏன் கண் கலங்கறே. ஒரு
விளையாட்டுக்கு சொன்னதுக்கு இவ்வளவு சீரியஸ் ஆயிட்
டியே.''

''பின்ன என்னங்க... அவளே நம்மள பிரிஞ்சு தனியா
இருக்கா. ஹோட்டல் சாப்பாடு வேற - யார் கையோ -
எப்படிப்பட்ட ராசியோ? இத்தோட ஆபீஸ்ல வேலை
வேற... அதுக்கு நம்ம நினைப்புதானேங்க சுகமே....''

''அவளுக்கு மட்டுமா.. நமக்கும்தானே?''

''பேசிக்கிட்டே இருக்கீங்களே... எங்க போன்.. முதல்ல
போன் போடுங்க...''

- பரபரப்புக்கு மாறி படபடப்பில் உழன்றாள் மல்லிகா.

''ஆனாலும் இந்த பாசம் ரொம்ப பொல்லாதது
மல்லிகா. நான் போன் போட்டு தராட்டி ரயிலேறி உன்
பொண்ணைப் பார்க்க நேராவே போயிடுவே போல
இருக்கே?''

''நிச்சயமா... அப்படிப் போனா என் கையால என்
செல்லத்துக்கு ஒரு நாலு நாளைக்கு நல்லா சமைச்சு
போடுவேன்ல?''

''பைத்தியகாரி... அதுக்கு நீ இப்பவே ரெடியாகு
நானும் உன் கூட வரேன். ரெண்டு பேருமே நம்ம
முன்னால போய் நிப்போம்...''

''நிஜமாவா சொல்றீங்க?''

''போனு...''

''அதான் நேர்ல போகப் போறோமே...''

''அதுக்கு எப்படியும் ஆறு ஏழு மணி நேரம் ஆகு
அதுவரை நம்மகிட்ட இருந்து போன் வராம நம்ம பொண்ணு
தவிப்பாளே.''

''நல்லா தவிக்கட்டும்...''

''சரி.. நாம பண்ணாட்டி என்ன... அவ எப்படியும்
பண்ணுவா?''

''அதான் கிடையாது. நான் இப்பவே என் செ
போனை ஆஃப் பண்ணிடப் போறேன்.''

''அட, என்னங்க நீங்க... திரும்பத் திரும்ப உங்
போக்குலயே போகப் பார்க்கறீங்களே...''

''பைத்தியகாரி... நான் பாசத்தை தேக்கறேன், நமக்கு
போன் பண்ணி ஸ்விட்ச்சுடு ஆஃப்னு வந்து சந்தியா
தவிக்கும்போது எதிர்ல போய் நின்னா அதுக்கு எவ்வளவு
சந்தோஷமா இருக்கும்னு யோசிச்சுப் பார்....''

''அதை தவிக்கவிட்டுட்டுதானா போய் நிக்கணும்
போன் பண்ணி ரெண்டு பேரும் கிளம்பி வந்துகிட்டிருக்
கோம்னா, அது எவ்வளவு சந்தோஷப்படும். யோசிச்சுப்
பாருங்க.''

''மல்லிகா! உன் பாசத்துடிப்பு எனக்கு தெரியுது. நீ
ஒரு விஷயத்தை மறந்துட்டே எப்பவும் பேசறே. நமக்கும்

வயசாயிடிச்சு. நாம என்ன அதுகூட அதோட காலம் பூராவா
இருக்கப் போறோம்?''

''நீங்க என்ன பேசறீங்க ... உங்க பேச்சே எனக்கு
புதிரா இருக்குது..'' - மல்லிகா அரண்டு போனாள். ஆனால்,
சீனிவாசன் சிரித்தபடி தொடர்ந்தார்.

''பைத்தியக்காரி.... சேர்ந்துருக்கற மாதிரியே பிரிஞ்சும்
இருக்க தெரியணும். ஒருவேளை நம்ம காலம் முடிஞ்சு
நாம போய்ச் சேர்ந்துட்டாலும் நம்ம பொண்ணு திகைச்சுப்
போய் நின்னுடக் கூடாது. அவ பாதைல அவ முன்னேறி
போய்க்கிட்டே இருக்கணும். அதுக்கு இதெல்லாம் பயிற்சி
மாதிரி...''

- சீனிவாசன் தன் முடிவை நியாயப்படுத்தினார்.

மல்லிகாவுக்கு மட்டும் இறுதி வரை சமாதானம்
ஆகவில்லை. அவருக்குத் தெரியாதபடி ரகசியமாக சந்தியா
வுக்கு போன் செய்ய முயன்று பார்த்தாள். சந்தியா செல்
போனை எட்ட முடியவில்லை. 'நாட் ரீச்சபுள்' என்றே
வந்தது!

4

அந்த அத்துவான அறைக்குள் ஒரு பெண் சிலை ஒன்று
படுக்கை வாக்கில் கிடந்தது. பல காலமாக உள்ளடங்கி
கிடந்ததால் அதன் மேல் மண் திப்பிகள் ஒட்டிக் கிடந்தன.
கல்லை அகற்றிய நொடி வெளிச்சம் பட்டு பளிச்சென்று
தெரிந்தது அந்த சிலை. மூன்றடி அகலமும் ஐந்தடி உயரமும்
இருந்தது. கோயிலில் அம்பாள் விக்கிரகம் அமர்ந்திருப்பது
போதான் அந்த சிலையும் அமர்ந்து நிலையில் இருந்தது.

ஒரு கையில் மழுவாயுதம்! இன்னொரு கையில் ஒரு சிறு வந்தி
வைத்திருந்தது

அப்படியே மல்லாக்கப் படுத்திருக்கும் ஒருவர்
வானத்தை பார்த்தபடி படுத்திருப்பது போல அந்த சிலை
காட்சி தந்தது.

கொத்தனார், மேஸ்திரி முதல் நடராஜன் செட்டி
யாரும், விசாலாட்சியும் அதை பார்த்து வியந்தார்கள்.

"ஐயா .... சாமி சிலைங்க..." என்றார் மேஸ்திரி.

"பார்த்தா அப்படிதான் தெரியுது. ஆனா, எதனால
இப்படி உள்ள போட்டு கல்ல போட்டு மூடுனாங்கன்னு
தெரியலியே" என்றார் கொத்தனார்.

"இப்ப என்னங்கய்யா பண்ணலாம்?"

"எனக்கும் என்ன பண்றதுன்னு தெரியலியே?"

"ஏங்க நாம குன்னக்குடி மலை மேல தங்கியிருக்கற
சாமியாரை போய்ப் பார்த்து அவர்கிட்ட விவரம் கேட்
போம்?" – விசாலம் எடுத்துக் கொடுத்தாள்.

"இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் சாமியாருங்க
தான் சரி. அப்படியே செய்யுங்க! தற்காலிகமாக இந்த
இடத்தை ஒரு பலகையைப் போட்டு மூடிவைப்போம். அவர்
வந்து பார்த்துட்டு என்ன சொல்றாரோ அப்படியே செய்துடு
வோம்..."

– என்று மேஸ்திரியும் தனது வேலையை ஒத்திப்போட்
டார். நடராஜனிடம் ஒரு சனம் தெரியத் தொடங்கியது.
அவர்கள் விகைவும் விசாலம் கேட்டாள்.

"ஏங்க.... என்னங்க இதெல்லாம் – நல்லதுக்கா
கெட்டதுக்கான்னே தெரியலீங்களே."

"அதான் விசாலம் எனக்கும் புரியலை. இது கும்புட
வேண்டிய சிலையா, இல்லை இப்படி உள்ற கிடக்கிறது
தான் சரியான்னு தெரியலியே..."

"சரி, வாங்க... இப்பவே குன்னக்குடிக்கு போவோம்..."

"அதுதான் இப்ப ஒரே வழி...." என்று புறப்படு
முன் வீட்டில் இருந்து பலகைகளை தேடி எடுத்து வந்து
தோண்டிய பாகத்தின் மேல் மூடப் பார்த்தார். எவ்வளவு
முயன்றும் முழுவதுமாய் மூட முடியவில்லை. அதற்குள்
அக்கம் பக்கம் விஷயம் பரவி ஆளாளுக்கு வந்து பார்க்கத்
தொடங்கினார்!

✱

சீனிவாசனும் மல்லிகாவும் புதிய நாற்கர சாலை
யின் ஒரு ஓரத்தில் வெளியூர்ப் பேருந்துகள் வந்து நிற்கும்
இடத்தில் நின்றபடி இருந்தனர்.

துப்பாக்கியில் இருந்து தோட்டாவானது வெளிப்பட்டு
சீறிக்கொண்டு பாய்வது போல சாலை மேல் வாகனங்கள்
சீறியபடி இருந்தன. மல்லிகா முகத்தில் மட்டும் வாட்டம்
தெரிந்தது. அது சீனிவாசனுக்கு புரிந்தது.

"மல்லிகா... உன் மககூட பேசறதா இருந்தா
தாராளமா பேசு..." என்று பாக்கெட்டில் இருந்த செல்
போனை எடுத்துக் கொடுத்தார். மல்லிகாவும் முயற்சி
செய்து பார்த்தாள்.

"நாட் ரீச்சபுள்னே வருது..."

"அப்படின்னா டவர் கிடைக்காத ஒரு இடத்துல
சந்தியா இருக்கணும்."

"அது எப்படிங்க அவ்வளவு பெரிய சிடில டவர்
கிடைக்காம போகும், இங்க கிராமத்துலயே கிடைக்கும்
போது..."

"கோபப்படாதே. சில நேரங்கள்ல டவருக்கு பவர்
கட் ஏற்பட்டா இப்படி ஆகும். நம்ம நாட்டுலதான் பவர்கட்
இல்லாத ஊரே இல்லையே?"

சிவியரசனின் பேச்சு மல்லிகைக்கு [illegible]
பதில்கூறவில்லை. அவளுக்கு சந்தேகமாக [illegible]
கட்டிய மனைவியாகி வந்தபோது [illegible]

அதே சமயம் அவர்கள் வருவேன்னா [illegible]
பண்ணாம் அந்த வீட்டையே நிரந்தரமாகவே [illegible]

"என்னங்க இது... ஒரு பஸ்... நிக்கவுடுங்க..."

"பஸ்லெல்லாம் நகரத்துக்காரங்களுக்கு [illegible]
கிராமத்துல இருந்தா தோப்பு காக்கணும்..."

"நாலஞ்சுதரவே வரி கட்டினோம்?"

"நாம என்ன... அவங்கள மாதிரி ஆகிரலாமா
கட்டினோம்? ஏதோ கட்டினோம்..."

"இப்ப நீங்க ஆதரவா பேசறீங்களா... எதிர்ப்பா [illegible]
நீங்களா?"

"நான் நியாயத்தை பேசறேன். உனக்கு எப்படி [illegible]
நாக்க தோணுதோ அப்படி எடுத்துக்கோ. நாம வாழ்க்கை
சில நல்லவைகள், சில தீமைகள். கிராம வாழ்க்கையும்
அப்படித்தான்..."

"ஏங்க இப்படி மொக்க போட ஆரம்பிச்சீங்க
நல்லவரவே இருந்தீங்க?"

"என்ன பண்றது... நமக்கு பஸ் கிடைக்கிற வர
பொறுத்து போகணுமே?"

சிவியரசன் சூசகமாக சொல்லவும், அவர்கள
அந்த கறுத்த மனிதரின் கார் உரசிக் கொண்டு நிற்கும்
சரியாக இருந்தது.

கண்ணாடி சர் என்று கீழ் இறங்கியது.

அவர் முகமும் தெரிந்தது.

"ஹலோ புரொபஸர்..." என்றார்.

சிவியரசனுக்கு அவரைப் பார்க்கவும் உரிமை என்றது.
பார்வையைத் திருப்பிக் கொண்டு சாலையைப்
பார்த்தான்.

"புரொபஸர் சார்! உங்களதான, எங்க கிளம்பிட்டீங்க?"

"அது ஏதுக்கு உங்களுக்கு?"

"கோபிக்காதீங்க... நான் சென்னைதான் போறேன்.
ஏதுக்குங்க, சென்னைல எங்க இருக்கணுமோ இருங்கிக்
லாம்."

"ரொம்ப நன்றி! நாங்க பல்லவபுரம் போய்க்கறோம்."

"என்ன புரொபஸர் சார், என்னை என்னவோ ஜென்ம
விரோதிய பார்க்கற மாதிரி பார்க்கறீங்க. நான் ரொம்ப
நல்லவன் சார்."

"இப்ப கொஞ்ச வாயை மூடிக்கறீங்களா?"

சிவியரசன் கோபத்தில் வெடித்தார். அவரும்
அதற்கு மேல் அவரை சீண்டாமல் புறப்பட்டுவிட்டார்.

பின்னாலேயே இன்னொரு கார். பார்க்கும்போதே
அது ஒரு டாக்ஸி கார் என்பது பளிச்சென்று தெரிந்தது.
காரும் சிவியரசனை ஒட்டி நின்றது. உள்ளிருந்த டிரைவர்
பேசினார்...

"சார்! வாரீங்களா, வண்டி சென்னை வரை போகுது..."

"இல்லப்பா. நாங்க பல்லவபுரம் போய்க்கறோம்."

"சார்! பஸ் டிக்கெட் எல்லாமே அறுபது கொடுங்க.
நான் ஒரு பார்ட்டியை காரைக்குடில இறக்கிட்டு கம்மா
போறதுக்கு யாராவது கூட்டிக்கிட்டுப் போகலாமேன்னு
பார்க்கறேன்."

– டிரைவர் குரலில் தெரிந்த யதார்த்தம் சீனிவாசனை சற்று யோசிக்க வைத்தது. மல்லிகாவுக்கும் பஸ்ஸுக்கு காத்திருப்பது எரிச்சலாக இருந்தது.

''என்னங்க போலாங்க...'' என்றாள்.

''சரிப்பா... ஆனா, ஒரு கண்டிஷன். போற வழில எங்களைத் தவிர யாரையும் ஏத்தக்கூடாது...''

''அப்ப ஒரு நூறு ரூபா சேர்த்து போட்டுக் கொடுங்க சார்...''

''இப்பதான் பஸ் டிக்கெட் காசு கொடுத்தா போதும்னே...''

''பெட்ரோல் விலையைக் கொஞ்சம் யோசிச்சு பாருங்க சார்.''

''இதோ பாருப்பா... அந்த விலை உயர்வு உனக்கு மட்டமில்ல எனக்கும்தான்...''

''சரிங்க சார்... உங்க விருப்பம் போல கொடுங்க... ஏறுங்க.''

–அவன் இறங்கிப் பின்னால டிக்கியைத் திறந்தான்

அவர்களின் பெட்டியை அதில் வைக்கச் சொல்லி விட்டு பின் டிக்கியை மூடினான்.

அவர்களும் பின் ஸீட்டில் ஏறிக் கொண்டனர்.

மல்லிகாவுக்கு உற்சாகமாக இருந்தது.

டிரைவர் உள்ளே ஏ.ஸி-யை போட்டுவிட்டு சிடியில் பாட்டையும் போட்டான்.

''டிரைவர்... பாட்டை நிறுத்து. எனக்கு இந்த சினிமா பாட்டுன்னாலே பிடிக்காது'' என்றார்.

''ஏங்க இப்ப ட்ரை பண்ணிப் பாருங்களேன். சந்தியா வோட லைன் கிடைக்குதான்னு...'' என்று மல்லிகா மகள் நினைப்பிலேயே போய் நின்றாள்.

அவரும் முயன்றார். காரிடமும் நல்ல வேகம். லைன் கிடைக்கவில்லை.

அதற்குள் டோல்கேட் வந்துவிட்டது.

எரிச்சலுடன் பணத்தை கொடுத்து ரசீதை வாங்கிக் கொண்டான் டிரைவர். அப்படியே ரசீது கொடுத்த நபரை பார்த்து, ''சரியான கொள்ளக்காரங்கடா நீங்க... ரோடு போட்டு பராமரிக்கறதுங்கறது அரசாங்கத்தோட கடமை. ரோடு போட்டு அதை வெச்சே சம்பாதிக்கறது அரசாங்கம் கிடையாது'' என்றும் கடிந்து கொண்டான். அதை சீனிவாச னும் ரசித்தார்.

''சரியா சொன்னேப்பா... என் ஊருக்கு நான் வரதுக்கு இவங்ககிட்ட தினமும் அனுமதி கேக்க வேண்டியதா இருக்கு. வழியை மறிச்சு உட்கார்ந்துகிட்டு உயிரை எடுக்க றாங்க. நீ சொன்ன மாதிரி இது ஒரு அரசாங்கத்தோட கடமை. கடமைக்கு காசு வாங்குனாகூட பரவாயில்லை. நூத்துக் கணக்குல வரிய போட்டு கொள்ளை அடிக்க றாங்க. இவங்க உண்மைலே எவ்வளவு செலவு செய்து ரோடு போட்டாங்க. அதை ரெகவர் பண்ண இந்த வரிதான் சரியான அளவான்னு எனக்குள்ள எவ்வளவோ கேள்வி கள் இருக்கு. சில டோல்கேட்ல பத்து பதினஞ்சு வருஷ மெல்லாம் வரி வசூலை விடாம நடத்தறாங்க. மக்கள் பொங்கி எழாம இவங்க திருந்த மாட்டாங்க..,''

– டிரைவர் சகஜமாக பேசியவராக திரும்பவும் சந்தியா வுக்கு முயன்றார். நல்ல வேளையாக இந்த முறை லைன் கிடைத்தது.

''சந்தியா...''

''அப்பா...''

''என்னம்மா... உன் லைனே கிடைக்க மாட்டேங்குது.''

''நான் உள்ள எம்.டி. ரூம்ல இருந்தேன்பா. அங்கு செல் ஒர்க் பண்ணாது. ஜாமர் அங்கு இருக்கு...''

''அதானே பார்த்தேன்.... பை த பை, உன் லெட்டர் கிடைச்சிச்சு. நல்லா எழுதியிருந்தே.''

''தேங்க்ஸ்ப்பா... உங்க போனுக்காகத்தான் ரூமை விட்டு வெளிய வந்தேன் உடனே பண்ணிட்டீங்க...''

''கொஞ்சம் இரு. உங்கம்மா பேசணுமாம்....'' என்ற சீனிவாசன், போனை மல்லிகாவிடம் தரும்போது, ''நாம கார்ல வந்துகிட்டிருக்கறத சொல்லாம பேசு. சஸ்பென்ஸா போய் நிப்போம்...'' என்றார் மெல்லிய குரலில். மல்லிகா அதை பொருட்படுத்தாமல் போனை வாங்கி ''சந்தி'' என்றாள் அவள் பாணியில்.

''அம்மா... அடுத்த மாசம் கட்டாயம் உன்னைச் சந்திக்கறேம்மா'' என்றாள் கிண்டலாக. களுக்கென்று அதைக் கேட்டு சிரித்துவிட்டாள் மல்லிகா.

''இந்த சிரிப்புக்காகதாம்மா அப்படிப் பேசினேன்...''

''எப்படிடா இருக்கே?''

''எனக்கென்னம்மா நல்லா இருக்கேன்... ஆனா, சாப்பாடுதான் படுத்துது. நான் சாப்பிடற மெஸ்ல அண்ணாசாமிங்கற ஒருத்தர்தான் சமையல்காரர். அவருக்கு இந்த உலகத்துலயே ரொம்ப பிடிச்ச காய் பூசணிக்காய் தான். தினம் அதுலதான் சாம்பார். அதே போல பீட்ரூட் பொரியல்தான் தினமும். ஏன்னா, இது ரெண்டும்தான் காய்கறி மார்க்கெட்ல சீப். இதுக்கு பேரே ஹோட்டல் காயாம். வேடிக்கையா இல்லை.''

''அப்ப உன் நாக்கு செத்துக்கிடக்குன்னு சொல்...''

''அது செத்து, அதை நான் புதைச்சு பல மாசமாச்சு. இப்ப நான் பேசறது வாடகைக்கு வாங்குன ஒரு நாக்கு மூல மாம்மா...'' - சளைக்காமல் சந்தியா ஜாலிக்கு ஜாலியாக பேசினாள். மல்லிகாவுக்கு கண்களில் நீர் துளிர்த்துவிட்டது, நாக்கு நுனிக்கு வந்துவிட்டது 'உன்னைப் பார்க்க நாங்கள் வந்து கொண்டிருகிறோம்' என்னும் வார்த்தைகள். அதை கவனித்து ஜாடையாலேயே தடுத்தார் சீனிவாசன்.

''அப்புறம்மா... ஊர்ல மழையா?''

''மழையாவது கிழையாவது... எல்லாரும் சேர்ந்து அழுதாக்கா வேணா கண்ல தண்ணி வந்து அது தரைல கொட்டினா உண்டு.''

''ஊருணில தண்ணி இருக்குதா- வத்திடிச்சா?''

''ஏதோ கொஞ்சம் இருக்குது. பவர் கட்தாம்மா ரொம்ப மோசம். வெயிலுக்கு அதுக்கும் உடம்பு அவிஞ்சு போயிடுது...''

''இங்க எனக்கு ஆபீஸ்ல ஏ.ஸிம்மா. அதனால வெயில் தெரியல. ஆனா, ரூம்ல ரொம்ப மோசம். சென்னையும் சூரிய பகவானுக்கு ரொம்ப புடிச்ச ஊர்தாம்மா. டெய்லி இங்க கதகளியே ஆடறாரு.''

''பேசாம ஒரு தனி வீடு பார்த்துடேன்.''

''வாடகை எட்டாயிரத்துல இருந்து பத்தாயிரம் கேப் பாங்க. தோட்டத்துல பாதி கிணறு மாதிரி சம்பளத்துல பாதியை அதுக்குக் கொடுத்துட்டு அப்புறம் என்னம்மா பண்ண?''

''அதுக்காக இப்படியே எவ்வளவு நாள் கஷ்டப்பட?''

''நான் என் சம்பாத்தியத்துல சொந்தமா ஒரு வீடு வாங்கறவரை சகிச்சுக்கிட்டுதாம்மா இருந்தாகணும்.''

"அதுக்கெல்லாம் யோகம் வேணும்மா... நமக்குன்னு இருக்கற இடத்தையே நம்மால பயன்படுத்த முடியலியே..." -மல்லிகா பேச்சுவாக்கில் நிலத்திடம் வந்தாள்.

"நானும் கேக்கணும்னு இருந்தேன். அதை வெச்சுக் கிட்டிருக்கறதுக்கு யாருக்காவது கொடுத்துடலாமேம்மா..."

"அதை ஏன் கேக்கறே... இன்னிக்குகூட ஒருத்தர் அதை கேட்டு வந்தாரு..." - மல்லிகா அந்த நில விஷயத்தை தொட்டுப் பேச ஆரம்பித்தபோதுதான் அந்த அசம்பா விதமும் நடக்க ஆரம்பித்தது!

ஓடிக்கொண்டிருந்த அந்த காரின் மேல் ஒரு பிரேக் பிடிக்காத லாரி அசுர வேகத்தில் வந்து மோதியது. அந்த சப்தம் செல்போனில் சந்தியா காதுகளில் கேட்டதோடு சரி. செல்போன் சிதைந்துபோனது.

செல்போன் மட்டும்தானா?

5

அக்கம் பக்கம் முழுக்க அந்த சிலை பற்றித்தான் பேச்சு. நடராஜனும் விசாலாட்சியும் சாமியாரைப் பார்க்க புறப்பட்டுவிட்டிருந்தனர். அப்போது அவர்கள் எதிரில் ஒரு தொண்ணூறு வயது மதிக்கத் தகுந்த வயதான பெரியவர் தடியை ஊன்றியபடி வந்து கொண்டிருந்தார். அவரை பார்க்கவும் நடராஜனும் விசாலாட்சியும் நின்றனர்.

அவரும் அருகில் வந்து அத்துவான அறைக்குழிக்குள் வானம் பார்த்தபடி கிடந்த அந்த சிலையை எட்டிப் பார்த்தார். பார்த்த வேகத்தில், "அடக்கெரகமே! இது ஊரை விட்டுப்

போவலியா - இங்கனயேதான் கெடக்குதா?" என்ற கேள்வி யோடு முணுமுணுத்தார்.

"ஐயா... அப்ப உங்களுக்கு இந்த சிலையைப் பத்தி தெரியுமா?"

"ஏன் தெரியாம... நல்லா தெரியும். இது ஜேஷ்டா தேவி யோட சிலை... நவபாஷாணத்துல செஞ்சது..." என்றார்.

"ஜேஷ்டாதேவியா... நான் கேள்விப்பட்டதேயில்லையே?"

"இப்ப கோயில்ல வெச்சு கும்பிட்டுகிட்டு இருந் தால்ல எல்லாருக்கும் தெரியறதுக்கு... அதான் பத்தாம் நாற்றாண்டோட போயிடிச்சே?"

"என்னய்யா சொல்றீங்க?"

"இப்பதாண்டா சக்தி, மாரியம்மன், லட்சுமி, அம்பாள்னு. அந்த காலத்துல, அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முந்தி ஜேஷ்டாதேவிதான் ஊருக்கே மகாலட்சுமி. ஆனா, இவளை கும்புடற விதமா கும்புடணும். வழிபாட்ல ஒரு தப்பு பண்ணாலும் அவ்வளவுதான்... ஊரே நாசமாய் போயிடும்..."

"என்னென்னமோ சொல்றீங்களே..."

"நான் எங்கடா சொல்றேன். என் காதுல விழுந்ததை சொல்றேன். இந்த ஜேஷ்டாதேவி சிலைதான் ஊர் எல்லை மாரியம்மன் கோயில்ல இருந்துச்சு. கோயிலுக்கு கூரையும் கிடையாது. இவளுக்கு கூரை ஆகாது..."

"ஏன் அப்படி?"

"எனக்கென்ன தெரியும். ஆனா, ஒரு விஷயம் நல்லா தெரியும். இவளை முறையா கும்புடாம விட்டப்போ ஊரே காய ஆரம்பிச்சிடிச்சு. எங்க பார் வறட்சி. ஒரு வருஷம்

ரெண்டு வருஷம் இல்லை... 13 வருஷம் மழை பெய்யாம போனா என்ன ஆகும்?''

– அந்த பெரியவர் சொன்னதை கேட்டு நடராஜனும் விசாலாட்சியும் வாயைப் பிளந்தனர். ''அப்ப இமயமலைப் பக்கத்துல இருந்து வந்த ஒரு சாமியார்தான், இந்த சிலையை முதல்ல படுக்க வைங்க. மழை வரும்னார். அப்படிச் செய்யவும் மழை பிச்சுக்கிட்டு கொட்டுனுச்சி...''

– பெரியவர் சொன்னதில் நம்ப முடியாத பல செய்திகள்!

காரைக்குடி, 'ஜி.ஹெச்.'

சீனிவாசன் உயிர் பிரிந்துவிட்டிருந்தது. மல்லிகா உயிரோ துடித்துக் கொண்டிருந்தது.

தலை தெறிக்க வந்திருந்தாள் சந்தியா.

உறவுக்காரர்களும் வந்து சேர்ந்திருந்தனர்.

சிலர் ஓடிவந்து சந்தியாவை கட்டிக் கொண்டு அழுதனர். சந்தியா உறைந்து போயிருந்தாள். அவள் வாழ்நாளில் துக்கம் என்றால் என்னவென்றே தெரியாதபடி வளர்ந்தவள். அவள் பிறந்ததில் இருந்து உறவினர்களின் மரணம்கூட நிகழவில்லை. எனவே, மரணம் பற்றியோ - அதன் தாக்கம் பற்றியோ லேசு பாசாகக்கூட அவளுக்கு தெரியாது. சீனிவாசனும் அவளுக்கு அதை உணர்த்தியதில்லை.

அவள் சந்தித்த பிரிவுத் துயரமே முதல் முறையாக அவள் வேலைக்காக சென்னைக்கு சென்றபோதுதான் நேர்ந்தது. உண்மையில் மிக கொடுமையான நாட்கள் அவை. ஒரு அளவுக்கு மேல் அப்பா, அம்மா பிரிவை அவள் நெஞ்சால் சுமக்க முடியவில்லை. நடு இரவில்

எழுந்து அமர்ந்து கொண்டு அவள் அழுதபோது பக்கத்து படுக்கையில் இருந்த பெண் அதை கவனித்து ஆறுதல் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக தேற்றினாள்.

பெண்களுக்குப் பிரிவுத் துயரம் பழக வேண்டும். திருமண பந்தம் நிரந்தரமாக அவர்களைப் பிரித்து விடுகிறது. அதன் பின் தாய் தகப்பன்கூட ஒரு மூன்றாவது மனிதன் போலத்தான். தன் கணவன், தன் குழந்தை, தன் வீடு என்று வாழ்ந்தாக வேண்டியதுதான் பெண்ணின் வாழ்க்கைப் போக்கு. அதையே மாற்ற வேண்டும் என்பாள். சீனிவாசன் எப்போது திருமணப் பேச்செடுத்தாலும், 'அப்பா.... உங்களையும் அம்மாவையும் நான் ஒருபோதும் பிரியமாட்டேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறவர் இதுக்கு சம்மதிச்சா கல்யாணம். இல்லேன்னா கல்யாணமே வேண்டாம்...' என்பாள். சீனிவாசன் சிரிப்பார்.

''அம்மாடி... ஆயிரமாயிரம் வருஷத்து விஷயத்தை நீ என்னமோ ஒரு நாள்ல மாத்திடலாம்னு நினைக்கறே. உன் பாசம் எனக்குப் புரியுது. இதெல்லாம் கொஞ்ச நாள் தான்மா. நீ சந்தோஷமா உன் புருஷன் வீட்ல வாழ்ந்தா அதுதாம்மா எங்களுக்கு நீ எங்க கூட இருக்கறத விடவே பெரிய சந்தோஷம்'' என்பார்.

''ஏன்பா... எவ்வளவோ விஷயங்கள் காலத்தால மாறலையா... நான் மாத்திக் காட்டறேன்.

எப்பவும் பிள்ளை வீட்டுகாரங்கதான் பெண்பார்க்க வரணுமா? ஏன் நாம போய் பையனைப் பார்க்கக்கூடாது? அப்ப நீங்க ஏன் பையனை பார்த்து, ஆடத் தெரியுமா.. பாடத் தெரியுமான்னு கேக்கக் கூடாது- நாம் மாத்திக் காட்டுவோம்பா...'' என்பாள். சீனிவாசன் அதை ரசித்து சிரிப்பார். அப்படி ரசித்து சிரித்த முகம் பேண்டேஜ்

போட்டு கட்டப்பட்டு மார்ச்சுவரியில் பிணங்களோடு பிணங்களாய் கிடந்தது. அதை பார்க்கப் பார்க்க சந்தியாவுக்கு அடிவயிற்றை என்னவோ செய்தது. மனித வாழ்வில் இப்படி எல்லாம் துன்பப் பகுதிகள் ஒளிந்திருப்பதே அவளுக்கு இப்போதுதான் தெரியும்.

'ஐயோ... இது என்ன கொடுமை?

சில மணி நேரங்களுக்கு முன்பு வரை கலகலவென்று பேசியவர் இப்போது இப்படிப் பொட்டலமாக கிடக்கிறாரே!' - அவள் கண்களில் நீர் முட்டிற்று.

அப்போது அவர் கட்டுப் போட்ட உடலின் மேல் மார்ச்சுவரி ரிப்போர்ட் ஷீட்டை பார்த்து அவர் பேரை எழுதி, அவருக்கு என ஒரு நம்பரையும் போட்டு அந்த உடம்பையும் ஒரு ஓரமாய் இழுத்துக் கிடத்தினான் மார்ச்சுவரி ஸ்வீப்பர்.

''அத்தை.... அப்பாவை அவன் குப்பை மாதிரி இழுத்து போடறான். போய் சொல்லுங்க அத்தை...'' - சந்தியா வெடித்துவிட்டாள். அது அந்த ஸ்வீப்பர் காதில் விழவேயில்லை. வெளியே வந்து அவளிடமே, ''உங்க பாடியோட பேர் என்ன?'' என்று கேட்கவும், வாழ்க்கை இவ்வளவு நிலையற்றதா என்று கேட்க தோன்றியது.

''பாடி இல்லய்யா. அப்பா... என் அப்பா... பேர் சீனிவாசன்.''

''ஓ! சீனிவாச பாடியா?'' அவன் அந்த பாடியை விடவில்லை. சந்தியாவுக்கு அது முதல் காட்சி. அவன் வரையில் அது பத்தாயிரத்துக்கும் மேலான பிணங்களில் ஒன்று.

அப்போது டாக்டர் வந்தார். சந்தியாவிடம் சில தாள்களில் கையெழுத்து வாங்கினார். நடுநடுவே அதற்கு

இதற்கு என்று இஷ்டத்துக்கும் பணம் கேட்டனர். போலீஸ்காரர்கள் சர்டிபிகேட் தர வேண்டுமாம். அவர்கள் பிணத்தை அப்படியே நிறுத்தி வைக்க முடியுமாம். ''ஆக்ஸிடெண்ட்ல சில விஷயங்கள் க்ளியராகல... இது கொலையாகூட இருக்கலாம்' என்று அவர்கள் ராகத்தை மாற்றிப் பாடினாலே தொலைந்தது. அது பணத்திற்காகதான்.

செத்தபின் மனிதன் எதற்குமே பயன்படுவதில்லை என்று யார் சொன்னது? ஜி.ஹெச்.ல போய் பார்த்தால் தெரியும். இறந்தவருக்கு இருக்கும் சமூக அந்தஸ்து, சொந்தபந்தங்கள் இவைகளை வைத்து அவர் ரேட் இஷ்டத்துக்கும் உயர்ந்துவிடும். ஆம்புலன்ஸில் பிணத்தை ஏற்றுபவனில் இருந்து டிரைவர் வரை காராம்பசுவாக நினைத்து கறந்து விடுவார்கள். அந்த காட்சிகள் எல்லாமும் அங்கேயும் அரங்கேறின. அப்பாவே போய்விட்ட நிலையில் பணம் என்ன பணம் என்கிற மன அமைப்புதான் அவர்கள் கறக்கவும் அடிப்படை.

டாக்டரும் கையைச் சொறிந்தார்.

''இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எல்லாம் போட்ருக்கா ராம்மா'' என்று கேட்டார்.

''போட்ருக்கார்...''

''அப்படியே ஆக்ஸிடெண்ட் சர்டிபிகேட், மார்ச்சுவரி சர்டிபிகேட், டெத் சர்டிபிகேட் எல்லாமே ரொம்ப முக்கியம். நடந்தது 100% விபத்துன்னு நாங்க எழுதுனாதான் க்ளைம் அமவுண்ட் அப்படியே வரும். இது கொலையாகூட இருக்க வாய்ப்பிருக்குன்னா போச்சு...''

- டாக்டர் அவள் வயிற்றில் பீதியைக் கரைத்தார். சந்தியாவுக்கு புரிந்தது.

பள்ளியில் முதல் மதிப்பெண் எடுத்து மெடிக்கல் சீட் வாங்கி டாக்டர் ஆகத் தெரிந்தவருக்கு முதல் தர மனிதராக நடந்து கொள்ளத் தெரியாததை எண்ணி நெஞ்சு துடித்தது.

''உங்க லஞ்சம் எவ்வளவு சார்?'' என்று பளிச்சென்று கேட்டாள். அவருக்கு அவள் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது.

''ல... லஞ்சமா.... நோ.... நோ.... இதெல்லாம் ஃபோர்ஸ் லிட்டிம்மா, இந்த இடத்துல நீ வேலை பார்த்துப் பார். உனக்கு கஷ்டம் தெரியும். சாபக்கேடான உத்தியோகம்'' என்று அப்படியே தனது நிலையை நியாயப்படுத்த தொடங்கிவிட்டார். சந்தியா ஹேண்ட் பேக்கில் இருந்து இரண்டாயிரம் ரூபாவை நீட்டினாள். கொடுக்கும்போதே இதுக்காக நான், ''நாலு நாள் என் ஆபீஸ்ல கஷ்டப்படணும்'' என்று சொல்லத் தவறவில்லை.

எப்படியோ உடம்பு வந்து சேர்ந்தது.

எல்லோரும் வேனில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

சந்தியாவுக்கு 'ஐ.சி.யூ'-வில் இருக்கும் அம்மாவின் எண்ணம் நெஞ்சை நசுக்கியது.

''போய் அம்மாவைப் பார்த்துட்டு வந்துடறேன்...'' என்று இறங்கி ஓடினாள்.

ஐ.சி.யூ.!

உள்ளே மூக்கில் குழாய் செருகப்பட்ட நிலையில் பெரும் இழுவையோடு கிடந்தாள் மல்லிகா. அங்கே அருகேயே நின்றபடி இருந்தார் அந்த கறுப்பு மனிதர் தொண்டிமுத்து!

சந்தியா வரவும், ''அம்மாடி! நீதான் நம்ம புரொபசர் சார் மகளாம்மா?'' என்று கனிவுடன் ஆரம்பித்தார்.

''ஆமாம்.... நீங்க...''

''நான் யாருங்கறத அப்புறமா சொல்றேன். முதல்ல உங்க அம்மா நிலை என்னன்னு தெரிஞ்சுக்கோ. தலைல மூளைகிட்ட அடி. அதனால இப்ப உங்கம்மா கோமா ஸ்டேஜ்ல இருக்காங்க...''

''ஐயோ...'' - சந்தியாவுக்கு பின்முதுகில் யாரோ ஈட்டியால் குத்தியது போல் இருந்தது.

''அம்மாடி.. மனசை திடப்படுத்திக்கோ. எல்லாம் எப்பவோ செஞ்ச பாவம். விதி யாரை விட்டுச்சு...''

''நீங்க யார் சார்?''

''சொல்றேம்மா... என் பேர் தொண்டிமுத்து. என்னைப் பத்தி உங்கம்மா உன்கிட்ட எதுவுமே சொல்லலியா?''

''இல்லையே...''

''அடடா... நேத்துகூட உன் கிட்ட பேசப் போறதா சொன்னாங்களே...''

''பரவால்ல... இப்ப சொல்லுங்க... நீங்க யார்?''

''அம்மா... நான் ஒரு ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்ற நபர்மா... உங்க ஊர்ல உங்களுக்கு சொந்தமான இடம் ஒரு மூணு ஏக்கர் இருக்குல்ல?''

''அதுக்கென்ன?''

''அதை நான்தாம்மா வாங்கியிருக்கேன்.''

''என்னது... நீங்க வாங்கியிருக்கீங்களா?''

''ஆமாம்மா... என்கிட்ட அக்ரீமெண்ட்ல கையெழுத்து போட்டுட்டு ஒரு அம்பதாயிரம் அட்வான்ஸ் வாங்கிட்டு தான் உன்னைப் பார்க்கவே உன் அப்பாவும் அம்மாவும் புறப் பட்டாங்க...''

"என்னால இதை நம்ப முடியல.... அப்பா அதை விக்கவே போறதில்ல... அப்படி செய்தா அது பெரிய துரோகம்கற மாதிரில்ல சொல்லிக்கிட்டிருந்தாரு..."

"என்கிட்டயும் அப்படிதாம்மா சொன்னாரு. ஆனா, உங்கம்மாதான் வற்புறுத்தி சம்மதிக்க வெச்சுட்டாங்க."

"நிஜமாவா?"

"அம்மாடி... இப்ப அதை எல்லாம் பேச நேரமில்ல. உன் வாழ்க்கைல நீ ரொம்ப முக்கியமான தருணத்துல வேற இருக்கே... முதல்ல போய் அப்பா காரியத்தை முடிப் போம். பிறகு மத்த விஷயத்தை பேசுவோம். வாம்மா..." என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியே வேளை நோக்கி செல்லத் தொடங்கினார்.

சந்தியாவுக்கு எல்லாமே புதிதாகவும் புதிராகவும் இருந்தன!

6

நடராஜன் முன்னாலும் விசாலம் முன்னாலும் அந்த தொண்டு கிழம் ஜேஷ்டாதேவி சிலையைப் பார்த்தபடியே சொல்ல ஆரம்பித்திருந்தது.

"எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... எனக்கு அப்ப ஏழு எட்டு வயசு இருக்கும். இந்த சிலை அப்பவும் பூமிக்கடில தான் இருந்தது. அப்ப இந்த வீடு சேக்கப்பன் என்கிறவருக்கு சொந்தமாக இருந்தது. இதேபோல ஏதோ ஒரு மராமத்து வேலை பார்க்கறதுக்காக அவர் பள்ளம் தோண்டி னப்போ இந்த சிலை கண்ணுல பட்டுது. சாமி சிலையை யாரோ புதைச்சு வெச்சருக்காங்களே. எதுக்குன்னு தெரியலியேன்னு ஊர்

யூரா பேச்சு. அப்பால இதை நிமிர்த்த ஒரு இடத்துல உக்காத் தியும் வெச்சாங்க. அன்னிக்கு ஆரம்பிச்சது ஊரோட கஷ்டம்... அப்புறம் 13 வருஷத்துக்கு அந்த கஷ்டம் நீங்கலை. 13 வருஷம் மழை இல்லை. ஊருணியில எதுலயும் தண்ணி இல்லை. ஜனங்கள்ல சரிபாதி பேர் பசி பட்டினின்னு பஞ்சத் தாலேயே செத்துப் போனாங்க. சேக்கப்பன் அவர் குடும்பம் ஊட காலாரா, சீதபேதி வந்து செத்தாங்க. அதுக்கு முந்தி வரை செல்வ செழிப்போட இருந்த விசாபுரம் அப்படியே காஞ்ச பய ஊரா மாறிப்போச்சு. இந்த ஊரில வாழ்ந்த பல செல்வந் தர்கள் வீடு வாசல் நிலம் நீச்சை எல்லாம் கிடைச்ச விலைக்கு வித்துட்டுப் போனாங்க. இப்ப இந்த ஊர்ல இருக்குதே கிரானைட் தொழிற்சாலை... இதுக்கான இடத்தை அன்னிக்கு ஏக்கர் நூறு ரூபாய்க்கு இதோட முதலாளியான குஜராத் சேட் வாங்குனாருன்னா நம்புவீங்களா?" - அந்த வயதான பெரியவர் வாயில் இருந்து காலத்தால் மறைந்துபோன பல ரகசியங்கள் வெளிப்பட்டபடி இருந்தன.

"ஏக்கர் நூறு ரூபாய்க்கு... இன்னிக்கு பத்து லட்சத் துக்கு மேல போகுதே?"

பலரும் வாயைப் பிளந்தனர்.

"சரி... இப்ப இதை என்ன செய்யலாம்?" என்று கேட்டார் நடராஜன்.

"உன் இடத்துல கிடைச்சிருக்கு. நீதான் முடிவெடுக் கணும்."

"எனக்கு இது என் இடத்துல இருக்குறது புடிக்கல. நான் இதை வெளியேத்திட்டு இங்க என் குடும்பம் தேவைக்கு கழிப்பறை கட்டிக்கப் போறோன்..." என்று முடித்தார் நடராஜன்.

சிலை தூக்கி வெளியே திருப்பப்பட்டது.

அப்வேளையில் வாசல் மூலம் மழைநீரும் [illegible] நது. சிலையை நிமிர்த்திய அவர் மனி தேர்ந்த [illegible] மேலும் விலை கல்லொன்று வெளிப் [illegible]

அதைப் பார்த்த ஒருவர், "இது [illegible] உடனேயே வேலையைக் காட்டுங்க [illegible] மழையும் ஓயப்போறதில்ல. [illegible] கொண்டு போய் போடுங்கப்பா..." [illegible] அந்த சிலை ஒரு நல்லவருடைய [illegible] எடுத்துச் செல்லப்பட்டது. [illegible] பலகைக்கு பக்கத்தில் இருக்கிற [illegible] வேட்டாந்தரை. அங்கே வெறும் [illegible] கொட்டுவது போல கொட்டிவிட்டு [illegible] காரன். அந்த நொடி வானில் திரும்பவும் [illegible] மழை பெய்ய ஆரம்பித்தது!

*

மயானம்!

ஜி.நெஞ்சில் இருந்து ஒரு பெயிண்ட் உதிர்ந்து [illegible] ஸ்ட்ரெச்சரில் தூக்கி வரப்பட்டிருந்த சீனிவாசன் உட [illegible] மயானத்தின் ஒரு ஓரத்தில் குப்பையைபோல கிடத்தப்பட்டு விட்ட நிலையில், அவர்கள் ஒரு ஐந்நூறு ரூபாயை பிடுங்கிக் கொண்டு ஓடிப் போனார்கள்!

சந்தியாவுக்கு பெரியப்பா ஒருவர் இருக்கிறார். அவ மகன் தினேஷ் நேராக மயானத்துக்கே வந்திருந்தான் அவன்தான் சீனிவாசனுக்கு காரியம் செய்ய வேண்டு என்று உறவுக்காரர்கள் கூறிவிட்டனர்.

தினேஷ் ... நீ தான் மகன் உறவாவுறே - உன் சித்தப்பா

[illegible] முன்னை நின்று பண்ணப்பா" என்று [illegible] [illegible] இந்த அவலை நாறு முடு வேட்டுக்கு [illegible] [illegible] விபரி பட்டை போட்டுவிட்டு [illegible] [illegible] அவரது காரியங்களில் இறங்கிவிட்டனர்.

சீனிவாசனின் உடம்பில் முகம் மட்டும் வெளியில் தெரிந்தது. மற்ற பாகங்கள் கட்டுக்குள் அடங்கியிருந்தன. அந்த முகத்தின் மேலேயும் சில [illegible] [illegible] மேல் கோபம் வந்து அருகில் அமர்ந்த [illegible] விட்டார்கள். அப்படியே முகத்தை உற்றுப் பார்த்து குறித்து குறித்து அழ ஆரம்பித்து விட்டார்.

சற்றே இருப்பவர்களுக்கெல்லாம் பாவமே பரிதாப [illegible] இருந்தது. பிறந்தவர்கள் ஒரு நாள் இறந்துதான் ஆக வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் எப்பட்டவரது வாழவே விரும்புகிறோம். அந்த வாழ்க்கை முடிந்து போகும்போது அது இயற்கை என்று எண்ணாமல் ஏதோ நிகழக்கூடாததை நிகழ்வது போல அழுது புலம்பு கிறோம்.

மயானத்தில் சில ஆடுகள் மேய்ந்தபடி இருந்தன.

மிளகாய்களுக்கு போடப்பட்ட மரவலைகளில் உள்ள முக்கனை எல்லாம் தின்று அவை ஒரு பக்கம் தங்கள் உயிரை வளர்க்கப் போராடியபடி இருந்தன. ஒரு இடத்தில் சந்தனவிதமான காட்சிகள்!

அந்த தொண்டுமுத்துவும் மயானத்திற்கு வந்திருந் தார்.

அவரது படு கார் மயானத்துக்கு வெளியில் நின்றி ருந்தது. அவரைப் பார்த்த லட்சுமணனுக்கும், அழகப்ப னுக்கும் ஆச்சரியம் அப்பி எடுத்தது.

"என்னங்க.. என்னமோ ரொம்ப வேண்டப்பட்டவர் மாதிரி மயானத்துக்கே வந்துட்டீங்க?" என்று அழகப்பன் அவர் காதை கடித்தார்.

தொண்டிமுத்து முகம் ஒரு மாதிரி ஆனது.

"அதானே... ஆமாம், புரொபசர்தான் செத்துட்டாரே... அந்த நிலத்தை வாங்க முடியும்னு நீங்க எந்த நம்பிக்கைல இருக்கீங்க?" என்று லட்சுமணன் ஒரு பக்கம் முணுமுணுத்தார்.

தொண்டிமுத்து அவர்கள் இருவரையும் கூர்மையாகப் பார்த்தார். பின் சடங்கை கவனிக்கத் தொடங்கினார்.

சந்தியா அழுது கொண்டேயிருந்தாள். மெல்ல அவள் பக்கமாய் போய் நிற்க முயன்றார் லட்சுமணன். அது தொண்டிமுத்துவை என்னவெல்லாமோ செய்தது. லட்சுமணன் மற்றும் அழகப்பனுடன் ஒரு ஓரமாக ஒதுங்கினார். பக்கத்தில் ஒரு சமாதி. அதன் மேல் ஒரு தாடி முளைத்த ஆடு. சமாதியில் இருபது வருடங்களுக்கு முன் செத்துவிட்ட பாண்டியம்மாள் என்பவளின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது

லட்சுமணன், தொண்டிமுத்துவிடம் உக்கார்ந்து பேசுவோமா என்று கேட்டார். சமாதி மேலேயே அமர்ந்தார் தொண்டிமுத்துவும்.

"சீனிவாசன் சார் இடத்தை எனக்கு விக்க சம்மதிச்சுட்டார். என்கிட்ட அட்வான்ஸ் வாங்கிட்டு போனப்புறம் தான் ஆக்ஸிடெண்ட் ஆச்சு..." என்று ஆரம்பித்தார்.

"அப்புறம்?" பதிலுக்கு லட்சுமணன் கேட்ட தொனியே கேலியாக இருந்தது.

"என்ன அப்புறம்? நான் என்ன கதையா சொல்றேன்."

"கதையா இருந்தாதான் நாங்க ரசிப்போமே?"

"அப்ப உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"அதான் கழுத்தைப் பிடிச்சு தள்ளாத குறையா அவர் உங்கள வீட்ட விட்டு வெளியேத்துனதை கண்ணால பார்த்தோமே."

"அது வாஸ்தவம்தாங்க... ஆனா, அப்புறமா அவர் மனைவி மல்லிகா எடுத்துச் சொல்லி சார் கன்வின்ஸ் ஆயிட்டாரு."

"அப்ப இடத்தை வாங்க அட்வான்ஸ் கொடுத்துட்டீங்க..."

"ஆமா... ரிஜிஸ்ட்ரேஷன்போது மிச்சப் பணத்தை கொடுத்து செட்டில் பண்ணிடுவேன்ல?"

"அதான் போய்ட்டாரே... என்ன பண்ணுவீங்க?"

"ஏன் பொண்டாட்டி இருக்காங்களே... மகள் இருக்கால்ல?"

"அவங்க கோமாவுல கிடக்காங்க... இந்த பொண்ணு இவங்க அப்பாவை போல நாலு மடங்கு. இது வந்து இடத்தை விக்கும்னு கனவுகூட காணாதீங்க..."

"அதான் நடக்காது... சீனிவாசன் சார் முழு சம்மதம்னு ஸ்டாம்ப் பேப்பர்ல எழுதி கையெழுத்து போட்டுருக்கார்..."

"கையெழுத்தா... அதை யார் வேணா போடலாம் ரேகை இருக்கா?"

"சந்தேகமா இருக்குதா... அந்த பத்திரம்கூட கார்ல தான் இருக்கு - காட்டவா?"

"எங்க... காட்டுங்க பார்ப்போம்...."

- லட்சுமணன் துளிகூட நம்பாத பாவனையை காட்ட, தொண்டிமுத்து விலகி காரை நோக்கிப் போனார். அதற்குள் இருவரிடமும் குசுகுசுப்பு.

''லட்சு... இவன் பெரிய புளுகுனியா இருக்கா னேப்பா.''

''விடாக்கண்டனாவும் இருக்கான். எனக்கென்னவோ நம்ம சீனு மேல இவனேகூட லாரி ஏத்தி கொன்னுருப் பான்னு தோணுதுப்பா...''

''நானும் அப்படித்தான் நினைக்கறேன். பெரிய ஆஸ்பத்திரில பொணம் கிடக்கவும் அங்கேயும் வந்துட்டா னேப்பா...''

''அப்படி என்னப்பா அந்த இடத்துல இருக்கு... நமக்கு தெரிஞ்சு அது ஒரு சுடுகாடு. தோண்டுன இடமெல்லாம் எலும்புங்கதான் கிடைக்கும். என் இடத்துக்கு பக்கத்துல சுடுகாடான்னு நம்ம ஆனா ரூனா சுப்ரமணியம் செட்டியார் கோர்ட்ல கேஸ் போட்டாரு. கடைசில அரசாங்கம் இந்த சுடுகாட்டை ஊர் சுடுகாட்டாக்கிட்டு அந்த இடத்தை பொட்டல்னு அறிவிச்சிடிச்சு. ஆனா, அது நாங்க பரம் பரையா வெச்சிருக்கிற எங்க குலதெய்வ கோயில் நிலம்னு நம்ம சீனிவாசன் தாத்தா ராமநாதன் கோர்ட்டுக்கு போய் தங்களோட உரிமையை நிரூபிச்சாரு. அப்பால அவர் மகன் நடராஜன் அதுல புளியமரங்கள வெச்சு பயிர் பண்ணப் பார்த்தாரு. இதானே அதோட வரலாறு...''

''வரட்டும் விடு... இந்தாள் என்ன பண்றான்னு பார்ப்போம்.

- அழகப்பன் கார் கதவை மூடிவிட்டு திரும்பி வந்தபடி இருக்கும் தொண்டிமுத்துவை பார்த்தபடியே சொன்னார்.

சீனிவாசனுக்கான மயான காரியங்கள் ஒருபுறம் நடந்தபடி இருந்தன. சீனிவாசனை எரிமேடையில் கிடத்தி எருமுட்டைகளை அடுக்கத் தொடங்கியிருந்தனர்.

தொண்டுமுத்துவும் நெருங்கி வந்து கைவசமிருந்த அக்ரீமெண்ட் காப்பியை காண்பித்தார். அதில் நேற்றைய தேதியை குறிப்பிட்டு தெளிவாக அந்த மூன்று ஏக்கர் இடத்தை ஒரு ஏக்கர் ஐந்து லட்சம் எனும் கணக்கிற்கு மொத்தமாக பதினைந்து லட்ச ரூபாய்க்கு பேசி முடிக்கப் பட்டு அட்வான்ஸாக 50000 ரூபாய் கொடுக்கப்பட்டு சீனிவாசனும் கையெழுத்துப் போட்டிருந்தார். கீழே விரல் ரேகையும் இருந்தது.

இருவருக்குமே பகீர் என்றது.

''யோவ்... நீ பெரிய ஜித்தன்யா... கோடி ரூவா இடத்துக்கு 15 லட்சமா... யார்கிட்ட காது குத்தறே?''

''அது நான் மனசுல வெச்சிருந்த விலை. ஆனா, சீனிவாசன் சார் அஞ்சு லட்சத்துக்கே சம்மதிச்சுட்டாரு...''

''என்ன... அவர் இப்ப உயிரோட இல்லேங்கற தைரியத்துல எங்ககிட்ட கதை உட்டு பார்க்கறியா?''

''இதோ பாருங்க... உங்க கிட்ட எனக்கென்ன பேச்சு. இந்த இடத்துக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம். ஏதோ ஊர்க்காரங்களாச்சே - நான் விலாசம் கேட்டு வந்தப்போ வழி காட்டினீங்களேன்னு உங்ககிட்ட இதை எல்லாம் காமிச் சேன். ரொம்பவே எகிறுறீங்களே...''

- தொண்டிமுத்துவும் திமிற ஆரம்பித்தார்.

''பார்க்கறோம்யா... பார்க்கறோம்.. அந்த பொண்ணு சந்தியாகிட்ட நடந்த அவ்வளவையும் சொல்றேன். புரொ பசர் கிட்ட கடைசி கடைசியா நான்கூட, அந்த இடத்தை கொடுத்துத் தொலைச்சா என்ன என்று சொன்னப்ப நாய்

மாதிரி என்னைக் கடிக்கப் பார்த்தாரு. எல்லாத்தையும் சொல்றேன்....''

- லட்சுமணன் விரலை ஆட்டியவிதமே நீயா, நானா என்று பார்த்துவிடுவோம் என்கிற மாதிரிதான் இருந்தது.

அடுத்த நொடியே தொண்டிமுத்து சிரிக்கத் தொடங்கி விட்டார்.

''என்னய்யா சிரிக்கிறே... எங்களை பார்த்தா கேணப் பயலா தெரியுதா?''

''சேச்சே... அப்படி எல்லாம் எதுவும் இல்ல. உங்க தைரியம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. எனக்கு தைரியம் தான் பெரிய சொத்து.''

''இப்ப நீ விஷயத்துக்கு வா... இந்த பத்திரம் கையெழுத்தெல்லாம் செட்டப்புதானே?''

''ஆமாம்.. எனக்கு அந்த இடம் வேணும். நான் சொன்ன மாதிரி ஒரு கோடிய இப்பவும் தர தயாரா இருக்கேன். ஆனா, இந்த பத்திரப்படி அக்ரீமெண்ட்டுபடி 15 லட்சத்த அந்த பொண்ணு கைல கொடுத்து ரிஜிஸ்திரேஷன் ஆகட் டும். மீதி 85 லட்சத்தை உங்களுக்கு பிரிச்சுக் கொடுத் துடறேன். ஆனா, என் கூட கடைசி வரை இருந்து அந்த பொண்ணுகிட்டயும் பேசி ரிஜிஸ்திரேஷன் நடக்கும்படி செய்யணும். சம்மதமா?''

- தொண்டிமுத்து அவ்வளவு வேகமாக ஒரேயடி யாக பணத்தால் அடிப்பார் என்று அவர்கள் இருவரும் துளிகூட எதிர்பார்க்கவில்லை!

விக்கித்துப் போய்விட்டனர்.

''இடத்துக்கு பதினஞ்சு லட்சம். ஆனா, எங்களுக்கு 85 லட்சமா? யோவ், என்ன எங்க காதுல பெரிய தாமரை பூவாவே வைக்கறதுன்னு முடிவு பண்ணிட்டியா?''

''சத்தியமா இல்லை. வேணும்னா அந்த பொண் ணுக்கு ஏக்கருக்கு 10 லட்சம்னு முப்பது லட்சத்த கொடுத் துட்டு உங்களுக்கு 70 லட்சம் தரவா?''

''ஏய், என்ன நீ... எக்ஸ்பிரஸ் வேகத்துல ஏலம் போடறே? நாங்க தெரியாமதான் கேக்கறோம் அப்படி என்னய்யா இருக்கு அந்த இடத்துல?''

''அது எதுக்கு உங்களுக்கு... கூடிய சீக்கிரம் இந்த ஊரே மாறப் போகுது. பெரிய பெரிய ஐ.டி. கம்பெனிங்க இந்த ஊருக்கு வரப்போகுது. அதுல பல வெளிநாட்டு கம்பெனிகளும் அடக்கம். இந்த ஊர்ல இருந்து ஆகாயத் துல சுத்திக்கிட்டிருக்கிற இன்சாட்டுங்கற விண்கப்பலை பிடிக்கறது ரொம்ப ஈசியாம். இதுக்கு பின்னால இப்படி நிறைய விஷயம் இருக்குது...''

''ஓ... அப்படிப் போகுதா கதை. இப்பல்ல புரியுது?''

- லட்சுமணன், அழகப்பனை அகன்ற கண்களுடன் பார்த்து கையை சொடக்கவும்...

''லட்சுமணா... அப்ப என் பேர்ல இருக்குற முப்பது செண்ட் இடத்துக்கும்கூட நல்ல மதிப்பு வரும்னு சொல்லு...'' என்று உற்சாகமானார்.

''ஓ... உங்க கிட்ட முப்பது செண்ட் இருக்கா... பலே! இன்னும் முப்பது ஏக்கராகூட நான் வாங்கிக்கறேன். நல்ல விலையும் தரேன். இந்த நிமிஷத்துல இருந்து நாமெல் லாம் ஒண்ணு - என்ன சொல்றீங்க?''

- தொண்டிமுத்து கையைக் குலுக்குவதற்காக நீட்டி னார்.

லட்சுமணனும், அழகப்பனும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு விட்டு தொண்டிமுத்து பக்கம் திரும்பி கைகுலுக் காமல் வெறித்தனர்.

''என்ன சந்தேகமா இருக்குதா?''

''பின்ன... நீ என்ன காந்திக்கு பேரனா... இல்ல அரிச்சந்திரன் வீட்டு கொல்லைல பொறந்தவனா?''

''யோவ்... இவங்களவிட களவாணிதான்யா சொல் லுதல சுத்தமானவன். நாம ஒத்துமையா இருந்தா ஊரே நம்ம கைல. இல்லாட்டி எனக்கொண்ணும் இல்ல. உங்க ளுக்கு தர நினைக்கற பணத்தை நான் நம்ம அருணாசல சாமிக்கு நன்கொடையா கொடுத்தாலே போதும். அவரே என் வேலையை முடிச்சுக் கொடுத்துடுவாரு...'''

– தொண்டிமுத்து, சாமியாரை தொடவும், இருவருக்கும் ஷாக்கடித்தது. இருவரும் தனியே போய் குசுகுசுவென்று பேசிவிட்டு திரும்பி வந்து சரி என்று கட்டை விரலை காட்டி சிரித்தனர்.

அதேசமயம் சீனிவாசன் உடல் மேல் தினேஷ் தீப்பந் தத்தால் தீ மூட்டியபடி இருந்தான். சந்தியா ஓவென்று பெரும் குலெடுத்து வெடித்து அழுததும் அந்த சுடுகாடு முழுக்க கேட்டது!'

அன்று பெய்ய ஆரம்பித்த மழை அதன்பின் நான்கு நாட்களுக்கு நிற்கவில்லை. ஊரெல்லாம் மழைநீர் தேங்கி குறிப்பாக எங்கே அந்த ஜேஷ்டாதேவி சிலையைத் தூக்கிப் போட்டிருந்தார்களோ அந்த இடத்தில் மழைநீரால் ஜேஷ்டா தேவி சிலை மூழ்கும்வரை மழை பெய்து அது மூழ்கிய பிறகே மழையும் நின்றது, அதை ஊரே திரண்டு போய் பார்த்து ஆச்சரியப்பட்டது.

''அந்த சாமி சிலையை நாம தூக்கிப் போடவும் கோபம் வந்து மழை கொட்டுனுச்சி. அது தண்ணியில் மூழ்கவும் மழை நின்னு போச்சு... இதுல இருந்து ஒரு உண்மை நல்லா தெரியுது. இந்த சாமி சிலை வெளிய இருந்தா மழை பெய்யும். உள்ள இருந்தாதான் மழை நிக்கும்'' என்று.

ஊருக்குள் இப்படி பல மாதிரி பேசிக் கொண்டார் கள். எல்லாமே நடராஜன்-விசாலாட்சி காதுகளுக்கும் போயிற்று.

அவர்களால்தான் பிரச்னையே என்றும் பேச்சு திசை மாறத் தொடங்கிவிட்டது. ஆனால், நடராஜனும் விசாலாட் சியும் குன்னக்கடி சென்று சந்தித்த சாமியார் வேறுவிதமாக கூறினார்.

''மனுஷக் கூட்டம் குறைவாகவும் ஜாதிகளோட எண்ணிக்கை குறைவாகவும் இருந்த காலத்துல ஜேஷ்டாதேவி வழிபாடுதான் முதல்ல இருந்தது. ஜேஷ்டாதேவி யாரோ இல்லை. ஒரு வகைல லட்சுமியோட சகோதரி. மூத்தவள்னு அர்த்தம் எடுத்துக்கலாம். இவளை முறையா வழிபடணும். எந்த வீடு சுத்தமாகவும், பக்தியாகவும் சத்திய தர்மத்தோட யும் இருக்கோ அந்த வீட்டுக்குள்ள இவ நுழைய மாட்டா. அதுக்கு மாறா தலையை விரிச்சுப் போட்டுக்கிட்டு குப்பை யும் கூளமுமா ஒரு வீடு இருந்தாலோ, இல்லை அந்த வீட்டுப் பெண் தீட்டை தீத்துக்காம இருந்தாலோ அங்க இவ முதல்ல நுழைவா. இவ நுழைஞ்சா அவ்வளவுதான் அந்த வீடு... ஒரு நல்ல விஷயத்தை அன்பா சொல்லி நடைமுறைப்படுத்தறது ஒரு விதம். அதே நல்ல விஷயத்தை கண்டிப்போட சொல்லி நடைமுறைப்படுத்தறது இன்னொரு விதம். ஜேஷ்டாதேவி கண்டிப்பானவ... இவ இருக்குற ஊர்ல எல்லாரும் சுத்த

பத்தமா இருக்கணும். உண்மையா நடக்கணும். அப்படி நடக்காத போதுதான் இப்படி ஆகும்.

பிரச்னை உங்ககிட்ட இல்லை. ஊர்தான்.

ஊரைத் திருத்த முடியாதுன்னு நீங்க நினைச்சா இந்த சிலையை யாருக்கும் தெரியமா முன்பு இருந்த மாதிரியே புதைச்சு வெச்சுடுங்க...'' என்றார்.

நடராஜனுக்கும் அதுதான் சரி என்று தோன்றியது!

ஆஸ்பத்திரி! கணவர் இறந்ததே தெரியாதபடி கோமாவில் கிடந்தாள் மல்லிகா. உயிர் இருக்க இறந்து போவது என்பது இதுதான். அம்மாவைப் பார்க்க வந்திருந்த சந்தியாவுக்கு கண்களிரண்டும் வெளிறிப்போய் விட்டிருந்தன. தனியே இருந்த டாக்டரைப் போய்ச் சந்தித்தாள்.

''டாக்டர்...''

''வாம்மா -உட்கார்...''

''அம்மா பத்தி...''

''அம்மா பத்தி தெளிவாவே சொல்றேம்மா. அம்மா உடம்புல எந்த பிரச்னையும் இல்லை. ஆனா, தலைல அடிப்பட்டதுல மூளை பாதிக்கப்பட்டிருக்கு. அதான் கோமாவுக்குப் போய்ட்டாங்க.''

''இதை குணப்படுத்த முடியும்தான?''

''இதுக்கு ஒரு டாக்டரா பதில் சொல்றதைவிட மனுஷனா பதில் சொல்றதுதாம்மா சரி. அந்த வகைல பார்த்தாக்கா 50%தான் சான்ஸ். ட்ரீட்மெண்ட் ஒர்க் அவுட்டாகி இந்த 50% அறுபது, எழுபதுன்னு உயர்ந்தா நிச்சயமா உங்கம்மா கோமாவுல இருந்து திரும்பிடுவாங்க.

ட்ரீட்மெண்ட் ஒர்க் அவுட்டாகலைன்னா அப்படியே தலைகீழா போகவும் வாய்ப்பிருக்கு.''

''உங்க வீட்ல யாருக்காவது இப்படி ஆயிருந்தா என்ன டாக்டர் பண்ணுவீங்க?''

''நான் போராடுவேம்மா. ஏன் சொல்றேன்னா... இவங்க சாகணும்னு விதி இருந்தாதான் உங்கப்பா மாதிரி அப்பவே செத்துப்போயிருக்கலாமே. எப்ப இவங்க உயிர் போகலையோ அப்பவே இவங்க வாழணும்கறதுதானே இறைவனோட விருப்பமா இருக்க முடியும்.''

- டாக்டரின் அந்த யதார்த்தமான பதில் சந்தியாவுக்கும் பிடித்துவிட்டது மனதுக்கும் தெம்பாக இருந்தது.

''அப்ப அம்மாவுக்கு ட்ரீட்மெண்ட் கொடுங்க டாக்டர்... உங்க நம்பிக்கை, என் பிரார்த்தனை எல்லாம் கை கொடுக்கட்டும்...''

''நிச்சயம் கைகொடுக்குமா... நம்பிக்கை வை. ஆனா...''' இழுத்தார்.

''என்ன டாக்டர்?''

''கொஞ்சம் செலவாகும்மா...''

''கொஞ்சம்னா எவ்வளவு டாக்டர்?''

''நிரந்தரமா இவங்களுக்கு ஒரு நர்ஸை போடணும். இவங்க ரொடீன் பாடி ஆக்டிவிடீசை வாட்ச் பண்ணணும். அதுபோக மூளைக்கு ஸ்பெஷல் நியூரோ சர்ஜன் ஒருத்தர் வந்துதான் ட்ரீட்மெண்ட் தருவார். சமயத்துல மருந்தை ஃபாரின்ல இருந்து தருவிக்க வேண்டி வரலாம்.''

''அப்ப ஆயிரக்கணக்குல இல்லை... லட்சக்கணக்குல தான் செலவாகும்னு சொல்லுங்க.''

''ஆமாம்மா...''

''லட்சங்கள்னா எத்தனை லட்சம் டாக்டர்?''

'துல்லியமா சொல்ல முடியாது. ஆறு மாசத்துல உங்க அம்மா குணம் ஆயிட்டா ஒரு நாலஞ்சு லட்சம். அதுவே வருஷக் கணக்குல போனா பத்துப் பதினைந்து லட்சம் வரை ஆகும்...''

-டாக்டர் மென்று மென்று கூறிவிட்டார். ஆனால், சந்தியாவுக்கு தலைக்கு மேல் ஒரு மலை வந்து ஏறிக்கொள்ளட்டுமா என்று கேட்பது போல் இருந்தது. நெடுநேரம் மௌனம் சாதித்தாள்.

''நீ யோசிச்சு நாளைக்கு கூட சொல்லும்மா...'' என்றார் டாக்டர்.

''சப்போஸ் அவ்வளவு செலவு பண்ண முடியாதுன்னா டாக்டர்?''

''முடியாதுன்னா என்ன பண்ண முடியும்... இப்ப கொடுக்கற ட்ரீட்மெண்ட்டை நிறுத்தவேண்டியதுதான். பல்ஸ் கொஞ்சம் கொஞ்சமா அடங்கி ஒரு மூணு நாள்ல உங்கம்மா உயிரும் பிரிஞ்சுடும்.'' - டாக்டர் நிதானமான குரலில்தான் சொன்னார்.

ஆனால், சந்தியாவுக்கு அவள் உயிரேகூட சேர்ந்து போய்விடும் போல வலித்தது.

''நோ டாக்டர்...'' என்றாள். கன்னக் கதுப்பில் கண்ணீர் உருண்டது.

''அப்ப செலவுக்கு வழி என்னன்னு பார்க்கறதுதாம்மா நல்லது....''

டாக்டர் அழுத்தமாக கூறவும், மௌனமாக எழுந்திருந்தாள்.

''ப்ளீஸ் டாக்டர்... அம்மாவுக்கான ட்ரீட்மெண்ட்டை தயவுசெய்து கன்டினியூ பண்ணுங்க. எனக்கு என் அம்மா

வேணும். அப்பா போனதையே என்னால தாங்க முடியல. அம்மாவும் போய்ட்டா நான் உயிர் வாழறதுல அர்த்தமே இல்லை டாக்டர்.''

''உணர்ச்சிவசப்படாதம்மா... வீட்டுக்குப் போய் உன் உறவுக்காரங்க கிட்ட கலந்து பேசும்மா. அப்புறம் ஒரு முடிவுக்கு வா.''- சந்தியாவும் மௌனமாக புறப்பட்டாள்.

✸

பஸ்ஸை விட்டு இறங்கி ஊருக்குள் நடந்தபோது அவளையே சிலர் வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். தங்கள் வழக்கமான இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த அழகப்பனும், லட்சுமணனும் அவளருகில் வந்து, ''என்ன சந்தியா. ஆஸ்பத்திரிக்கு போய்ட்டு வர்றியா?'' என்று ஆரம்பித்தனர்.

''ஆமாம் மாமா.''

''வீட்டுக்கு வந்திருந்தோம். யாரும் இல்லை. உன் பெரியப்பா தினேஷும், உங்க பெரியம்மாவும் மட்டும்தான் இருந்தாங்க...''

''மாமா, அத்தை, சித்தி, சித்தப்பால்லாம் இருந்தாங்களே.''

''இப்பல்லாம் யாரும்மா சாவு வீட்ல பத்து நாளும் தங்கி இருக்காங்க. சுடுகாட்டில இருந்து வந்த உடனேயே குளிச்சிட்டு அடுத்த பஸ்ஸை பிடிச்சுப் போயே போயிட்றாங்க.''

''ஆமா... டாக்டர், அம்மா விஷயத்துல என்னம்மா சொன்னார்?''

''இப்ப எதுவும் சொல்ல முடியாதுன்னுட்டார் மாமா! ஆனா, அம்மா பூரணமா குணமாயிடுவாங்கன்னு நான் நம்பறேன் மாமா...''

"நம்பும்மா. நம்பிக்கைதானே வாழ்க்கை. ஆனா, லட்சக்கணக்குல செலவாகுமேம்மா."

"ஆமாம் மாமா... ஏற்பாடு செய்யணும்."

"உனக்கென்னம்மா... அதான் அந்த 3 ஏக்கரா இடம் இருக்குதே, அதை வித்தாதான் ஒரு பத்து பதினஞ்சு லட்சம் வருமே?"

-அழகப்பன் மெல்ல ஆழம் பார்ப்பது போல ஆரம் பித்தார்.

சந்தியாவுக்கு கொஞ்சம் சுரீர் என்றது. எதுவும் பேசா மல் நடந்தாள்.

வீட்டை அடைந்தபோது அவர்கள் சொன்னது போல பெரியம்மாவும் தினேஷும் மட்டும் இருந்தனர்.

"பெரியம்மா... எங்க யாரையும் காணோம்?"

"எல்லாம் ஊருக்குப் போயிட்டாங்கம்மா. உன்கிட்ட போன் பண்ணி பேசறோம்னாங்க."

"அப்படி என்ன அவசரம் பெரியம்மா?"

"என்னம்மா அப்படிச் சொல்லிட்டே... உங்கம்மாவை குணப்படுத்த நீ பணம் கிணம் கேட்டுட்டா..." - பெரியம்மா சொன்னபோது சுரீர் என்று தைத்தது. அந்த நொடி அப்பா வும் அம்மாவும் எத்தனை பெரிய நிழல் - எத்தனை பெரிய பாதுகாப்பு சுவர் என்றுதான் தோன்றிற்று.

சரசரவென்று கண்ணீர் திரண்டு வந்தது.

"அழாதே சந்தியா... மனசை தேத்திக்கோ... அம்மா விஷயத்துல என்ன முடிவெடுத்திருக்கே?"

"என்ன முடிவெடுக்க முடியும் பெரியம்மா... ட்ரீட் மெண்ட் கொடுத்து காப்பாத்தறதுதானே நமக்கு இருக்கற ஒரே வழி."

"ஏதோ கைல கால்ல காயம்னா நீ சொல்றது சரி... இது கோமா. கடைசி வரை உங்கம்மா கண் திறக்காமலே போயிட்டா?"

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க பெரியம்மா?"

"விட்டுடு... அப்பாவோட சேர்ந்து அம்மாவும் போகட் டும். இந்த வீடு இருக்கு சொந்தமா. இது போக 3 ஏக்கரா இடம் உங்கப்பாவுக்குன்னு இருக்கு. நீயும் வேலை பார்க்கறே. சம்பாதிக்கறதால நல்ல இடம் வரும். புருஷன் பிள்ளை குட்டின்னு வாழற வழியைப் பார்..."

- பெரியம்மாவை வெறித்த விழிகளோடு பார்த்தாள் சந்தியா.

"ஏம்மா.. நான் சொன்னது உனக்கு பிடிக்கலையா?"

"ஆமாம் பெரியம்மா..."

'பல லட்சம் செலவு பண்ணி வீணா போய்ட்டா என்னம்மா பண்ணுவே?"

"போகட்டும் பெரியம்மா..."

"பணத்துக்கு எங்க போவே?"

"அது என் கவலை பெரியம்மா..."

"நீ பேசுறத பார்த்தா எல்லாத்தையும் நான் சமாளிச் சிக்கறேன்னு சொல்ற மாதிரி இருக்கே?"

"ஆமாம் - அப்படித்தான். எங்கம்மாவை கொல்ல சொல்ற யாரும் எனக்கு தேவையில்லை."

"நான் உன் நல்லதுக்குத்தான் சொன்னேன்..."

"ஆனா, என் மனசு அப்படி அதை பார்க்கலை - பார்க்கவும் முடியலை."

"சரிம்மா. அப்புறம் உன் இஷ்டம்... திங்கள் புறப்படுப்பா. சாயந்தர பஸ்ஸை பிடிச்சா காலைல கோழி கூப்பிட நாமா நம்ம வீட்டுக்குப் போய்டலாம்."

- அடுத்த அரை மணி நேரத்தில் அவர்கள் இருவரும் கூட புறப்பட்டு விட்டனர். சந்தியா மட்டும் தன்னந்தனியாக... சுவர்களில் அப்பா அம்மாவின் புகைப்படங்கள். அவள் குழந்தையாக இருந்ததில் இருந்து படிப்படியாக அவள் வளர்ந்தது வரை விதம் விதமாய் புகைப்படங்கள்.

பார்க்கப் பார்க்க மனதை உருக்கிற்று.

உலகில் யாருக்கும் இப்படி ஒரு நிலை வரக்கூடாது. குமுறினாள். அப்போது வாசற்புரம் ஒரு உருவம் ஏறிட்டாள்.

தொண்டிமுத்து - முகத்தில் ஒருவித சிரிப்புடன்.

"வரலமா?"

"வாங்க..."

உள்ளே வந்தார். வரும்போதே கையில் மாலை. அதை சீனிவாசன் புகைப்படத்துக்கு அணிவித்தார்.

பின் இடுப்பு மடிப்பில் இருந்து 500 ரூபாய் கட்டுகள் மூன்றை வெளியில் எடுத்தார். மொத்தமாக ஒண்ணரை லட்சம்.

"என்ன இது?"

"பணம்மா... போய் முதல்ல அம்மாவுக்கு ஆஸ்பத்திரில கட்டு."

"'நீங்க யார் எனக்கு பணம் தர?"

"என்னம்மா இப்படி கேட்டுட்டே... இது உன் பணம் தாம்மா. நான்தான் ஆஸ்பத்திரிலேயே சொன்னேனே....

உங்கப்பா என்கிட்ட இரண்டு நாள் முந்தி அக்ரீமெண்ட் போட்டார்னு..."

"என்னால அதை நம்ப முடியல...."

"இந்த அக்ரீமெண்ட் பேப்பரை பாரும்மா..."

- எடுத்து நீட்டினார். அதில் தெரிந்த கையெழுத்து சந்தியாவை கட்டிப் போட்டது.

"இப்ப என்ன சொல்றதுன்னே தெரியல சார்..."

"ஒரு வகைல உனக்கு நல்லதுதானேம்மா இது... எல்லா சொந்தக்காரங்களும் ஓடிட்ட நிலைல உனக்கும் உங்கம்மாவை காப்பாத்த பணம் தேவைப்படுது. நான் தரப் போற 15 லட்சம் உங்கம்மாவை காப்பாத்தினா சந்தோஷம் தானே?"

- தொண்டிமுத்து பாயிண்ட்டோடு பேசவும், சந்தியா வால் பதிலேதும் பேச முடியவில்லை. மௌனமாக பணத்தை வாங்கிக் கொண்டாள்.

"மீதி பணத்தை வர்ற வெள்ளிக்கிழமை பத்திரப் பதிவின்போது தரேம்மா. காலைல 11.30-க்கு நல்ல நேரம். கையெழுத்து போட வந்துடு. நான் வண்டி அனுப்பறேன். வரும்போது மறக்காம நிலம் சம்பந்தப்பட்ட ஒரிஜினல் டாகுமெண்ட்ஸ் எல்லாத்தையும் கொண்டு கிட்டு வந்துடு..."

சொல்லிவிட்டு வெற்றிச் சிரிப்போடு வெளியேறினார்.

பணத்தை கையில் வைத்தபடி எதுவும் பேசாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள் சந்தியா.

8

ஜேஷ்டாதேவி சிலையைப் பார்க்க வந்திருந்தார் குன்னக்குடி சாமியார். கூடவே அவரது தலைமை சிஷ்யன் அருணாசலம். மேட்டு நிலத்தில் தண்ணீர் வற்றி இடுப்பளவுக்கு அந்த சிலை வெளியில் தெரிந்தபடி இருந்தது. கரையில் இருந்தபடியே பார்த்த சாமியார் அங்கிருந்தே கற்பூரம் காட்டி கன்னத்தில போட்டுக் கொண்டார். அப்போதே அந்த நீர்நிலை ஓரமாக மீன்கள் செத்து மிதந்து கொண்டிருந்தன. சாமியாரோடு வந்திருந்த சிலர்,

"சாமி! இது கிடக்கற தண்ணீரில் வசிக்கிற மீன்கூட செத்துப் போச்சு பாருங்க... இதை முதல்ல எங்கயாவது கண்காணாத இடத்துல கொண்டு போய் போட்டுடணும் சாமி" என்றனர். பதிலுக்கு அவர்களை முறைத்தார் சாமியார்.

சாமியார் வந்து சிலையைப் பார்ப்பது தெரிந்து நடராஜனும் விசாலாட்சியும் மேட்டு நிலத்துக்கே ஓடி வந்து சேர்ந்தனர்.

"சாமி..."

"வா, நடராஜா... அம்பாளை பார்த்து கன்னத்துல போட்டுக்க...."

"கும்பிடச் சொல்றீங்களா சாமி?"

"பின்ன... இவள கும்பிட்டா கோடி தர்றவ.. கெட்ட எண்ணத்தோட வந்தா தெருக்கோடில தள்ளிடுவா..."

"நீங்க சொன்ன மாதிரி இது ஊர்ப் பிரச்னை... ஊரை திருத்த நான் யார் சாமி?"

"அப்ப உன் நிலத்துல, கொண்டு போய் வெச்சு கோயில் கட்டு."

"கோயில் கட்டறதா.. பயமா இருக்கு சாமி... பாருங்க மீனுங்க என்ன பாவம் பண்ணிச்சு?"

"பைத்தியம் மாதிரி பேசாதே... மீனோட சாவுக்கு காரணம் வேற..."

"அது என்ன சாமி?"

"காதை கொண்டா சொல்றேன்..."

- நடராஜன் காதைக் கொடுக்கவும், அவரும் ஏதோ சொன்னார். நடராஜன் முகத்தில் பளீர் வியப்பு. அதன் பின் எதுவும் பேசவில்லை. "சாமி! நான் பஞ்சாயத்துல தீர்ப்பான எங்க இடத்துல கொண்டு போய் வெச்சு கோயில் கட்டறேன் சாமி. இந்த சாமியை நிச்சயம் நான் நல்லபடியா கொண்டாடுவேன்..." என்ற அவரிடம் பலமான மாற்றம்.

உடன் இருந்த சிஷ்யன் அருணாசலம் முகத்திலும் சேரான அதிர்ச்சி.

சாமியார் விலகவும், நடராஜனிடம் போய், "சாமி உங்க காதுல என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

பதிலுக்கு நடராஜனும், "அது தெய்வ ரகசியம் - வெளிய சொன்னா சாமி குத்தமாகிடும்" என்றார்.

அருணாசலம் முகத்தில் திகைப்பு!

இரவு நேரம்!

மழை வரும் போல இருந்தது.

மெல்ல எழுந்திருந்த சந்தியா திறந்து கிடந்த ஜன்னல்களை எல்லாம் சாற்றிவிட்டு வந்தாள்.

வாசற்கதவையும் தாழிட்டுவிட்டு வந்து படுக்கை
யில் விழுந்தாள். காலையில் இருந்தே எதையும் சாப்பி
வில்லை. சாப்பிடவும் தோன்றவில்லை. மனசு வெறுமை
யிலும் ஒளியிழந்தும் இருக்கும்போது சாப்பாட்டில் எப்படி
புத்தி போகும்?

படுக்கையில் விழுந்தவள் எதிரில் சுவரில்
தொங்கியபடி இருந்த அப்பாவின் புகைப்படம் இடவலமாக
ஆடியபடி இருந்தது. பலத்த காற்றுக்கு படம் ஆடுவது
சகஜம்தான் என்றுதான் முதலில் அது சந்தியாவுக்கு
பெரிதாகப்படவில்லை. ஆனால், கதவுகளை அடைத்து
விட்டு வந்த பிறகும் படம் ஆடவும், அதன் சப்தம் கேட்க
வும் சந்தியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எழுந்து சென்று
படத்தை கையால் தொட்டு நிறுத்தினாள்.

நிசப்தம்?

திரும்பி வந்து அமர்ந்தாள்.

திரும்பவும் படம் ஆட ஆரம்பித்தது.

''அப்பாராரா!'' மனதுக்குள் பயத்தோடு கலந்த ஒரு
பெரும் குரல் அவளுக்குள் ஒலிக்கத் தொடங்கியது.

அந்த அறைக்குள் அவளைத் தவிர இன்னொருவர்
வந்துவிட்டது போலவும் பிரமை தட்டியது. அதற்கு ஏற்ப
சீனிவாசன் எப்போதும் அமரும் நாற்காலியும் ஆட ஆரம்
பித்தது. சந்தியாவுக்கு புரிந்துவிட்டது.

''அப்பா!'' என்றாள் சற்று திடமான குரலில்.

நாற்காலி ஒரு வினாடி நின்று ஆமோதித்தது.

''ஐயோ, அப்பா... நீங்கதான் வந்துருக்கீங்களா...
என்னப்பா இப்படிப் பண்ணிட்டீங்க... எங்கள இப்படியா
தவிக்க விட்டுட்டுப் போவீங்க...'' என்று அந்த நாற்காலியில்

அவர் இருப்பதாகவே பாவித்து அழுதபடியே பேசினாள்
சந்தியா. அடுத்த நொடி ''அம்மாடி...'' என்றொரு காற்றுக்
குரல்.

''அப்பா...''

''நடந்தது விபத்து இல்லை...''

''ஐயோ! அப்பா...''

''திட்டமிட்ட கொலை...''

''ஐயோ... நிஜமாவா?''

''அந்த தொண்டிமுத்து ஒரு கொலைகாரன்...''

''இப்ப வந்து பணம் கொடுத்துட்டுப் போன நப
ராப்பா...''

''அவனேதான்.... அவன் கிட்ட எச்சரிக்கையா இரு...''

- காதில் ஒலித்த காற்றுக் குரல் சந்தியாவை
அப்படியே புரட்டிப் போட்டுவிட்டது. அதன்பின் பெரும்
நிசப்தம். சந்தியாவுக்கு அதுவரை தன் காதில் மட்டும்
ஒலித்த குரல் உண்மையில் அப்பாவுடையதுதானா,
இல்லை பிரமையா என்றும் ஒரு கேள்வி எழுப்பி நின்றது.

எழுந்து ஹாலின் விளக்கைப் போட்டாள்.

குளித்தது போல வியர்த்திருந்தாள். மெல்லத் திரும்பி
சுவரில் மாலையோடு தொங்கியபடி இருந்த சீனிவாச
னின் படத்தைப் பார்த்தாள். அதில் இப்போது எந்த ஊசலாட்
டமும் இல்லை.

ஒருவேளை பிரமைதானோ?

அழுத்தமாய் மனதில் கேள்வி மூண்டது.

ஒரு சாவு விழுந்த வீட்டில் முதல் பத்து நாட்களில்
இதுபோல சில சம்பவங்கள் நிகழக்கூடும் என்பதால்தான்

உறவினர்கள் புடை சூழ இருப்பதும், மேளதாளம் முழங்கிட ஆட்டபாட்டங்களை வைப்பதற்கும் ஆத்மாக்கள் அங்கே அலையக் கூடாது என்பதுதான் காரணம் என்றும் சீனிவாசன் எப்போதோ சொன்னது ஞாபகத்தில் வந்தது. தெருவில் ஒரு கிழவி போய்ச் சேர்ந்துவிட்டாள். ஒருபுறம் ஒப்பாரி என்றால் மறுபுறம் கொட்டு சப்தம். காது பிய்ந்து போனது. பொறுக்க முடியாமல் சீனிவாசனிடம், இதெல்லாம் என்னப்பா காட்டுமிராண்டித்தனம் என்று அவரிடம் கேட்ட தற்கு அப்போது அவர் சொன்ன பதில்தான் அது. அதில் சாவு வீட்டை இறந்தவர் ஆத்மா சுற்றிச் சுற்றி வரும் என்று சொன்னது மட்டும் பகுத்தறிவுச் சிந்தனையை மீறிக் கொண்டு சந்தியா மனதில் தங்கிவிட்டது.

அது இப்போது அவள் மனதில் முண்டிக்கொண்டு நின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் தன் காதில் ஒலித்த குரல் அப்பாவின் குரலாகத்தான் இருக்க வேண்டும் என்றும் மனது நம்பப் பார்த்தது.

அப்போதுதான் தான் மட்டும் தனியாக இருப்பதும் தன் எண்ணத்தை பகிர்ந்துகொள்ளக்கூட ஒருவர் இல்லாத சோகமும் நெஞ்சை அழுத்தியது.

பெரியம்மா, தினேஷிடம் தான் அவ்வளவு கடுமை யாக பேசியிருக்க தேவையில்லையோ என்றும் தோன்றிய போது வாசற்கதவு தட்டப்படும் சப்தம்.

'யாரோ வந்திருக்கிறார்கள்... யாராக இருக்கும்?' - கேள்வியோடு போய் கதவைத் திறந்தாள்.

வெளியே தோளில் தொங்கும் தோல் பை சகிதம் ஒரு இளைஞன். வாசல் விளக்கை போடவும்தான் அவன் முகம் தெரிந்தது. சந்தியாவின் அத்தை மகன் கண்ணன்!

''கண்ணா! நீயா?''

''நானேதான்... என்ன சந்தியா நீ மட்டும்தான் இருக் கிறாயா - யாரையும் காணோம்?''

''உள்ளே வா... உள்ள போய் பேசுவோம்.. இப்ப தான், ஐயோ தனியா இருக்கோமேன்னு நினைச்சேன். நல்லவேளை நீ வந்துட்டே...'' என்று திரும்பி நடந்தபடியே பேசினாள்.

அவனும் அவளை தொடர்ந்தான்.

ஹாலில் இருந்த மேஜை மேல் தன் பேக்கை வைத்தான். திரும்பி சுவரில் தெரிந்த சீனிவாசனின் படத்தை பார்த்தான். நகர்ந்து அதன் அருகில் போய் நின்று படத்தையே வெறித்துப் பார்த்தான். கண்ணிரண்டும் கண்ணீர்த் துளிகளை உருட்டி விடத் தொடங்கியது. அது சந்தியாவுக்கும் சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

கண்ணன் அவளது அத்தை மகன்.

அத்தை காதல் திருமணம் செய்து கொண்டவள்.

அதனால் அத்தையை சீனிவாசன் குடும்பம் ஒதுக்கி வைத்துவிட்டது. எப்போதாவது ஏதாவது பொது நிகழ்வில் பார்த்துக் கொள்வதோடு சரி. அப்போதுகூட பேச்சு கிடை யாது. ஆனால், விதிவசத்தால் அத்தை மகன் கண்ணன், சீனிவாசனின் கல்லூரியிலேயே அவர் வகுப்பு மாணவ னாகவே படிக்க நேர்ந்ததுதான் விந்தை. அப்போதுகூட மாமா என்கிற தனது உறவுமுறையை காட்டாமல் கடுமை யாகவே இருந்துவிட்டார் சீனிவாசன். கண்ணன் முதல் மாணவனாக தேர்வு பெற்ற பிறகு அதற்கான பேட்டி களின்போது தன் வெற்றிக்கு புரொபசர் சீனிவாசன்தான் காரணம் என்று சொன்ன பிறகே சீனிவாசனுக்கும் அவன் மேல் ஒரு ஈடுபாடும் பாசமும் ஏற்படத் தொடங்கியது.

ஒரு நாள் வீட்டிற்கே அழைத்து கண்ணன் யார் என்ற உண்மையை மனைவி மல்லிகா, மகள் சந்தியா முன்

போட்டு உடைத்த பிறகே அவர்களுக்கும் தெரியவந்தது. ஆனாலும் கண்ணனின் தாயைச் சந்திக்கவோ பேசவோ அவர் தயாராக இல்லை. கண்ணனும் நல்ல வேலை கிடைத்து கேரளாவில் உள்ள எர்ணாகுளத்தில் பணியில் சேர்ந்துவிட்டான்.

அவன்தான் இப்போது வந்திருக்கிறான்.

கண்ணனும் கண்ணீரைத் துடைத்தபடி திரும்பி சந்தியாவை ஏறிட்டான். பின் மெல்லிய குரலில்...

''மாமாவோட சாவுக்கு என் வீட்ல இருந்து யாராவது வந்தாங்களா சந்தியா?'' என்று ஆரம்பித்தான்.

'''இல்ல கண்ணன். ஒருவேளை வந்துருக்கலாம். நான்தான் உன் வீட்ல யாரையும் பார்த்ததே இல்லையே. அதனால எனக்கு அடையாளம் தெரியாமலும் போயிருக்கலாம். அம்மாவும் ஆஸ்பத்திரில இருக்கிறதால எனக்கு எடுத்துச் சொல்லவும் யாரும் இல்லை.''

''போகட்டும்... நான் வந்துருக்கேன். நீ தைரியமா இரு சந்தியா.''

''உன் ஆறுதலுக்கு நன்றி கண்ணன். ஆமா, உனக்கு அப்பாவோட இறப்பு எப்படித் தெரிய வந்தது. நீ இருக்கிறது எர்ணாகுளமாச்சே?''

''உண்மைதான்... இப்ப மணி என்ன?'' - கேட்டுவிட்டு ஹாலில் உள்ள கடிகாரத்தை பார்த்தான். அதில் மணி 11-ஐ தொட்டிருந்தது.

''இன்னிக்கு பகல் 11 மணிக்கு நான் எங்க ஆபீஸ்ல ட்யூட்டியில் இருந்தேன். நேத்து ராத்திரியும் சரியா தூக்கமில்லை. அதிகாலை 4 மணி வரை கம்ப்யூட்டரோட மல்லுகட்ட வேண்டியதா போச்சு. அதனால அந்த 11 மணி வேளைல அசந்து தூங்கிட்டேன். ஒரு பத்து நிமிஷம்தான்

கண் அசந்துருப்பேன். அதுக்குள்ள ஒரு கனவு உன் அப்பாவும் அம்மாவும் ஒரு கார்ல போய்க்கிட்டிருக்கிற மாதிரியும் அது விபத்துக்குள்ளாகற மாதிரியும்... பதைச்சு போனப்போ தூக்கம் கலைஞ்சது. அப்பதான் அம்மாகிட்ட இருந்து போன் வந்தது, நிஜமாலுமே விபத்துல மாமாவும் அத்தையும் இறந்துட்டாங்கன்னு. என்னால நம்பவே முடியல. ஒரு நிமிஷம் நான் அப்படியே ஸ்தம்பிச்சு உக்காந்துட்டேன். அம்மா போன்லயே அழுதாங்க. துக்கம் கேட்க உங்க வீட்டுக்குப் போகக்கூடாதுன்னு என் அப்பா தடுக்கறதாகவும், அதை தன்னால மீற முடியுமான்னு தெரியலன்னும் சொல்லி அழுதாங்க. விடுங்கம்மா. நான் போறேன்னு சொல்லி உடனே லீவு போட்டுட்டு ஒரு டாக்ஸி பிடிச்சு புறப்பட்டு வர்றேன் சந்தியா...''

- கண்ணன் சொன்ன விஷயங்கள் சந்தியாவை சிலிர்ப்பில் ஆழ்த்தின.

''கண்ணன்! அப்பா இறந்ததும் விபத்துலதான். உனக்கு அதே மாதிரி கனவு வந்தது உண்மைல ஒரு ஆச்சரியமான விஷயம். இது எப்படி? இங்க ஒரு அஞ்சு நிமிஷம் முந்தி எனக்கும் சில அமானுஷ்ய அனுபவங்கள். அப்பா இந்த அறைக்குள்ள அதோ அந்த நாற்காலி உக்கார்ந்துகிட்டு எப்படி என்னைப் பார்த்து பேசுவாரோ அதே மாதிரி அவர் என்னைப் பார்த்து பேசறாரு. நடந்தது விபத்து இல்லம்மா... கொலைன்னும் சொல்றாரு! இதை பிரமைன்னு சொல்றதா, இல்லை நிஜம்தானா... பெரிய குழப்பமா இருக்கு எனக்கு. ஐயோ! இந்த விஷயத்தை சொல்லி கருத்து கேட்ககூட யாருமில்லாம இருக்கே னேங்கற மாதிரி நினைச்சப்பதான் நீ வந்து கதவை தட்டுனே...''

- சந்தியா காதோரமாய் வியர்வை ஒழுக சொன்னதைக் கேட்டு கண்ணனின் முகத்தில் பலத்த மாற்றங்கள்.

''என்ன கண்ணன்... ஏன் உன் முகம் ஒரு மாதிரி ஆகுது.''

''சந்தியா... நான் கார்ல வரும்போது என்னை மீறி கண்ணசந்துட்டேன். அப்பவும் உன் அப்பா கனவுல வந்தாரு. நீ சொன்னியே கொலைன்னு, அதைத்தான் அவரும் சொன்னாரு...''

- கண்ணன் சொன்ன மறுநொடி சந்தியாவிடம் இமைப்பது நின்றுபோனது. விழியிரண்டும் குத்திக் கொண்டு விட்டன.

கச்சிதமான அந்த நொடிகளில் சுவரில் தொங்கிய படத்திடமும் திரும்பவும் ஊசலாட்டம்!

இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

'சந்தேகப்படாதீர்கள்... நான்தான். நானேதான்' என்று சொல்வதுபோல் இருந்தது அந்த ஊசலாட்டம்.

''கண்ணன்...''

''சந்தியா! மாமாவேதான்...''

''இதை என்னால ஜீரணிக்க முடியல கண்ணன். அப்பாவை கொன்னு அம்மாவையும் படுத்த படுக்கையாக் கிட்ட அந்த கறுப்பு குண்டனை இப்பவே என் கையால குத்திக் கொல்லணும் போல இருக்கு...''

- சந்தியா உணர்ச்சிவசப்பட்டாள்.

''யார் அவன் சந்தியா... அவன் பேர் என்ன?''

''தொண்டிமுத்து... எங்களுக்குன்னு இருக்கிற மூணு ஏக்கரா இடத்துக்காக அப்பாவைக் கொல்ற அளவுக் குப் போய்ட்டான்.''

''கொல்ற அளவுக்குன்னா... அப்பா அவனுக்கு இடத்தை கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாரா -இல்லை ஏமாத்தி எழுதி வாங்கப் பார்த்தானா?''

''அப்பா விக்க முடியாதுன்னுதான் சொல்லியிருக் கணும். ஏன்னா அது நம்ம குடும்ப இடம், பரம்பரை சொத்து, வேலி போட்டு உள்ள ஒரு ஆடுமாடு கூட நுழைய முடியாதபடி அப்பா பாதுகாத்துட்டு வந்தாரு.. ஏதாவது தோட்டம் போடலாமேப்பான்னு சொல்வோம். இல்லம்மா, அங்க அதையும் செய்யக்கூடாது. அது அப்படியே இருக் கறதுதான் சரின்னு சொல்வார். ஏன்னு கேட்டா அதெல் லாம் உனக்கு எதுக்குன்னு சொல்லுவார்..''

''அப்ப அந்த இடத்துக்கு பின்னால ஏதோ ரகசியம் இருக்கு. அதுதான் தொண்டிமுத்துவை விபத்துங்கற பேர்ல கொலை வரை செய்ய வெச்சிருக்கு.''

''கூட்டிக்கழிச்சா அப்படிதான் வருது. நடந்தது கொலைன்னு சொன்னா அப்பா இந்த ரகசியங்களையும் அவிழ்த்தாத்தான் நம்மளால அடுத்து என்ன செய்யணுமோ அதை செய்ய முடியும்.''

- சந்தியா சரியான முடிவுக்குத்தான் வந்தாள். அதை ஆமோதிப்பது போல சீனிவாசனின் டேபிள் மேல் இருந்த பேனா யாராலோ தள்ளப்பட்டது போல கீழே விழுந்து உருண்டபடியே கண்ணன் காலடியில் வந்து நின்றது.

''சந்தியா... இந்த பேனா?''

''அப்பாவோட ஃபேவரைட் பேனா...''

''அப்ப இது இப்ப என் காலடிக்கு வந்துருக்குன்னா அப்பாதான் இதை எடுக்கச் சொல்றார். அவர் நம் எல்லா கேள்விக்கும் பதில் சொல்ல தயாரா இருக்கார் போல இருக்கு...''

''எனக்கும் அப்படித்தான் தோணுது - கமான் கண்ணன்...''

- சந்தியாவே குனிந்து பேனாவை அவன் வசம் தந்தாள்.

அவனும் அதை திறந்து எழுதத் தயார் நிலையில் வைத்துக் கொண்டு மேஜை முன் அமர்ந்து ஒரு பேட் நோட்டையும் திறந்து வைத்துக் கொண்டான்.

9

நடராஜன் அவரது சொத்தான குடும்ப நிதித்தில் கொத்தனார் மேஸ்திரியைக் கொண்டு ஜேஷ்டாதேவிக்கு கோயில் எழுப்ப தயாராகிவிட்ட விஷயம் ஊர் முழுக்க பரவியது. இந்த கோயில் கட்டும் முயற்சிக்கு குன்னக்குடி மலைச்சாமியாரும் ஒரு காரணம் என்கிற கருத்தும் சேர்ந்து கொண்டுவிட்டது. சிலருக்கு பயமாக இருந்தது. சிலருக்கு குழப்பமாக இருந்தது. ஜேஷ்டாதேவியை எங்குமே யாருமே வழிபடாதபோது நாம் மட்டும் வழிபடுவது சரி யில்லை என்றும் பேசத் தொடங்கினர். இறுதியாக ஊருக்குள் கோயில் கட்டக்கூடாது... வெளியே வேறு எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும் என்று முடிவு செய்து அதை ஊர் மிராசுதார் பொன்னம்பலம் மூலம் நடராஜனுக்கும் சொல்லி அனுப்பினர்.

மிராசு பொன்னம்பலம், நடராஜன் வீட்டுக்கே வந்து, ''வேண்டாம் நடராசா... சாமியார் சொன்னாருங்கறதுக் காக நீ களத்துல இறங்குறது சரியா படலை. அதுக்கு பேசாம அந்த சாமியார்கிட்டயே அந்த சாமியைக் கொடுத்து அவரை பூஜை பண்ணச் சொல்ல வேண்டி யதுதானே?'' என்றும் கேட்டார். விஷயம் சாமியார் காதுக்கும் போனது. அவரும் சிரித்துக் கொண்டே...

''பைத்தியக்காரங்களா. நான் எனக்குன்னு ஒரு பாதை மாறாட்டம் இல்லாம போய்க்கிட்டிருக்கேன். நான் ஒரு சிவத்தொண்டன். அந்த சிவத்தை தவிர யாரையும் நான் வணங்கத் தேவையில்லை. என்னோட துறவறத்துல வேற எதுக்கும் இடம் இல்லை. அதனால நான் மத்த வழிபாட்டு முறைகளையோ, தெய்வங்களையோ குறை சொல்லலை. ஒரு காலேஜில பல பாடம் இருந்தாலும் ஒரு பாடத்தைதான் ஒருத்தன் எடுத்துப் படிக்க முடியும். அப்படித் தான் நானும். இதனால மத்த பாடங்கள் மட்டம்னு அர்த்த மில்லை. இங்க ஜேஷ்டாதேவிங்கறவளும் ஒரு பாடம். ஆனா, கஷ்டமான பாடம். இவ மட்டும் நாம சுத்தபத்தமா, தீட்டு இல்லாம இருந்தா மட்டும்தான் எதுவும் செய்ய மாட்டா. அப்படி எல்லாம் இருக்க முடியாதுன்னு நினைக் கிறதாதான் எதிர்ப்பும் அதிகமா இருக்கு.

எப்ப கும்புடறதுக்கு ஆசைப்படாம பயப்பட ஆரம்பிச் சிட்டீங்களோ அப்பவே திரும்ப அதை புதைச்சுடறதுதான் சரி'' என்றவர், நடராஜனை கூப்பிட்டு, ''கோயில் வேண் டாம். புதைத்துவிடு'' என்று கூறிவிட்டார். எல்லோரும் பார்க்க, அப்படி கூறியவர் நடராஜனை தனியே அழைத்து காதில் ஏதோ கூறினார். நடராஜன் முகமும் அதன் பின் பெரிதாக மலர்ந்து சிரித்தது!

இந்த முறையும் சாமியாரின் சீடனான அருணாசலம் 'சாமி என்ன சொன்னார்?' என்று நடராஜனிடம் கேட்க, 'அது தெய்வ ரகசியம்... உங்களுக்கு தெரிஞ்சிக்கணும்னா சாமிகிட்டயே கேட்டுக்குங்க' என்று கூறிவிட்டார் நடராஜன்.

அருணாசலத்துக்கு அந்த பதில் எரிச்சலைதான் அளித்தது!

★

மேஜை முன் கண்ணன்.

கடிகார முள்ளின் வினாடி முள் சப்தம் மட்டும் கேட்கும் இரவுப் பொழுது. சந்தியா அவனையே பார்த்தாள். அவன் கையில் எழுதத் தயார் நிலையில் பேனா.

''கண்ணன்... இப்ப இந்த பேனாவை உன் மூலமா பயன்படுத்தி நம் கேள்விகளுக்கு அப்பா பதில் சொல் வாரா?''

''அப்படிதான் நினைக்கறேன் சந்தியா... இதெல் லாமே உனக்கும் சரி, எனக்கும் சரி புது அனுபவம்தானே?''

''நிச்சயமா... வெளிய சொன்னா யாரும் நம்ப மாட் டாங்க.''

''ஏன் சொல்லணும் சந்தியா... இது நம்ம அவஸ்தை. இது நமக்கான வழிகாட்டல்! எவ்வளவு பாசம் இருந்தா உன் அப்பா இறந்து ஆத்மாவாயிட்ட நிலைலயும் இப்படி வந்து வழிகாட்டுவார்னு யோசிச்சுப் பார்...'''

''உண்மைதான்... அப்பாவோட அன்புக்கு ஈடு இணை இந்த உலகத்துல எதுவுமே இல்லை...'' - சொல்லும் போதே பொங்கி வந்தது அழுகை. அந்த நொடி கண்ண னிடமும் ஒரு மாற்றம். அவன் உடம்புக்குள் யாரோ புகுந்து கொண்டுவிட்டது போல ஒரு சிலிர்ப்பு.

அவன் கைப் பேனா விறுவிறுவென்று எழுதத் தொடங்கியது.

'என் அன்புள்ள சந்தியா... கண்ணன்!

என் வருகையைப் புரிந்துகொண்டு பயப்படாமல் பேனாவை எடுத்துக் கொண்டு அமர்ந்ததற்காக முதலில் உங்களைப் பாராட்டுகிறேன்... இறப்புக்கு பிறகு ஒரு மனித உயிர் என்னாகிறது என்ற கேள்வி எனக்கு உண்டு. அதற்கு

பல பதில்களை நான் படித்திருக்கிறேன். தெள்ளத் தெளி வாக ஒரு பதிலை ஒருவர்கூட சொன்னதில்லை. அப்படியே சொல்லியிருந்தாலும் அதுதான் சரி என்பதை இறந்து பார்த்த பிறகுதானே ஒருவரால் உணர முடியும்?

என் அருமைச் செல்வங்களே...

அப்போதேல்லாம் நான் மனதுக்குள் ஆழமான ஒரு முடிவுக்கும் வந்திருக்கிறேன், நாமாவது அந்த விடையைக் கண்டுபிடித்து இந்த உலகுக்கும் சொல்லிவிட வேண்டும் என்று... ஒரு எதிர்பாராத விபத்தால் இன்று நானும் அலை கின்ற ஆத்மாவாக ஆகிவிட்ட நிலையில் எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உடம்பில்லாத நிலையில் எண்ணங்களை அலைவரிசை தொகுப்பாக வைத்துக் கொண்டு அதிலிருந்து பேசுவதும் எழுதுவதும் எனக்கே புது அனுபவம்.

நான் இருக்கிறேனா இல்லையா என்பதிலேயே என் எண்ணங்களில் ஒரு குழப்பம் நிலவுகிறது. மிதப்பது போல வும் இருக்கிறது. பறப்பது போலவும் இருக்கிறது. இப்படி சொல்வதெல்லாம்கூட தவறுதான். என் நிலையை சொல்ல எந்த மொழியிலும் வார்த்தைகள் இல்லை. நான் வார்த்தைப் படுத்துவதெல்லாம்கூட தவறனாவையே...

இதனால்தான் சித்தர் பெருமக்கள் 'கண்டவர் விண் டிலர், விண்டவர் கண்டிலர்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது, பார்த்தவன் சொல்வதில்லை. சொல்பவன் பார்க்க வில்லை என்பது அதன் பொருள்.

இப்போது என் ஆத்மாவின் நிலை பற்றிய விளக் கங்கள் பெரிது இல்லை. நடந்து முடிந்த விபத்து என்னும் கொலை பற்றியும் அதற்கான காரணங்களையும் முதலில் கூறிவிடுகிறேன்.

என் குடும்ப சொத்தான மூன்று ஏக்கர் இடம்தான் எல்லாவற்றுக்கும் ஆரம்பம்... அந்த இடம் சாதாரணமான இடம் அல்ல, அதனுள் நம் குடும்பச் சொத்தான ஒரு சாமி சிலை புதைந்துள்ளது. அது சாதாரண சிலை அல்ல! நவபாஷாணங்களால் செய்யப்பட்ட ஜேஷ்டாதேவி சிலை அது. அதற்கு ரசாயன குணம் உண்டு. அதை முறைப்படி கர்ப்பக் கிரகத்தில் வைத்து பூஜை செய்து வந்தால் எல்லா நல்லதும் நடக்கும். இல்லாவிட்டால் எதிர்விளைவுகள் ஏற்படும். ஜேஷ்டாதேவி என்பவள் தூர இருந்து காப்பாற்றுபவள். அவளை முறையாக வழிபட வேண்டும். அதில் ஒரு சிறு பிழை வந்தாலும் ஆபத்துதான். அப்படிதான் ஜேஷ்டாதேவி சிலையை என் அப்பாவான நடராஜன் கண்டெடுத்த போதும் நடந்தது. ஊரே வறண்டு போய் சில காலமும், வெள்ளக்காடாய் சில காலமும் இருந்தது. ஜேஷ்டாதேவி சிலை ஒரு ஊரில் எங்கே எப்படி பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பது முதல் ஆகம சாஸ்திரத்தில் சொல்லப் பட்டுள்ளது. எட்டு திசைகளில் கன்னி மூலை எனப்படும் தென்மெற்கு மூலையில் அவள் கோயில் கொள்ளும்போது ஊரே நல்ல மழை வளத்தால் செழிக்கும். அதுவே ஈசான்யத் தில் அமைந்தால் ஊரே வறண்டு போகும். அன்றும் இதனால் பிரச்னை வந்தது. இந்த ஜேஷ்டாதேவி சிலை எப்படி இந்த விசாலபுரத்துக்குள் நம் வீட்டுக்குள் வந்தது என்பது தெரியாது. அதை தெரிந்துகொள்ள ஆசைப்பட் டால் பல தலைமுறைகளை கடந்து போக வேண்டியிருக் கலாம். என் அப்பாவும் அந்த ஆராய்ச்சியில் இறங்காமல் சிலையை வைத்து கும்பிடத்தான் விரும்பினார். ஆனால், பயந்து போன ஊரின் எதிர்ப்பால் அதை அந்த மூன்று ஏக்கர் நிலத்தில் கன்னி மூலையில் புதைத்துவிட்டார்.

அந்த நிலத்துக்குள்ளே தெய்வம் இருப்பதால் அங்கே யாரும் போய் எச்சில் உமிழவோ, சிறுநீர் கழிக்கவோ கூடாது. அது ஜேஷ்டாதேவிக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தும் என்பதால்தான் அங்கே எந்த தோட்டமும் போடவில்லை. தோட்டம் போடும்போது அதில் வேலை செய்பவர்கள் அசுத்தம் செய்யலாம் அல்லவா?

எனவேதான் அதை வேலி போட்டு காபந்து செய்து வந்தோம். அந்த நிலத்துக்குள் ஜேஷ்டாதேவி சிலை புதைக் கப்பட்ட விஷயம் 60 வருடத்துக்கு முன்பிருந்த என் அப்பாவின் வயதுள்ள சிலருக்கு மட்டும் தெரியும். அதன் பின் குன்னக்குடி கோயிலில் தவம் செய்யும் சாமியாருக்கு தெரியும். ஆனால், யாருக்கும் அது நவபாஷாண விக்கிரகம் என்றோ அதற்கு ரசாயன குணங்கள் இருப்பதோ தெரி யாது. அதுதான் அந்த சிலை வெளியே இருக்கும் காற்றில் கலந்து வினைச் செயல் புரிந்து மழை, வெயில் மற்றும் ஊருக்குள் பரவிடும் பலவித நோய்களுக்கும் காரண மாகிறது. அதுதான் ஊரில் எல்லாரும் செல்வ வளத்தோடு நோயின்றி சந்தோஷமாக வாழவும் காரணமாகின்றது.

மின் டிரான்ஸ்ஃபார்மரை எச்சரிக்கையாக கையாள்வது போல கையாள வேண்டும். ஆனால், கையாளத் தெரியாத பயம்தான் அந்த தேவி சிலையைப் புதைந்து போகச் செய்து விட்டது. இந்த உண்மையை மிக தாமதமாக சாமியாரின் டைரியைப் படித்து தெரிந்துகொண்ட அவரது சிஷ்யரான அருணாசலம்தான் நான் இன்று கொலையாகி ஆவியாக அலைவதற்கு காரணம். இவர்தான் தொண்டிமுத்துவை ஏவிவிட்டு இடத்தை வாங்க முயற்சி செய்கிறார். இன்று நவபாஷாண சிலையின் மதிப்பு பல நூறு கோடிகள்! அவ்வளவு மதிப்புள்ள, வணங்கவேண்டிய சிலையைப் புதைத்தே வைத்திருப்பதால் அதற்கு காரணமாக நம் குடும்பமும் கஷ்டமே பட்டுள்ளது. என் அப்பா அம்மாவும்

நல்லவிதமாய் சாகவில்லை. அப்பாவை வயலில் பாம்பு கடித்தது. அம்மாவை தெருநாய் கடித்தது. என்னை ஒரு மனித மிருகம் கொன்றே விட்டது. இனியும் அந்த தவறு நிகழக்கூடாது.

கண்ணா.... நீ என் சகோதரி மகன். சந்தியாவுக்கு முறை உள்ளவன். என் மகளை நீ திருமணம் செய்துகொள். இதனால் பிரிந்த குடும்பம் ஒன்றுசேரட்டும். நீங்கள் இருவரும் சேர்ந்து இன்று அந்த நிலத்தில் உள்ள சிலையை தோண்டி எடுத்து ஊரில் உள்ள சிவன் கோயில் கிணற்றில் போட்டுவிடவும். இதனால் கோயில் தீர்த்தம் மருந்தாகும். கோயில் தீர்த்தமும் அபிஷேகத்துக்கு மட்டுமே பயன் படுவதால் சிலையும் நித்ய அபிஷேகத்தில் இருக்கும். உங்களால் வெளிப்படையாக அதை வைத்து வழிபாடு செய்ய முடியாது. பேராசை உள்ளவர்கள் சிலையை அபகரிக்க வந்து அதனால் தீயவிளைவுகள் ஏற்படும். எனவே, சிலை கோயில் கிணற்றில் இருப்பதே நல்லது. இன்று இரவே எப்பாடுபட்டாவது அதை செய்துவிடுங்கள்.

கோயிலுக்குள் நீங்கள் நுழைய தோதாக அதன் கதவுகள் திறந்திருக்கும். காவலாளியை எழுப்பி கதவை திறக்க வைப்பது என் பொறுப்பு.

இந்த கடமையை நல்லவிதமாக முடித்து எதையும் காட்டிக் கொள்ளாமல் இடத்தையும் அந்த தொண்டிமுத்து வுக்கு விற்றுவிடுங்கள். அவனையும் அவனுக்கு துணை போன சாமியார், அழகப்பன், லட்சுமணன் என்னும் நான்கு பேரையும் நான் பார்த்துக் கொள்கிறேன்.

ஆஸ்பத்திரியில் இருக்கும் உன் தாயும் விரைவில் குணமடைவாள். என் ஆத்ம சக்தியால் நான் பர உலகை அடையும் வரை உங்களுக்கு துணையாக இருந்து வழி காட்டுவேன். கவலை வேண்டாம். ஆசிகள்.

அன்புள்ள அப்பா,
சீனிவாசன்.'

பேச வேண்டிய அவ்வளவையும் எழுதி முடித்த நிலையில் கண்ணன் கை சட்டென்று நின்றுபோனது. அவனும் மேஜை மேல் மரம் போல் விழுந்தான். எல்லாம் சில வினாடிகள்தான். பின் நிமிர்ந்தவன், எழுதியதை படித்தான். கண்ணீருக்கு நடுவில் சந்தியாவும் படித்தாள். படித்துவிட்டு விசும்பி அழுதாள். கண்ணன் கண்ணீரை துடைத்துவிட்டான்.

''சந்தியா! கெட்டதுலயும் ஒரு நல்லதா உன் அப்பா நம்ம கூட இந்த கடிதம் மூலமா பேசியிருக்கார். இது எவ்வளவு பெரிய விஷயம்? யாருக்கு கிடைக்கும் இப்படி ஒரு வாய்ப்பு? மனசை தேத்திக்கோ. புறப்படு... உன் அப்பா சொன்னபடி அந்த சிலையைத் தூக்கி முதல்ல கிணத்துல போடுவோம். இந்த கொலைக்கு காரணமான அந்த தொண்டிமுத்துகிட்டயே இடத்தை வித்து பணத்தையும் வாங்குவோம். அது அந்த ஆள் கட்டப்போற அபராதம். மத்தபடி உன் அப்பா அந்த நபரை எப்படித் தண்டிக் கணுமோ அப்படித் தண்டிப்பார்...'' என்றான் கண்ணன்.

சந்தியாவும் மனதை தேற்றிக் கொண்டு தயாரானாள்.

10

ஒரு பௌர்ணமி இரவில் தன் நிலத்திலேயே குழியைத் தோண்டி சிலையைப் புதைத்த நடராஜன். அப்போதே புதைத்த நிலத்தை சுற்றி முள்வேலியைப் போட்டுவிட்டார். ஒருவழியாக பிரச்னை அடங்கிப்போனது. சிலர் சில காலம் பேசினார்கள். அப்புறம் அந்த பேச்சுக்கே இடம் இல்லை. துஷ்ட சக்தியாக கருதியதால் அந்த இடத்துப்

பக்கம் ஆடு மாடுகளைகூட மேய்ச்சலுக்காக யாரும் விடாத படி பார்த்துக் கொண்டனர்.

ஆனாலும் நடராஜனுக்கு தான் ஒரு கோழை போல நடந்து கொவடுவிட்டதாகத்தான் தோன்றியது. விசாலாட்சியும் கும்புட வேண்டிய சாமியை இப்படி பொணம் மாதிரி புதைச்சுட்டோமே என்று குமைந்தாள்.

நடராஜன் தன் உளைச்சலை எல்லாம் ஒரு டைரியில் எழுதி வைக்க தவறவில்லை. ஒரு நாள் வயல் வரப்பில் நடந்து வருகையில் பாம்பு கடித்து அங்கேயே நுரை கக்கி உயிரை விட்டார். சில மாதங்களிலேயே விசாலாட்சியை தெருநாய் ஒன்று வெறிபிடித்த நிலையில் கடித்து விட்டது. அதனால் ரேபிஸ் நோய் வந்து நாய் போல குரைத்துக் குரைத்தே செத்துப்போனாள் விசாலம். ஊரில் உள்ளவர்கள் அதற்கும் சிலைதான் காரணம் என்று பேசிக் கொண்டனர்.

அது ஒரு நவபாஷாண சிலை என்கிற உண்மை குன்னக்குடி மலைச்சாமியாருக்கும், செத்துப்போன நடராஜனுக்கும் தவிர யாருக்குமே தெரியாது. பின்னாளில் அப்பாவின் டைரியைப் பார்த்து சீனிவாசன் தெரிந்து கொண்டார். இங்கே சீனிவாசன் தெரிந்து கொண்டது போலவே அங்கே சாமியார் முக்தி அடையவும், பொறுப்புக்கு வந்த சீடன் அருணாசலமும் சாமியார் டைரியைப் பார்த்து ஊரில் நிலத்துக்குள் புதைந்து கிடப்பது விலை மதிப்பில்லாத நவபாஷாணம் என்பதை தெரிந்து கொண்டார்.

அதைக் கொண்டு சாகசங்கள் செய்வதும், ஒரு ஊரையே அழிப்பதும் அதைப் பயன்படுத்தும் விதத்தை பொறுத்து என்பது தெரிய வரவும், அதை அடைய முயற்சி செய்தார். அந்த முயற்சியை நேராக செய்யாமல் தொண்டி முத்து மூலமாக செய்ததுதான் விபத்து என்கிற பெயரில் கொலை வரை போய்விட்டது.

✱

இரவு மணி 12.

வீட்டுக் கடிகாரத்தின் பெண்டுலத்தின் சப்தம் துல்லியமாக கேட்டு அடங்கியது. சந்தியா கதவை திறந்து கொண்டு வெளியில் வந்து பார்த்தாள். அழுதுவடிந்தபடி தெருவிளக்குதான் எரிந்து கொண்டிருக்கும். அன்று அது கூட அணைந்திருந்தது.

இரவுக்கே உரிய சில் வண்டுகளின் சப்தம்.

இருவரும் கைவசம் ஒரு டார்ச்லைட் மற்றும் கடப்பாரை, மண்வெட்டி சகிதம் தெருவில் இறங்கினர். சில அடி தூரம் வரை நடந்த கண்ணன் திரும்பிவிட்டு வாசலை பார்த்தான். புரொபசர் சீனிவாசன் பயன்படுத்திய மொபெட் வாகனம் நின்றுகொண்டிருந்தது.

சந்தியாவும் புரிந்துகொண்டு கேட்டாள்.

''என்ன கண்ணன்... வண்டில போகலாமா?''

''ஆமாம் சந்தியா... அந்த சிலையை நம்ம இரண்டு பேரால தூக்கிட்டு நடக்க முடியுமோ முடியாதோ?''

''அப்ப சரி, வண்டியை எடுங்க'' என்றவள், உள்ளே போய் சாவியை எடுத்து வந்து தந்தாள்.

கண்ணன் மிக விவேகமாய் வண்டியை ஸ்டார்ட் செய்யாமல் தள்ளிக் கொண்டு தெருவில் நடந்தான். சிறிது தூரம் சென்றபின்தான் ஸ்டார்ட் செய்தான்.

சந்தியாவும் பின்னால் தொற்றிக் கொண்டாள்.

அவளது ஒரு கையில் மண்வெட்டி இருந்தது.

யாராவது பார்த்தால் விபரீதமாகத்தான் நினைப்பார்கள். இருந்தாலும் அப்பாவின் ஆத்மா நிச்சயம் உடன் துணை வரும் என்ற நம்பிக்கை வழி நடத்தியது. ஒரு இடத்தில் தெருநாய் ஒன்று இருந்து பெரிதாய் குரைக்க ஆரம்பித்தது. அதனால் தெருவே விழித்துக் கொண்டுவிடுமோ என்றுகூட சந்தியாவுக்கு பயம் வந்துவிட்டது. திடீரென்று

அந்த தெருநாய் எதிர் திசையில் தலை தெறிக்க ஓட ஆரம்
பித்தது.

''என்ன கண்ணன் இது... கத்துன நாய் எதிர் திசை
ஓடுது.''

''அதை உன் அப்பா நமக்கு தொந்தரவு இல்லாதபடி
இழுத்துக்கிட்டுப் போறார் சந்தியா...''

''அப்படின்னா நம்ம கூடவே அப்பா வந்தாரா?''

''நாய்களுக்கு ஆவிகளைப் பார்க்கற ஆற்றல் உண்
டுன்னு படிச்சதில்லையா?''

– கண்ணனின் விளக்கம் தெருவென்றும் பாராமல்
சந்தியாவை திரும்பவும் அழவிட்டது.

''சந்தியா! இது உணர்ச்சிவசப்பட வேண்டிய நே
மில்ல... அப்பா சொன்ன ரகசியத்தை செயல்படுத்த
வேண்டிய நேரம். கமான்...'' என்று அவளைத் தேற்றி
அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அவர்களின் அந்த மூன்று ஏக்கர் இடம் அந்த இரவின்
பிடியில் கறுப்பாய் மைபூசிக் கொண்டது போல கிடந்தது.
அவ்வளவு பெரிய இடத்தில் எங்கே அந்த சிலை புதைந்
திருக்கிறது என்று கண்டுபிடிப்பது?

கண்ணன் வேலித்தடுப்புக்கு முன்னால் மொபெட்டை
நிறுத்திவிட்டு தீவிரமாக யோசித்தபோது வானில் மழை
வருவதற்கான அறிகுறிகள் !

மின்னல் ஒன்று டிராகன் உடம்பு போல நெளிசல்
எடுத்து வானில் ஓடியது. கீழே அதன் வெளிச்சத்தில் பளிச்
சென்று இடமும் தெரிந்தது.

அதில் எந்த இடம்?

சந்தியாவுக்கும் குழப்பமாக இருந்தது.

''கண்ணன்... இதுல அந்த இடம் எதுன்னு தெரியல
தானே?''

''ஆமாம் சந்தியா... ஆனாலும் இவ்வளவு தூரம்
வழிகாட்டுன உங்கப்பா இங்கதானா வழிகாட்ட மாட்டார்?''
– கண்ணன் நம்பிக்கையோடு சொன்னது வீண்போக
வில்லை.

தெருவில் வந்தபோது எதிர்திசையில் குரைத்துக்
கொண்டே ஓடிய நாய் அங்கேயும் குரைத்தபடி வந்தது.
இருவருக்கும் அதிர்ச்சி. சிலமுறை மட்டுமே குரைத்த அந்த
நாய் வேலியைத் தாண்டிக் குதித்து நிலத்துக்குள் ஓடியது.
மின்னல் ஒளியில் அது நன்றாக தெரிந்தது.

''சந்தியா! நாயை நாம பின்தொடர்வோம்... என்று
டார்ச்லைட்டையும் தட்டிவிட்டபடி பின்தொடர்ந்தான்.
வேலிக்குள் குனிந்து உள் நுழையப் பார்த்த சந்தியா
வின் துப்பட்டா வேலிக்கம்பியில் சிக்கிக் கொண்டுவிட
திருட்டில் அவள் அதை எடுத்துவிட சிரமப்பட்டபோது
யாரோ வந்து எடுத்துவிட்டு உதவியது போல அந்த
துப்பட்டா விடுபட்டது.

''அப்பா...'' என்று அங்கேயே விசும்பத் தொடங்கி
விட்டாள். கண்ணன் திரும்பிப் பார்த்து டார்ச்லைட்டை
அடித்தான். அதை வைத்து அவனை நோக்கி ஓடினாள்.
நாயும் முன் சென்ற நிலையில் குறிப்பிட்ட ஒரு இடத்தில்
காலால் பறித்தபடி இருந்தது.

''சந்தியா... அந்த இடம்தான்.. பார், நாயே தோண்டிக்
காட்டறத...''

– சந்தியா கையில் டார்ச்லைட்டை கொடுத்துவிட்டு
அங்கே போய் தோண்டத் தொடங்கினான். மளமளவென்று
குழி உருவாகி மண் திப்பிகள் வெளியேறின.

கிட்டத்தட்ட ஐந்தடி ஆழத்துக்கு குழி தோண்டியும்
கண்ணனிடம் பெரிதாய் களைப்பில்லை. நாயும் ஆவலாக
பார்த்தபடியே நின்றது. சந்தியா அதையே தன் அப்பா
வாக நினைத்து மண்டியிட்டு அமர்ந்து வருடித் தந்தாள்.
அதற்கும் இதமாய் இருந்தது.

ஒரு கட்டத்தில் டண் என்று மண்வெட்டி கல் மேல் படும் சப்தம் கேட்டது. சிலை தட்டுப்பட்டுவிட்டது. கண்ணன் டார்ச்லைட் வெளிச்சத்தை உட்பக்கமாய் அடித்து சிலையை சந்தியாவோடு சேர்ந்து பார்த்தான். பின் வெயிட் லிஃப்ட் வீரனைப் போல தன்னைப் பாவித்துக் கொண்டு அந்த சிலையையும் தூக்கி வெளியே வைத்தான்.

அடுத்த நொடி சிலுசிலுவென்று மழை நீர் பொட்டுக்கள் சிந்தத் தொடங்கின. பின் ஓங்கலாகவே பெய்த மழை சிலையை அபிஷேகித்தது. அதிலேயே மண் திப்பிகள் கரைந்து உருவம் பரிபூர்ணமாக தெரிந்தது. சந்தியா பக்தியோடு கைகூப்பி வணங்கினாள்.

கண்ணன் ஒரே தம்மில் அதை தூக்கி தோள் மேல் வைத்தான். கிட்டத்தட்ட அறுபது எழுபது கிலோ எடை இருக்கலாம். பாரம் அழுக்க நடந்தான். வேலிக்கம்பிகள் வெளியில் வந்து மொபெட் ஸீட்டின் பின்புறம் சிலையை வைத்தான். மழை பெரிதாய் பெய்ய ஆரம்பித்துவிட்டது.

அதுவும் நல்லதற்குதான்.

தெருவில் நடமாட்டமே துப்புரவாக இருக்காது. காற்றுக்காக வாசலில் படுத்திருப்பவர்கள்கூட எழுந்து உள்ளே சென்றுவிடுவார்கள்.

நிலத்திலும் மழை நீர் தோண்டிப் போட்ட மண்ணை கரைத்து குழியை மூடிக்கொண்டிருந்தது!

மொபெட் மேல் இருந்த சிலையை சந்தியா பிடித்துக் கொள்ள, கண்ணன் வண்டியைத் தள்ளத் தொடங்கினான்.

நாய் முன்னால் ஓடியது.

துளியும் குழப்பமோ பயமோ இன்றி கண்ணன் நடந்தான். அந்த சிலையும் அந்த இரவில் ஊரைப் பார்த்தபடியே அவர்களைத் தொடந்தது!

✸

சிவன் கோயில்!

திரண்டுவந்த மழை காவலாளியை எழுப்பி கோபுர வாசல் கதவை திறந்துகொண்டு உள்ளே மண்டபத்துக்குள் செல்ல வைத்தது. மின்சாரம் வேறு இதுதான் சாக்கு என்று கட் ஆகிவிட, காவலாளி மழை நிற்கும் வரை பொறுத்திருப் போம் என்று மண்டபத்துக்குள் போர்வையால் உடம்பை மூடிக் கொண்டுவிட்டான்.

மொபெட்டில் கோபுர வாசல் வரை வந்துவிட்ட கண்ணனுக்கும் சந்தியாவுக்கும் கோபுர வாசல் கதவு திறந்திருப்பது ஒரு புது தெம்பை தந்தது. அப்படியே மொபெட்டோடு உள்ளே நுழைந்தனர்.

பளீரென்று ஒரு மின்னல்!

கிணறு இருக்கும் திசையை வினாடியில் காட்டி முடித்தது. கண்ணனும் மொபெட்டுடன் அந்த பக்கமாய் திரும்பினான். கிணற்றையும் நெருங்கினான். சிலையை சிரமப்பட்டு திரும்ப தோளுக்கு தூக்கினான். அப்போது வானில் ஒரு பெரிய இடி சப்தம். அது அவனுக்குள்ளும் அதிர்வை பாய்ச்ச, சிலை பொத்தென்று கிணற்றுக்குள் விழுந்து எழுந்து சப்தம் இடி சப்தத்தில் அமுங்கிப் போனது.

எல்லாமே திட்டமிடப்பட்டதுபோல நடந்து முடிந்தது தான் ஆச்சரியம். அதற்கு மேல் அங்கே நிற்காதபடி மொபெட்டில் மெல்ல வெளியில் வந்து பின் அதை ஓட்டிக் கொண்டு வீட்டு வாசலுக்கு வரவும், மின்சாரம் வரவும் சரியாக இருந்தது. மழையும் குறையத் தொடங்கிவிட் டிருந்தது.

மொபெட்டை அதற்குரிய இடத்தில் நிறுத்திவிட்டு உள்ளே சென்ற இருவரும் ஈரம் சொட்டச் சொட்ட சீனிவாசன் படத்தின் முன் நின்றனர்.

நடந்தது - நடந்து முடிந்தது எல்லாமே ஒரு கனவு போலதான் இருந்தது. எங்கேயோ இருந்த கண்ணன் நடு

இரவில் வந்து சந்தியாவின் வாழ்க்கைக்கே ஆதாரமாகவும் ஆகிவிட்டான். அவளுக்கும் ஒரு துணை தேவை என்பதை உணர்ந்து இறந்துவிட்ட பின்பும் தன் கடமையைச் செய்த சீனிவாசன் ஆத்ம சக்தியை என்னவென்று சொல்வது?''

✸

வெள்ளிக்கிழமை!

தொண்டிமுத்துவின் கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. கண்ணனும், சந்தியாவும் சீனிவாசன் படத்தை வணங்கிவிட்டுப் புறப்பட்டனர்.

காரும் ரெஜிஸ்திரர் ஆபீஸ் நோக்கி சென்றது.

வழியில் அழகப்பன், லட்சுமணன் இருவரையும் சாட்சி கையெழுத்துப் போட ஏற்றிக் கொண்டனர்.

லட்சுமணன், கண்ணனை ஒரு அதிசயப் பிறவியைப் போல பார்த்தார்.

''உங்கம்மாதானே வீட்டை விட்டு ஓடிப்போனவ?'' என்று தனக்கே உரிய பாணியில் கேட்டார்.

''உயிரோட இருந்த வரை உன்னால ஒட்ட முடியலை. சீனிவாசன் மண்டைய போடவும், சந்தியாவை வந்து பிடிச்சுட்டியாக்கும்?'' என்று அழகப்பனும் வார்த்தைகளில் வறுத்தெடுத்தார். இருவரும் எதுவுமே பேசவில்லை.

காருக்கு முன்னால் இரவில் வழிகாட்டிய அதே நாய்...

அந்த நாயையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் கண்ணன்.

ரெஜிஸ்திரர் ஆபீஸினுள் முதலில் அந்த நாய் நுழைய, பின்னாலேயே கார் நுழைந்தது. உள்ளே தொண்டிமுத்து தயாராக இருந்தார். ஒரு ஆச்சரியம்போல அருணாசல சாமியும் வந்திருந்தார்.

சந்தியாவிடம் போலியாக, ''உங்கப்பாக்கு இப்படி

ஒரு கதியான்னு நினைச்சு துடிச்சுப் போயிட்டேம்மா...'' என்றார்.

பத்திரங்கள் தயாராக இருந்தன.

தொண்டிமுத்துவின் பணம் அந்த ஆபீஸில் ஈ எறும்பைகூட வேலை வாங்கிக் கொண்டிருந்தது.

கண்ணனும் சந்தியாவும் மௌனமாகவே இருந்தனர். கையெழுத்து போடும் நேரம் வந்தது.

போட்டனர்.அ

தங்கள் வசம் உள்ள மூலப் பத்திரங் களையும் ஒப்படைத்தனர், தொண்டிமுத்துவும் பாக்கித் தொகையை ஒரு தோல் பையில் போட்டுக் கொடுத்தார்.

பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு தோல் பையை அவரிடமே திருப்பித் தந்தனர்.

பின்னர் புறப்பட்டனர்.

''கார்லயே ட்ராப் பண்றேன்...'' என்று சொன்னவரை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

வெளியே ஆட்டோ காத்திருக்க, அதில் ஏறிக் கொண்டனர். நாய் மட்டும் வரவில்லை.

சந்தியா திரும்பித் திரும்பி பார்த்தாள்.

''கண்ணன்! அந்த நாய்...'' என்றாள்.

''நாய் இல்ல அது... உனக்கு அப்பா, எனக்கு மாமா! நம்ம வேலை முடிஞ்சிடிச்சு. அவர் வேலையை அவர் முடிக்க வேண்டாமா?'' என்றான்.

''நீ என்ன சொல்றேன்னு பாதி புரியுது. மீதி புரியலை...''

''அது போகப் போகத்தானே எல்லாருக்குமே புரியப் போகுது.'' - சொல்லிவிட்டு கண்களைச் சிமிட்டியவன்,

"நேரா ஆஸ்பத்திரிக்கு போய் அம்மாவைப் பார்க்கறோம்" என்றான்.

ஆஸ்பத்திரி!

உள்ளே நுழையும்போதே ஆச்சரியம் காத்திருந்தது.

"உங்கம்மா கண் திறந்து பார்த்தாங்க... அனேகமா 15 நாளைல பேசிடுவாங்க..." என்றாள் நர்ஸ் ஒருத்தி.

அப்போது சந்தியாவின் செல்லுக்கு அழைப்பு வந்தது.

காதை கொடுத்தவள் அப்படியே விக்கித்தாள்.

"என்ன சந்தியா?"

"நீ சொன்ன மாதிரியே ஆயிடிச்சு."

'விவரமா சொல்லு..."

"அந்த தொண்டிமுத்து ரெஜிஸ்திரேஷன் முடிஞ்சு தன் கார்ல திரும்பிப் போகும்போது நாய் குறுக்க வரவும், டிரைவர் காரை ஒடிச்சி திருப்பினதுல எதிர்ல வந்த லாரி மேல மோதி..." - அதற்கு மேல் சந்தியா சொல்லவில்லை. கண்ணனே புரிந்துகொண்டான்.

அவன் புரிந்துகொண்டது அந்த ஆக்ஸிடெண்ட் எப்படி ஆகி யாரெல்லாம் இறந்திருப்பார்கள் என்பது மட்டு மல்ல, ஆத்மபலம் உள்ள சீனிவாசன் என்னும் அழகிய அப்பாவின் ஆத்ம சக்தியையும்தான்!

சந்தியா சிலிர்ப்போடு அவன் மேல் சாய்ந்துவிட் டிருந்தாள்!